மலேசிய சுதந்திர
தின சிறப்பிதழ்

புதன்கிழமை 31 ஆகஸ்ட் 2022

# தமிழருவி

அருவி: 02 | சாரல்: 33

தமிழின் தலைநிமிர்வு

65 ஆவது மலேசிய சுதந்திர தினம் ஆகஸ்ட் 31

## மக்கள் மனங்களில் வாழும் மலேயா கணபதி!




## உலகுக்கே உதாரணம் மலேசியா

## மலைக்க வைக்கும் மலேசியா

## மலேசியாவில் மகிழ்ச்சியான தருணங்கள்...

## திரைவானில் இருந்து ஓர் இளம் தாரகை

## காற்றில் கலந்து காதுகளை வருடிச்செல்லும் காந்தர்வக்குரல்

## முற்றத்து மல்லிகையாய் வாசம் வீசும் வெள்ளித்திரை முன்னோடி

# அரண்மனையில் பிறந்த சாமானியன்!

# பொருளாதாரத்தின் போக்கை மாற்றியமைக்கும் அடித்தளமாக வரவு - செலவு திட்டம் அமையும்

## பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் உரை

தேசிய பொருளாதார உபாயமொன்றை உருவாக்கும் படிக்கல்லாக 2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் இன்று சமர்ப்பித்தார். இதுவரை காணப்பட்ட பொருளாதார போக்கை மாற்றியமைக்கும் அடித்தளமாக இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டம் அமையும் என்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை விவகார அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பிற்பகல் இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இடைக்கால வரவு செலவுத் திட்டத்தினை சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி, அனைவரும் ஒன்றிணைந்து செயற்படாத வரை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்ள முடியாது என்று குறிப்பிட்டார்.

இந்த நெருக்கடியை வெற்றிகொள்வது அனைவரதும் பொறுப்பு என்ற வகையில் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளையும், சர்வக் கட்சி அரசாங்கத்தில் இணைந்துகொள்ளுமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீண்டும் அழைப்பு விடுத்தார்.

தனிப்பட்ட அரசியல் இலக்குகளை புறந்தள்ளிவிட்டு நாட்டினையும் தேசத்தையும் மீளக் கட்டியெழுப்பும் பணியில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.



இச்சந்தர்ப்பத்தை தவறவிட்டால் நாம் உலகத்தின் விழிம்பு நிலைக்குத் தள்ளப்படுவோம் என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

2022 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் முக்கியமான விடயங்கள்

★ கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் 20,000 ரூபாவிற்கு மேலதிகமாக மேலும் 2,500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவாக வழங்கப்படும்.

★ போஷாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட 61,000 குடும்பங்களுக்கு எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு மாதாந்தம் 10,000 ரூபா வழங்க நடவடிக்கை.

★ மண்ணெண்ணெய் விலை உயர்வால் பாதிக்கப்பட்ட சிறு மீன்பிடி படகு மீனவர்கள் மற்றும் மின்சார வசதியற்ற பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரணம்.

★ பொருளாதார நெருக்கடியினைக் குறைக்க சமூக ஸ்திரத் தன்மையை மீள நிர்மாணிக்க 133 பில்லியன் ஒதுக்கீடு.

★ சமுர்த்தி உதவி பெறும் 1.7 மில்லியன் குடும்பங்களுக்கு வழங்கப்படும் 5000 ரூபா கொடுப்பனவு 7500 ரூபாவாக அதிகரிப்பு.

★ சமுர்த்தி கொடுப்பனவுகளுக்காக காத்திருக்கும் 726,000 குடும்பங்களுக்கு தற்காலிகக் கொடுப்பனவாக 5,000 ரூபா உதவித் தொகை.

★ முதியோர் அங்கவீனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான 5,000 ரூபா கொடுப்பனவு 7,500 ரூபாவாக அதிகரிப்பு.

★ உதவிக்காக காத்திருக்கும் முதியோர், அங்கவீனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு தற்காலிக கொடுப்பனவாக 5,000 ரூபா வழங்க நடவடிக்கை.

★ அரசாங்க ஊழியர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு 5 வருட காலத்திற்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கப்படும்.

★ அரசாங்க மற்றும் அரச சார்பு ஊழியர்களின் ஓய்வூதியம் பெறும் வயது இவ்வருடம் டிசம்பர் 31 முதல் அமுலுக்கு வரும் வகையில் 60 ஆக குறைப்பு.

★ அரசு துறையின் பயன்பாட்டுக்காக எதிர்காலத்தில் மின்வலு கொண்ட வாகனங்கள் மாத்திரமே கொள்வனவு செய்யப்படும்.

பற்றாக்குறை ஏற்படாதவாறு எதிர்காலத்திலும் தேவையான சமயல் எரிவாயுவைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை.

★ 2 ஹெக்ரேயர் அல்லது அதற்குக் குறைந்தளவு நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு, விவசாயக் கடனை (31.05.2022 வரை) மீளச் செலுத்த முடியாத சுமார் 28,259 விவசாயிகளுக்கு கடன் சலுகை.

★ பங்களாதேஷ், இந்தியா, நேபாளம் உள்ளிட்ட வெளிநாட்டு மாணவர்களை ஈர்க்கும் வகையில் உயர் கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக தனியார் முதலீட்டை ஊக்கவிக்க ஆலோசனை.

★ மரக்கறி, பழங்கள், பூக்கள் மற்றும் தேயிலை உற்பத்திகளை கொழும்பிற்குக் கொண்டுவர சரக்கு ரயில் சேவையை மேம்படுத்த நடவடிக்கை. ஆரம்ப கட்டமாக, ஹாலி எல - கொழும்பு கோட்டை சேவை ஆரம்பிக்கத் திட்டம்.

★ புகையிரதத்துறையின் தரம் மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுக்காக தனியார் முதலீடுகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை.

எரிபொருள் பாவனையைக் குறைப்பதற்காக மின்சார துவிச்சக்கர வண்டிகளை உள்நாட்டில் தயாரிப்பதற்கு ஊக்குவிப்பு.

★ 2022 செப்டம்பர் 1ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படும் வகையில், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை அதிகரிப்பு.

# மாணவர் ஒன்றிய ஆர்ப்பாட்டத்தை கலைக்க நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம்

## 26 மாணவர்களும் பொலிஸாரினால் கைது



அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்ட பேரணியை நேற்று செவ்வாய் கிழமை பொலிஸார் இடைநடுவில் மறித்ததுடன், நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்து அதனைக் கலைத்தனர். இதனையடுத்து பேரணியில் ஈடுபட்ட 26 பேர் கைது செய்யப்பட்டனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளை தடுத்து நிறுத்துமாறும், கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்களை விடுதலை செய்யக் கோரியும் இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டம் மருதானை டெக்னிக்கல் சந்திக்கு அருகாமையில் ஆர்ப்பாட்டம் நெருங்கியபோது, கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில், பேரணியைக் கலைக்க, மருதானை - டீன்ஸ் வீதிப் பகுதியில் வைத்து ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டனர். இதனையடுத்து, அப்பகுதியில் பாரிய அமைதியின்மை ஏற்பட்டது.

இதனையடுத்து மொத்தமாக 26 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரவே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடன் மறுசீரமைப்புக்கு உதவுங்கள்:

# இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு ஜனாதிபதி ரணில் அவசர கடிதம்

சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் உடன்படிக்கைக்கு முன்னதாக கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை கடன் வழங்குநர்களுடன் தொடர்புகளை பேணி வருகிறது. இதற்காக இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு கடன் மறுசீரமைப்புக்கு உதவி கோரி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்திற்கு முன்னதாக, வெளிவிவகார அமைச்சு கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு இதே விடயம் தொடர்பாக மூன்றாம் நபர் குறிப்பையும் அனுப்பியுள்ளதாக அரசாங்க தரப்பு தெரிவித்துள்ளது. எனினும் இந்தியா இன்னும் உரிய பதில்களை வழங்கவில்லை

இந்தநிலையில் சீனாவின் 'யுவாங் வாங் 5' பயணத்திற்குப் பிறகு, இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஏற்கனவே ஆலோசனைக்காக புது தில்லிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். அதே நேரம் சீனாவுக்கும் இந்த கோரிக்கையை முன்வைத்து ரணில் விக்ரமசிங்க கடிதம் அனுப்பியுள்ளார். சீனாவும் இன்றும் உத்தியோகபூர்வ பதில்களை வழங்கவில்லை.

இந்தநிலையில் இலங்கையின் கடன் மீளமைப்பு நிலைத்தன்மை குறித்த கோரிக்கைகள் இன்னும சாத்தியமாகாத நிலையில் இலங்கைக்கு வந்துள்ள சர்வதேச நாணய நிதியம், இலங்கையில் இருந்து செல்லும் முன்னர் பணியாளர் உடன்பாட்டுக்கு இணங்கும் என்று அரசாங்க மற்றும் எதிர் கட்சிகளின் தரப்புக்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

# ஐ.நா. கூட்டத்தில்இலங்கை குறித்து வெளிவிவகார அமைச்சர் அறிக்கை!

## நீதி அமைச்சரும் விஜயதாச ராஜபக்சவும் ஜெனிவா பயணம்

ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான கலந்துரையாடலின்போது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51 ஆவது அமர்வு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் ஒக்டோபர் 7ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை தொடர்பில் எதிர்வரும் செப்டம்பர் 12 ஆம் திகதி கலந்துரையாடலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான இலங்கை தூதுக்குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமை தாங்கவுள்ளதோடு அன்றைய தினம் சபையில் அறிக்கை ஒன்றையும் முன்வைக்கவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் இந்தத் தூதுக்குழுவில் இணைந்து கொள்ளவுள்ளார்.

# உண்மையான தரவுகள் வெளிவரும் போது, வரவு செலவுத் திட்டத்தின் தரம் தெரிய வரும் சஜித் தெரிவிப்பு

உதவியற்ற தன்மைக்கு ஆளாகியுள்ளவர்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் கணக்கீடுகளுக்கு முற்றிலும் மாறுபட்ட கணக்கீட்டை யுனிசெப் நிறுவனம் மேற்கொண்டுள்ளதாகவும், எனவே சரியான தரவுகளின் அடிப்படையில் இந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா, இல்லையா? என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரையின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# பாண் ஒரு இறாத்தல் 300 ரூபாவாக அதிகரிக்கும்

சந்தையில் கோதுமை மாவுக்கான தட்டுப்பாடு நிலவுவதால் எதிர்காலத்தில் பாண் ஒரு இறாத்தல் 300 ரூபாவாக அதிகரிக்க நேரிடும் என அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.



டொலர் நெருக்கடியால் கோதுமை மா இறக்குமதியை நிறுவனங்கள் கட்டுப்படுத்தியதன் காரணமாக தற்போது 50 கிலோ எடை கொண்ட கோதுமை மா மூடையின் விலை 20,000 ரூபாவாக அதிகரித்துள்ளது.

கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக பல பேக்கரிகள் மூடப்படும் அபாயத்தில் உள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நம்பிக்கையை பெறுவதற்கு இலங்கை இன்னும் பலவற்றை செய்ய வேண்டும்

## ஐ.நா. வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர்- ஹம்டி

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு இலங்கையில் இன்னும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் - ஹம்டி இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்களுக்காக ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் குரல் கொடுக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தநிலையில் பாதிக்கப்பட்டவர்களின் தலைவிதியை காணவும், இழப்பீடுகளை வழங்கவும் குற்றவாளிகளை நீதிக்கு முன்கொண்டு வரவும் இலங்கை அதிகாரிகளை, ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் ஊக்குவித்து வருகிறது. வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள செய்தியில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இலங்கை முழுவதிலும் இருந்து காணாமல் போனவர்களின் பல குடும்பங்களை தான் சந்தித்துள்ளதாக ஹம்டி கூறியுள்ளார். அவர்களைப் பொறுத்தவரை, காணாமல் போனவர்களின் தலைவிதி குறித்த நிச்சயமற்ற தன்மை, வேதனையான உண்மையாகவே தொடர்கிறது.

அவர்கள் தங்கள் அன்புக்குரியவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற கேள்விக்கு இடைவிடாமல் பதில்களைக் கேட்கிறார்கள். பதில்கள் இல்லாமல், அவர்கள் ஒவ்வொரு நாளும் கஸ்டப்படுகிறார்கள், நம்பிக்கை மற்றும் விரக்திக்கு இடையில் அலைகிறார்கள். உண்மை மற்றும் நீதிக்கான அவர்களின் தேடலில், அவர்களும் அடிக்கடி பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஹனா சிங்கர்-ஹம்டி தெரிவித்துள்ளார்

2015 ஆம் ஆண்டு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையில் கையொப்பமிட்டதன் மூலம், இலங்கை அந்த திசையில் முதல் அடியை எடுத்தது. அத்துடன் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டதன் சூழ்நிலைகள் தொடர்பான உண்மையை அறியும் குடும்பங்களின் உரிமையைம் அங்கீகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலக அமைக்கப்பட்டமையானது, சரியான திசையில் மற்றொரு நடவடிக்கையாகும். எவ்வாறாயினும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களது நம்பிக்கையைப் பெறுவதற்கும், சர்வதேச தரத்திற்கு ஏற்ப அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான நம்பகமான செயல்முறைகளை வழங்குவதற்கும் இலங்கை அரசாங்கம் இன்னும் பல கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர்-ஹம்டி குறிப்பிட்டுள்ளார்.




**செய்தி:-**

நாட்டில் 79 பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள் இருக்கும் நிலையில் மேலும் 79 புதிய கட்சிகள் பதிவிற்காக விண்ணப்பித்துள்ளன.

-தேர்தல்கள் ஆணைக்குழு -

காடு பத்தி எரியக்குள்ள கரடி காவடியத்தூக்கி ஆடுன கத இது.

# இலங்கையில் 6 மாதங்கள் தங்குவதற்கான 5 வருடங்களுக்கு நுழைவு சுற்றுலா விசா

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக 6 மாதங்கள் தங்குவதற்கான 5 வருட நுழைவு சுற்றுலா விசாவை (5&year multiple&entry tourist visa with 06 months stay) 35 நாடுகளுக்கு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இதனை நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே உள்ள நடைமுறைகளின்படி இலங்கை வரும் உல்லாசப் பயணிகளுக்கு 30 நாள்களுக்கான வீசாவே வழங்கப்பட்டுவருகின்றது. பின்னா் அவா்கள் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்துக்கு சென்று அதனை நீடிக்க முடியும். அதற்கான கட்டணம் ஒன்றும் அறவிடப்படும்.

தற்போது அறிமுகப்படுத்தப்படும் நடைமுறையின்படி ஒரு வருட மற்றும் ஐந்து வருடங்களுக்கான விசாக்கள் நடைமுறைக்கு வரவுள்ளது. இது பல தடவைகள் வந்து செல்வதற்கான (multiple&entry) விசாவாகும். அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதால், வெகுவிரைவில் இது நடைமுறைப்படுத்தப்படும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான தீர்வாக அதிகளவு உல்லாசப் பயணிகளைக் கவா்ந்திழுக்கும் நோக்கத்துடனேயே இந்த புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

விசா நடைமுறைகள் இலகுவாக்கப்படுவதுடன், ஆறு மாத காலம் வரையில் தங்கியிருப்பதற்கான அனுமதி வழங்கப்படுவதால் இலங்கை வரும் உல்லாசப்பயணிகள் அதிக நாட்கள் தங்கியிருப்பார்கள் என்பதால் வெளிநாட்டு செலாவணியை அதிகளவுக்குப் பெற்றுக்கொள்ளலாம் என அரசாங்கம் திட்டமிடுகின்றது.

# சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக அமெரிக்கா இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும்!

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் தெரிவிப்பு

இணக்கப்பாட்டின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஊடாக அமெரிக்கா, இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் தெரிவித்துள்ளார்.

இலங்கையை சுபீட்சத்தை நோக்கி இட்டுச் செல்வதற்காக அமெரிக்கா வழங்கக்கூடிய ஒத்துழைப்புகள் தொடர்பில் கொழும்பில் (29) நடைபெற்ற அமெரிக்கா - இலங்கை வணிகப் பேரவையில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்களுக்கான நிதி உதவி, விவசாயிகளுக்கு உரம் மற்றும் விதைகள், அரச நிதி முகாமைத்துவத்தை வலுப்படுத்துவதற்கான கல்விப் பரிமாற்றம் மற்றும் பயிற்சி போன்றவற்றை இரட்டிப்பாக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் எனவும் ஜூலி சாங் இதன்போது தெரிவித்துள்ளார்.

# தேங்காய்க்கு தட்டுப்பாடு!

நாட்டில் தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதற்குத் தென்னை அபிவிருத்தி அதிகார சபையே பொறுப்பேற்க வேண்டும் என அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் அழைப்பாளர் புத்திக டி.சில்வா தெரிவித்துள்ளார்.

இரண்டு மாதங்களில் 2 மில்லியன் தேங்காய்களை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்வதால் எதிர்காலத்தில் சந்தையில் தேங்காய் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலப்பகுதி இலங்கையில் தேங்காய் உற்பத்தி குறைந்த காலப்பகுதியாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே தேங்காய்களை ஏற்றுமதி செய்வதால் எதிர்காலத்தில் சந்தையில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி புதுக்குடியிருப்பில் நேற்று மாபெரும் பேரணி

தமிழ் மண்ணில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்காக நீதி வேண்டி சர்வதேச விசாரணை கோரி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு நகரில் மாபெரும் கவனவீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இராணுவத்திடம் கையளித்து காணாமலாக்கப்பட்ட மற்றும் யுத்த காலப் பகுதிகளில் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு மற்றும் பல்வேறு வகைகளிலும் காணாமலாக்கப்பட்ட தங்களுடைய உறவுகளை தேடி வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 2009 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு தங்களுடைய போராட்டங்களுக்கு எந்தத் தரப்புக்களும் உரிய தீர்வுகளை வழங்காத நிலைமையிலே கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டங்களை ஆரம்பித்திருந்தனர். அவ்வாறு தொடர்ச்சியாக ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்ட நேற்று 2000 நாள்களைக் கடந்து அது தொடர்கின்றது.

உறவுகளை தேடி அலைந்து இவ்வாறு தொடர் போராட்டங்களில் ஈடுபட்ட சுமார் 140 தாய், தந்தையர்கள் உயிரிழந்துள்ள நிலையில் தங்களுக்கான நீதியை வலியுறுத்தி அவர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்புப் போராட்டமானது இன்று 2000 நாட்களைக் கடக்கின்ற நிலையில் சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினமாகிய நேற்று தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற நீதியான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் பாரிய அளவிலான மக்கள் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

வடக்கு - கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான போராட்டங்கள் நேற்றய தினம் முன்னெடுக்கப்பட்டன.

# கைப்பேசிகளின் விலை உச்சத்துக்கு உயாவு

300 நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியை தடை செய்ய அரசாங்கம் தீர்மானித்ததைத் தொடர்ந்து, பிரதான இறக்குமதியாளர்கள் அறிவித்த விலைக்கு இணங்க கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் உபகரணங்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை தொடர்பாடல் உரிமையாளர்கள் சங்கம் (ACCOA) தெரிவித்துள்ளது.

தற்போதைய கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் உபகரணங்களின் விலைகள் இதுவரை கண்டிராத அளவிற்கு உயரும் என அஇஇநஉஅ தலைவர் இந்திரஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

# பசுமை இயக்கத்தின் மாணாக்க உழவர் மாணவர்களுக்கான வீட்டுத்தோட்டப் போட்டி

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ‘மாணாக்க உழவர்’ என்ற பெயரில் மாணவர்களுக்கான வீட்டுத் தோட்டப் போட்டியொன்றை நடாத்துகின்றது. போட்டியில் பங்கேற்கும் மாணவர்களுக்கான செயன்முறை வழிகாட்டற் கருத்தமர்வும் விதைப்பொதிகள் விநியோகமும் எதிர்வரும் 03.09.2022 (சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு நல்லூர், சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் ஓய்வுநிலைப்பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன், விவசாய விஞ்ஞானி கலாநிதி எஸ். ஜே அரசகேசரி ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

நாட்டில் நிலவுகின்ற பொருளாதாரப் பிரச்சினை மற்றும் உணவுக்கான நெருக்கடி ஆகியனவற்றைக் கருத்திற்கொண்டு வீட்டுத்தோட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இப்போட்டி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்களை 01.09.2022 மாலை 5.00 மணிக்கு முன்பாக 0777969644 அல்லது 0741471759 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் அனைவருக்கும் ‘மாணாக்க உழவர்’ சான்றிதழ்களும், சிறந்த செய்கையாளர்களுக்கு விசேட பரிசுகளும் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் ஒலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733

## ஒற்றுமையே தேசத்தின் ஆன்ம பலம்

மலேசியாவானது இன்று தனது 65வது சுதந்திரதினத்தை கோலாகலமாக கொண்டாடுகிறது. இந்த வேளை இலங்கையின் சனத்தொகையில் 0.20 சதவீதமாக உள்ள அங்கீகரிக்கப்பட்ட மலே சமுகம் இலங்கையின் வளர்ச்சிப் பாதையில் வழங்கிய பங்களிப்பை இங்கு நினைவு கூருதல் பொருத்தமானது.

இலங்கையின் பேராதனைப்பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்திலும் தலைநகர் கொழும்பில் பிரசித்திபெற்ற முஸ்லிம் பாடசாலைகளுக்கு அடித்தளம் இட்டதிலும் மலே இனத்தவர்களுக்கு பெரும் பங்குண்டு.இலங்கையின் பாதுகாப்புத்துறையிலும் காவல்துறையிலும் அவர்கள் அவர்கள் சேவை குறிப்பிடத்தக்கது. சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இலங்கையை மிளிரவைத்த பெருமையும் அவர்களுக்கு உண்டு.

65 வருட சுதந்திரத்தில் மலேசியர்கள் நாட்டைக்கட்டியெழுப்பிய விதம் காலனித்துவத்துவத்தில் இருந்து மீண்டெழுந்த பல நாடுகளுக்கு முன்னுதாரணமாகும்.காலனித்துவ ஆட்சியாளர்கள் கையாண்ட பிரித்தாளும் தந்திரத்தை தேச விடுதலையோடு முளையில் கிள்ளியெறிந்த பெருமை சுதந்திர மலேசிய தேசத்தின் பிதாமகன்களை சாரும் .

இதமான தட்ப வெப்பமும். இயற்கைகொஞ்சும் அயன மண்டல மழைக்காடுகளும். நாடெங்கும் விஸ்தரிக்கப்பட்ட போக்குவரத்தும் உல்லாசப்பயணத்துறைக்கு உத்தரவாதமானது.

எல்லாவற்றிற்கும் அடிப்படை உறுதியான அரசியல் கட்டமைப்பாகும். அதுவே மலேசியர்களின் ஆன்ம பலமுமாகும். இது என்றும் நிலைத்திருக்க இன்றைய சுதந்திரத்தின் திருநாளில் மலேசியக்குடிமக்களுக்கு எமது வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

நன்றி: dailymirrir




# ஒற்றைக்கொம்பன் யானையின் தனிக்காட்டு இராஜாங்கம்

**பவித்திரா**



**2024** இறுதியில் நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்குவதற்கான திட்டம் ஒன்றும் ரணிலிடம் உள்ளதாகத் தெரிகின்றது. இந்தத் தேர்தலை ரணில் விரும்பினால் ஒரு வருடம் முன்கூட்டியே நடத்தவும் முடியும். அதற்கான அதிகாரம் ஜனாதிபதி என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்றது.

மொட்டுவின் பிதாமகரான மகிந்த ராஜபக்சவைப் பொறுத்தவரையில் தனது சகோதரர்களில் எவரையும் இன்னொரு ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்க அவர் தயாராகவில்லை. கோட்டாபயவுடன் பெற்றுக்கொண்ட அனுபவம் போதும் என அவர் நினைக்கிறார். பஸில் ராஜபக்சவுக்கு ஜனாதிபதிக் கனவு இருந்தாலும் அவரைக் களமிறக்குவது 'அரகலய' போராட்டத்தைவிட மோசமான நிலையை ஏற்படுத்திவிடும் என்பது மகிந்தவின் கணிப்பு. ஏனெனில் பஸில் மீதும் அதிகளவு குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இந்த நிலையில் அவரது தெரிவு அவரது 'இளவரசர்' நாமல் ராஜபக்ச தான். ஆனால், 2023 இல் அல்லது 2024 இல் நடைபெறக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் நாமலை களமிறக்க மகிந்த விரும்பவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றது. அரகலய போராட்டத்தின் சூடு தணியாத நிலையில் நாமலை களமிறக்குவது ஆபத்தானதாகிவிடலாம் என்பது முதலாவது காரணம். நாமலுக்கு மேலும் அனுபவம் – முதிர்ச்சி தேவை என்பது இரண்டாவது காரணம்.

ராஜபக்ச குடும்பத்தை சாராத ஒருவரை களமிறக்க முற்பட்டால் கட்சியையே இழக்க வேண்டிய நிலை வரலாம் என்ற அச்சமும் மகிந்தரிடம் உள்ளது. சுதந்திரக் கட்சியை மைத்திரியிடம் பறிகொடுத்தது இதில் அவருக்கு நல்ல அனுபவம். அதனால், ராஜபக்ச குடும்பத்தை சாராத எவரையும் மொட்டு கட்சியின் சார்பில் அவர் களமிறக்கமாட்டார்.

இவ்வாறான பின்னணியில் மீண்டும் ஒரு முறை ரணிலை ஜனாதிபதியாக்கி –ரணிலின் அடுத்த பதவிக்காலத்தின் முடிவில் நாமலை களமிறக்கலாம் என மகிந்தர் சிந்திப்பதாகத் தெரிகின்றது. தற்போது காணப்படும் அரசியல் சூழ்நிலையில் கட்சியைக் காப்பாற்றுவதற்கும், கட்சித் தலைமையை பாதுகாப்பாக தமது வாரிசான நாமலிடம் ஒப்படைப்பதற்கும் இவ்வாறான ஒரு உபாயத்துடன் தான் மகிந்த சிந்திப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் சண்டே டைம்ஸ் ஆங்கில வார பத்திரிகைக்கு மஹிந்த ராஜபக்ச வழங்கிய நேர்காணல் ஒன்றில் தற்போதைய நிலைமையில் நாட்டை வழி நடத்திக் கொண்டு செல்லக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க தான் என புகழாரம் சூட்டியிருந்தது கவனிக்கத்தக்கது.

கடந்த ஜூன் 9 ஆம் திகதி மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியைத் துறக்கும் வரையில் அதிர்ஸ்டற்ற ஒருவராகவே ரணில் கருதப்பட்டார். ஆனால், அதற்குப் பின்னர் சஜித் பிரேமதாசவின் தயக்கத்தின் காரணமாகவும், மாற்றமடைந்த அரசியல் நிலைமைகளாலும் ரணிலுக்கு வெள்ளி திசை ஆரம்பமாகியுள்ளது. பூஜ்ஜியத்திலிருந்து அவர் இராஜ்ஜியம் ஒன்றை அமைத்துக் கொண்டமைக்கு அதிஸ்ட்டம் மட்டும் காரணமல்ல. அரசியல் கள நிலைமைகளை புரிந்து கொண்டு அதற்கேற்ற அவரது நிதானமான காய்நகர்த்தல்களும் இதற்குக் காரணம்.

மிகுதி 24 ஆம் பக்கத்தில்...

> மீண்டும் ஒரு முறை ரணிலை ஜனாதிபதியாக்கி ரணிலின் அடுத்த பதவிக்காலத்தின் முடிவில் நாமலை களமிறக்கலாம் என மகிந்தர் சிந்திப்பதாகத் தெரிகின்றது. தற்போது காணப்படும் அரசியல் சூழ்நிலையில் கட்சியைக் காப்பாற்றுவதற்கும், கட்சித் தலைமையை பாதுகாப்பாக தமது வாரிசான நாமலிடம் ஒப்படைப்பதற்கும் இவ்வாறான ஒரு உபாயத்துடன்தான் மகிந்த சிந்திப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ராகுல் காந்தி நடைபயணத்தை ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்

## காங்கிரஸ், கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்பு



கன்னியாகுமரியில் வரும் செப்டம்பர் 7-ம் தேதி ராகுல் காந்தியின் நடைபயணத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்தவும், காங்கிரஸ் தொண்டர்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தவும் கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை 'பாரத் ஜோடோ யாத்ரா' (பாரதமே ஒன்றிணைவோம்) என்ற பெயரில் நடைபயணம் மேற்கொள்கிறார். செப். 7-ம் தேதி கன்னியாகுமரி காந்தி மண்டபம் முன்பிருந்து நடைபயணத்தை தொடங்கும் அவர், 12 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்கள் வழியாக மொத்தம் 48 நாட்கள் 3,700 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று காஷ்மீரை அடைகிறார்.

குமரி மாவட்டத்தில் மட்டும் 10-ம் தேதி வரை 4 நாட்கள் நடைபயணம் மேற்கொள்கிறார். 11-ம் தேதி காலை கேரளாவில் பயணத்தை தொடர்கிறார். தினமும் 18 முதல் 20 கிலோ மீட்டர் வரை அவர் நடைபயணம் மேற்கொள்ளும் வகையில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. முன்னதாக செப். 7-ம் தேதி காலை சென்னை வரும் ராகுல் காந்தி ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜிவ்காந்தி நினைவிடத்துக்கு சென்று மரியாதை செலுத்துகிறார்.

அங்கிருந்து ஹெலிகாப்டரில் கன்னியாகுமரி வரும் அவர், காந்தி மண்டபம் அருகே மாலையில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். இக்கூட்டத்தில் திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலினும் பங்கேற்கிறார். பின்னர், மகாத்மா காந்தி நினைவிடத்தில் தலைவர்கள் அனைவரும் மரியாதை செலுத்துகின்றனர்.

அங்கிருந்து ராகுல்காந்தியின் நடைபயணத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். நடைபயணத்தில் ராகுல் காந்தியுடன் காங்கிரஸ் கட்சியின் தேசிய, மாநிலத் தலைவர்கள் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.




# ஜெ.மரணம் தொடர்பாக சசிகலா மீது நடவடிக்கை எடுக்க ஆலோசனை

## தமிழக அமைச்சரவை முடிவு



ஜெயலலிதா மரணம் தொடர்பான ஆறுமுகசுவாமி விசாரணை ஆணையத்தின் அறிக்கையின்படி, வி.கே.சசிகலா, அப்போதைய சுகாதாரத் துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் மீது விசாரணைக்கு அரசு உத்தரவிட செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் மீது சட்ட வல்லுநர்களின் ஆலோசனைகளை பெற்று உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பின் விபரம் வருமாறு -

முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில், இரு முக்கிய விசாரணை ஆணையங்களின் அறிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 22.09.2016 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கான சூழ்நிலைகள் குறித்தும், அதைத் தொடர்ந்து 05.12.2016 அன்று அவரது மரணம் வரையிலும் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் தொடர்பாகவும் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் அ.ஆறுமுகசுவாமி விசாரணை ஆணையத்தால் 27.08.2022 அன்று அரசுக்கு அளிக்கப்பட்ட அறிக்கையும் அமைச்சரவையின் முன்வைக்கப்பட்டது. இவ்வறிக்கை குறித்து அமைச்சரவை விரிவாக விவாதித்தது. விசாரணை ஆணையத்தின் அறிக்கையை அமைச்சரவை பரிசீலித்து, அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வி.கே.சசிகலா, சிவகுமார், அப்போதைய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், அப்போதைய தலைமைச் செயலாளர் ராம மோகன ராவ் உள்ளிட்டவர்கள் மீது அரசு விசாரணைக்கு உத்தரவிட செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் மீது சட்ட வல்லுநர்களின் ஆலோசனைகளை பெற்று உரிய நடவடிக்கை எடுக்கவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொண்ட பின்னர், அதற்கான விபர அறிக்கையுடன், ஆணையத்தின் அறிக்கையை, தமிழ்நாடு சட்டப் பேரவையில் வைக்கவும் அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.

# இலங்கை கடற்படையினரின் அத்துமீறலுக்கு முடிவு கட்டவேண்டும்!

## அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்



இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 6 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கை கடற்படையினரின் தொடர் அத்துமீறலுக்கு முடிவு கட்டப்பட வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வங்கக்கடலில் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 6 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்யப்பட்டு தலைமன்னார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இலங்கை கடற்படையினரின் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

கடந்த இரு மாதங்களில் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது இது ஏழாவது முறையாகும். இவர்களையும் சேர்த்து 54 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 22 ஆம் திகதி 10 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், அடுத்த ஐந்தாவது நாளில் அடுத்த அத்துமீறல் நடந்துள்ளது.

ஒவ்வொரு முறை மீனவர்கள் கைது செய்யப்படும் போது தமிழகத்திலிருந்து எதிர்ப்பு எழுவதும், அடுத்த சில நாட்களில் மீனவர்கள் மட்டும் விடுதலை செய்யப்படுவதும் தொடர்கதையாகி விடக் கூடாது. மீனவர்கள் கைது செய்யும் இலங்கை கடற்படையின் அத்துமீறலுக்கு முடிவு கட்டப்பட வேண்டும்.

இப்போது கைது செய்யப்பட்ட 6 மீனவர்களையும், ஏற்கனவே சிறையில் வாடும் 10 மீனவர்களையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ள 95 படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

# கைதிகள் தயாரித்த சுற்றுச்சூழலுக்கு உகந்த விதைப்பந்து விநாயகர் சிலைகள்



மதுரை மத்திய சிறைச்சாலையில் உள்ள கைதிகள் சுற்றுச்சூழலுக்கு உகந்த விதைப்பந்து விநாயகர் சிலைகள் தற்போது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மதுரை மத்திய சிறையில் 1500-க்கும் மேற்பட்ட விசாரணை மற்றும் ஆயுள் தண்டனை கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆயுள் தண்டனை கைதிகள் தண்டனை காலம் முடிந்து, விடுதலையாகும் போது, அவர்களுக்கு சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்தும் விதமாக சிறை வளாகத்திற்குள் பல்வேறு தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் மூலம் பூந்தொட்டிகள், சிமெண்ட் கிராதிகள், மருத்துவ பேண்டேஜ், இனிப்பு வகைகள் போன்ற பொருட்களை கைதிகள் தயாரிக்கின்றனர். இப்பொருட்கள் சிறைத்துறை அங்காடி மூலம் விற்கப்படுகின்றன.

விநாயகர் சதுர்த்தியையொட்டி மதுரை சிறையில் விதவிதமான களிமண் விநாயகர் சிலைகளை ஆயுள் தண்டனை கைதிகளால் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. குறிப்பாக வேப்பு, வேங்கை உள்ளிட்ட நாட்டு மரங்களின் விதை பந்துக்களை களிமண் சிலைக்குள் வைத்து தயாரித்துள்ளனர். வீடுகளில் வைத்து வணங்கிய பிறகு, இச்சிலைகளை சிறிய நீர்நிலைகளில் கரைக்கும்போது, அதன் விதைகள் கரையோரத்தில் ஒதுங்கி மரமாக உருவாக வாய்ப்பு ஏற்படும் என்பதால் இம்முயற்சியை சிறைத்துறை நிர்வாகம் மேற்கொண்டுள்ளதாக கைதிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சிறை நிர்வாகம் கூறுகையில், "சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், நீர்நிலைகளை யொட்டி மரங்களை உருவாக்கும் நோக்கிலும் இம்முயற்சி மேற்கொண்டோம், சுமார் 500-க்கும் மேற்பட்ட விதைப் பந்து சிலைகள் சிறைத் துறை அங்காடி மூலம் விற்கப்படுகின்றன' என்றனர்.

# விநாயகர் சதுர்த்தி விழா இன்று தயாரான பிரமாண்ட சிலைகள்

விநாயகர் சதுர்த்தி விழா இன்று புதன்கிழமை கொண்டாடப்பட உள்ள நிலையில், சென்னையில் ஆங்காங்கே பிரதிஷ்டை செய்வதற்கு ஏற்ப பிரமாண்ட விநாயகர் சிலைகள் தயார் நிலையில் உள்ளன.

கொரோனா தொற்று வெகுவாக குறைந்துள்ள நிலையில் 2 ஆண்டுகளுக்கு பிறகு விநாயகர் சதுர்த்தி விழா இன்று புதன்கிழமை நாடு முழுவதும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. இதற்காக தமிழகம் முழுவதும் இந்து முன்னணி சார்பில் இன்றரை லட்சம் விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளன. சென்னையில் மட்டும் 5 ஆயிரத்து 501 சிலைகள் வைக்கப்பட உள்ளன.

கொரோனா தடுப்பூசி நாயகன் இந்து முன்னணி தவிர மேலும் பல்வேறு இந்து அமைப்புகள் மற்றும் தனிநபர்களும் ஆங்காங்கே பிள்ளையார் சிலைகளை பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்ய தயார் நிலையில் உள்ளனர்.

இதற்காக தமிழகம் முழுவதும் ஆங்காங்கே பிள்ளையார் சிலைகள் களிமண் மற்றும் 'பிளாஸ்டர் ஆப் பாரிசாலும்' செய்யப்பட்டு வருகின்றன. பொதுவாக விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படும்போது, அந்த நேரத்தில் நடைபெறும் பிரபலமான நிகழ்வுகளை மையப்படுத்தி விநாயகர் சிலைகள் தயாரிப்பது வழக்கம்.

2020 மற்றும் 2021-ம் ஆண்டுகளில் கொரோனா தொற்று பரவல் காரணமாக விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படாமல் இந்த ஆண்டு கொண்டாடப்பட உள்ளது. இந்தநிலையில் உலகம் முழுவதும் உள்ள மக்களை வாட்டி வதைத்த கொரோனா வைரசை கட்டுப்படுத்திய கொரோனா தடுப்பூசியை மையப்படுத்தி இந்த ஆண்டு கொரோனா தடுப்பூசி நாயகன் விநாயகர் புதுவரவு பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

கடந்த ஜூலை 28-ம் தேதி முதல் ஆகஸ்டு 9-ந் தேதி வரை சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் 40-வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி நடைபெற்றது. இதனை மையப்படுத்தி பிள்ளையாரும், முருகரும் செஸ் விளையாடுவது போன்ற சிலைகளும் புதுவரவு பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

# பாகிஸ்தானில் கடும் மழை உயிரிழப்பு 1,000 ஐ தாண்டியது



பாகிஸ்தானில் மழை, வெள்ளம் தொடர்பான விபத்தில் சிக்கி 24 மணி நேரத்தில் மட்டும் 119 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டி உள்ளது.

பாகிஸ்தானில் கடந்த ஜூன் மாதம் முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு ஜூன் 14 முதல் இதுவரை 388.8 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. இது வருடாந்திர சராசரியைவிட 190% அதிகம். இதனால், ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

பல்வேறு கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. 3.3 கோடி மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து 4.98 லட்சம் பேர் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் வழங்க தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், தொற்று ஏற்படாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

மழை, வெள்ளம் தொடர்பான விபத்தில் சிக்கி 24 மணி நேரத்தில் மட்டும் 119 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு தேசிய பேரிடர் நிர்வாக ஆணையம் (என்டிஎம்ஏ) தெரிவித்துள்ளது. இதன் மூலம் வெள்ளம் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,033 ஆக அதிகரித்துள்ளது. 1,527 பேர் காயமடைந்துள்ளனர்.

நாடு முழுவதும் உள்ள 9.49 லட்சம் வீடுகள் முழுவதுமாகவோ அல்லது ஒரு பகுதியோ சேதம் அடைந்துள்ளன. மேலும், 3,415கி.மீ. சாலைகள் சேதம் அடைந்துள்ளன. 149 பாலங்கள், 170 கடைகள் இடிந்து தரைமட்டமாகி உள்ளன. 7.19 லட்சம் கால்நடைகள் உயிரிழந்துள்ளன. இந்த தகவலை என்டிஎம்ஏ தெரிவித்துள்ளது.



# மாணவிகள் வெளிநாடு செல்ல ஆப்கன் தலிபான்கள் தடை!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் இருந்து படிப்பதற்காக வெளிநாடு செல்ல பெண்களுக்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்த அமெரிக்க படைகள் கடந்த ஆண்டு முழுவதுமாக திரும்பப் பெறப்பட்டன. இதையடுத்து, அமெரிக்க ஆதரவு பெற்ற அரசு கவிழ்ந்தது. தலிபான்கள் தலைமையிலான இடைக்கால அரசு செப்டம்பர் மாதம் பதவியேற்றது.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பொறுப்பேற்ற தலிபான் அரசு பெண்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது. குறிப்பாக வேலைக்கு செல்லவும் 6-ம் வகுப்புக்கு மேல் பெண் குழந்தைகள் பள்ளிக்கு செல்லவும் தடை விதித்தது.

வீட்டை விட்டு வெளியில் செல்லும் அனைத்து பெண்களும் தங்கள் முகத்தை மூடிக்கொள்ள வேண்டும், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் பூங்காக்களில் ஆண்கள் இருக்கும் போது பெண்களை அனுமதிக்கக் கூடாது. திரைப்படம், கேளிக்கை போன்ற நிகழ்ச்சிகளுக்கு செல்ல கூடாது போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

மேலும் பாலின அடிப்படையிலான வன்முறை தொடர்பாக புகார் செய்வதற்காக இருந்த நடைமுறைகளை தலிபான்கள் ரத்து செய்தனர். இதனால் பெண்கள் தங்கள் உரிமைக்காக போராட முடியாமல் போய்விட்டது. பெண்களுக்கு எதிரான இதுபோன்ற அடக்குமுறைகளுக்கு எதிராக பெண் உரிமை செயற்பாட்டாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த சூழ்நிலையில், படிப்புக்காக கஜகஸ்தான், கத்தார் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு செல்ல மாணவர்கள், மாணவிகள் பலர் திட்டமிட்டுள்ளனர். ஆனால், மாணவர்களுக்கு மட்டுமே இதற்கு அனுமதி வழங்கப்படுவதாகவும் மாணவிகள் படிப்புக்காக வெளிநாடு செல்ல அனுமதி மறுக்கப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# உலகின் பிரபலமான தலைவர்கள் பட்டியலில் பிரதமா நரேந்திர மோடி முதலிடத்தில்

## 75சதவீத மக்கள் ஆதரவு

அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் 'மார்னிங் கன்சல்ட்' என்ற சமூக வலைதளம் உலக அளவில் மக்களின் ஆதரவு பெற்ற பிரபல தலைவா'களின் பட்டியலை வாரந்தோறும் வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில் கடந்த 17 முதல் 23 ஆம் திகதி நிலவரப்படி உலக அளவில் மக்களின் ஆதரவு பெற்ற தலைவா்களின் பட்டியலை அந்த வலைதளம் வெளியிட்டுள்ளது. அந்த ஆய்வில் 75 சதவீத மக்களின் ஆதரவுடன் பிரதமர் மோடி முதலிடத்தில் உள்ளார்.

மெக்சிகோ ஜனாதிபதி ஆண்ட்ரூஸ் லோபஸ் ஒப்ரடாா' 63 சதவீதத்துடன் இரண்டாவது இடத்திலும், அவுஸ்திரேலிய பிரதமா' ஆன்டனி ஆல்பனேசி 58 சதவீத மக்களின் ஆதரவுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் 41 சதவீத மக்களின் ஆதரவுடன் 9 ஆவது இடத்தில் உள்ளார். பிரேஸில் ஜனாதிபதி ஜெயிர் பொல்சனரோவுக்கு 42 சதவீத மக்களும், ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடாவுக்கு 38 சதவீத மக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். கனடா பிரதமா' ஜஸ்டின் ட்ரூடோவுக்கு 39 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.



# டயானாவின் ஃபோர்டு கார் 30 கோடி ரூபாவுக்கு ஏலம்



பிரிட்டிஷ் இளவரசி டயானா பயன்படுத்திய கார் 30 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்டது.

பிரிட்டனின் பிரபுக்கள் பரம்பரையின் ஸ்பென்சர் குடும்பத்தை சேர்ந்த டயானா கடந்த 1981-ம் ஆண்டில் பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸை திருமணம் செய்து கொண்டார். கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 1996-ம் ஆண்டில் சார்லஸுடன் விவாகரத்து ஏற்பட்டது. கடந்த 1997 ஆகஸ்ட் 31-ம் தேதி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஏற்பட்ட கார் விபத்தில் டயானா உயிரிழந்தார்.

கடந்த 1985 முதல் 1988-ம் ஆண்டு வரை ஃபோர்டு எஸ்கார்ட் ஆர்எஸ் டர்போ வகையை சேர்ந்த காரை அவர் பயன்படுத்தினார். கடந்த 2008-ம் ஆண்டில் அந்த காரை தொழிலதிபர் ஒருவர் வாங்கினார். டயானாவின் 25-வது ஆண்டு நினைவு தினம் வரும் 31-ம் தேதி அனுசரிக்கப்பட உள்ளது.

இந்த நேரத்தில் அவர் பயன்படுத்திய ஃபோர்டு எஸ்கார்ட் ஆர்எஸ் டர்போ காரை சில்வர்ஸ்டோன் நிறுவனம் நேற்று முன்தினம் ஏலம் விட்டது. பிரிட்டனின் வார்விஷைர் நகரில் ஆன்லைனில் நடைபெற்ற ஏலத்தில் காரின் ஆரம்ப விலையாக 4 இலட்சம் ரூபா நிர்ணயிக்கப்பட்டது. உலகம் முழுவதும் இருந்தும் பலர் ஏலத்தில் பங்கேற்றனர். இறுதியில் பிரிட்டனை சேர்ந்த ஒருவர் சுமாா 30 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுத்தார். அவர் யார், எந்த பகுதியை சேர்ந்தவர் என்ற விவரத்தை ஏல நிறுவனம் வெளியிடவில்லை.

இதுகுறித்து ஏல நிறுவன வட்டாரங்கள் கூறியதாவது. கடந்த 1985-வது ஆண்டு ஃபோர்டு எஸ்கார்ட் ஆர்எஸ் டர்போ காரை இளவரசி டயானா வாங்கினார். அப்போது காரின் விலை ரூ.36 லட்சமாகும். இந்த கார் மணிக்கு 124 கி.மீ. வேகத்தில் சீறிப் பாயும். டயானாவுக்காக காரில் பல்வேறு பாதுகாப்பு அம்சங்களும் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 25,000 மைல்கள் மட்டுமே கார் ஓடியுள்ளது.

ஏலத்தில் டுபாய் மற்றும் பிரிட் டனை சேர்ந்தவர்கள் இடையே கடுமையான போட்டி இருந்தது. இறுதியில் பிரிட்டிஷ்காரர் காரை ஏலத்தில் எடுத்தார். இளவரசி டயானா பயன்படுத்திய கார் என்பதால் மிக அதிக தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஏல நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

# சீனாவுக்கு இந்தியா பதிலடி கொடுக்கும்

## அமெரிக்க கடற்படை தலைவர் கில்டே தகவல்

தனது ஆட்சிப் பரப்பை விரிவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் சீனாவுக்கு பதிலடி கொடுக்க, இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என அமெரிக்க கடற்படை தலைவர் கில்டே தெரிவித்துள்ளார்.

திபெத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சீனா, தைவானையும் ஆக்கிரமிக்க திட்டமிட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் தென்சீன கடல் பகுதியிலும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. தற்போது இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்துவதற்காக, விமானம் தாங்கி கப்பல்களை தயாரித்து வருவதுடன் 'நீல நீர்கடற்படை'யையும் சீனா உருவாக்கி வருகிறது.

மேலும், இலங்கைக்கு அனுப்பிய உளவு கப்பல் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதனால், கப்பலை வாபஸ் பெற்ற சீனா, தற்போது இந்திய பெருங்கடல் பகுதியில் அதை அனுப்பியிருப்பதாக தகவல்கள் வந்துள்ளன.

இந்நிலையில், அமெரிக்க கடற்படை தலைவர் கில்டே, வாஷிங்டனில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் இந்தியா தொடர்பான கேள்விக்கு அளித்த பதிலில் கூறியதாவது:

பிற நாடுகளைவிட இந்தியாவுக்கு நான் அடிக்கடி பயணம் செய்துள்ளேன். ஏனென்றால், வரும் காலத்தில் அமெரிக்காவின் சிறந்த கூட்டாளியாக இந்தியா விளங்கும் என கருதுகிறேன்.

இமயமலைப் பகுதியில் (லடாக்) இந்தியா, சீனா இடையே எல்லை தொடர்பான மோதல் நிலவுகிறது. இதன்மூலம் சீனாவுக்கு இருமுனை பிரச்சினையாக இந்தியா இருந்து வருகிறது. எனவே, வரும் காலத்தில் இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவுக்கு பதிலடி கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், இதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்கா, ஜப்பான், இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய 4 நாடுகள் இணைந்து 'குவாட்' அமைப்பை நிறுவி உள்ளன. குவாட் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கூட்டம் டோக்கியோவில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்றது.

இதுகுறித்து அமெரிக்க பாதுகாப்புத் துறை முன்னாள் உயர் அதிகாரி எல்பிரிட்ஜ் கால்பி கூறும்போது, தைவான் விவகாரத்தில் நடைபெறும் உள்நாட்டுப் போரில் இந்தியா நேரடியாக பங்கேற்காது. ஆனால் இமயமலைப் பகுதியில் சீனாவின் கவனத்தை இந்தியா ஈர்க்கும். இதற்காக தெற்கு ஆசியாவில் இந்தியா வலிமையுடன் இருக்க வேண்டும் என அமெரிக்காவும் ஜப்பானும் விரும்புகின்றன. அப்போதுதான் சீனாவுக்கு 2-வது முனை பிரச்சினையாக இந்தியா இருக்கும் என்றார்.




யாருக்குத்தான் பிடிக்காது? வித்தியாசமான கலாச்சாரம், வித்தியாசமான உணவு, வித்தியாசமான தோற்றம் கொண்ட மனிதர்கள், வித்தியாசமான நடை, உடை, பாவனை என்று வித்தியாசமான உலகத்திற்கு நம்மை அழைத்துச் செல்பவைதான் இந்தப் பயணங்கள்...

# மலேசியாவில் மகிழ்ச்சியான தருணங்கள்...




## சுவர் அல்ல பாலங்கள்

கொரோனாத் தாக்குதல் படையெடுப்பிற்கு முன்னர் நான் பயணஞ் செய்த நாடுதான் இந்த மலேசியா. ஒரு சுதந்திர நாடு எப்படியான காற்றைச் சுவாசிக்கின்றது என்பதை அங்கு வாழ்கின்ற மக்கள் முகங்களில் காணமுடிந்தது. தன்னிறைவு பெற்ற நாடாக மலேசியா திகழ்வதை என்னால் உணர முடிந்தது. வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பது நன்றாகவே தெரிகின்றது..

1957ம் ஆண்டு ஆகஸ்ட் 31ம் திகதி மலேசியா சுதந்திரம் அடைந்தது .இந்த வருடம் அது தன் 65வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்றது. 1963ம் ஆண்டு ஆகஸ்ட் 31ஆம் திகதி, மலேசியா என்ற நாடு உருவானதை நினைவுகூரும் 'தேசிய விடுமுறை நாள்' [மலாய் மொழியில் [Hari Merdeka] அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த நாடு பல இன, கலாச்சார மற்றும் மதங்களைக் கொண்ட நாடு! சுவர்களை அல்ல பாலங்களைக் கட்டுங்கள் என்று ஒரு தடவை கத்தோலிக்க ஆயர்கள் நாட்டு மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி ஒரு மக்களிடையே செய்தி பரப்பி இருந்தார்கள். மலேசியாவின் ஏறக்குறைய 3 கோடியே 20 இலட்சம் மக்கள் தொகையில் 4 விழுக்காட்டினர் மட்டுமே கத்தோலிக்கர். 60 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் முஸ்லிம்கள்.

## ஜென்டிங்க் ஹைலேண்ட்

இரண்டு தடவைகள் மலேசியா பயணித்திருந்தாலும், முதற்தடவையாக நான் சென்ற ஜென்டிங்க் ஹைலேண்ட் என்ற மலைப்பிராந்தியத்தின் அழகை எப்படி வர்ணிப்பது என்று நான் திணறுகிறேன். அத்தனை அழகு இங்கே கொட்டிக்கிடக்கின்றது. சுதந்திரமாக வீசும் சுத்தமான, சுகமான, இதமான மலைக்காற்றை இங்கு நீங்கள் நிறையவே சுவாசிக்கலாம்.

சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் புதிதாக உருவானவை. அவைகளுக்குப் பெரிய





சரித்திரம் கிடையாது. ஆகவே அங்கு புராதன கலாச்சார சின்னங்கள் என்று சொல்வதற்கு பெரிதாக ஒன்றும் இல்லை. ஆனால் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக அவர்கள் பலவகையான உத்திகளைக் கடைப் பிடிக்கிறார்கள்.

ஜென்டிங்க் ஹைலேண்ட் என்று சொல்லப்படும் இடம் ஒரு மலை மேல் உண்டாக்கப்பட்ட ஒரு பொழுது போக்குத் தளம். அமெரிக்காவில் இருக்கும் டிஸ்னிலேண்ட் போல ஓர் இடம். முழுவதும் தனியார் முதலீட்டில் உருவாக்கப்பட்ட இடம். உள்ளே போனால் நாம் இந்த உலகத்தில்தான் இருக்கிறோமா என்ற சந்தேகம் வரும். இந்த மாதிரி விளையாட்டுத் தளங்களுக்கே உரித்தான அத்தனை விளையாட்டுகளும் இங்கே இருக்கின்றன. கீழிருந்து மலை மேல் போய்வர கேபிள் கார் வேலை செய்துகொண்டே இருக்கிறது. சுமார் 20 நிமிடம் பயணம் செய்து மலை உச்சியை அடையவேண்டும்.இங்குள்ள First World Hotel மொத்தம் 6500 அறைகள் கொண்டது என்று சொன்னார்கள். ஆயிரம் பேர் ஒன்றாகச் சாப்பிடக்கூடிய டைனிங்க் ஹால் இருக்கிறது.

பிரேசிலின் பிரபல்யமான மழைக்காடுகளை, இந்த மலை உச்சியிலிருந்தும், கீழே பார்க்க முடிந்தது. சுத்தமான மலைக் காற்று உடம்பை இதமாக வருடிச்செல்ல, இயற்கை அழகி எம்மை மலைக்க வைத்தது.

கேபிள் கார் பயணம், சுவிற்சர்லாந்து பயணங்களை ஞாகப்படுத்தியது. இடடிண குதீனுனு குகைக் கோயில் என்ற கேபிள் தரிப்பிடத்தில் இறங்கி இந்த குகைக் கோயிலைப் பார்க்க முடிந்தது. இந்த மலை உச்சிக் காட்சிகள் , இரண்டு கண்களால் பார்க்க முடியாத கொள்ளை அழகு என்றுதான் இப்பொழுதும் சொல்லத் தோன்றுகின்றது.

## பெட்ரொனாஸ் இரட்டைக் கோபுரம்

இந்தக் கோபுரம்தான் மலேசியாவின் அடையாளமாக எல்லா சுற்றுலாக் கம்பெனிகளாலும் காட்டப்படும் சின்னம். இது மலேசியாவின் பெட்ரோல் கம்பெனியாரால் கட்டப்பட்டது. மலேசியாவின் இயற்கை வளங்களில் மிகவும் முக்கிய



மானது பெட்ரோல். இங்கு கிடைக்கும் பெட்ரோல் நல்ல தரமுடையது.

ஓட்டல்களில் தங்கும்போது சில குறிப்புகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். எங்கும் துணி துவைக்க அனுமதி இல்லை. படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் இவற்றில் கறைகள் ஏற்பட்டால் அவற்றிற்கு தனியாக கட்டணம் அறவிடுவார்கள். எல்லா ஓட்டல்களிலும் வெந்நீர் 24 மணி நேரமும் கிடைக்கும். ஆனால் ஒவ்வொரு ஓட்டலிலும் குழாய்கள் [பைப்புகள் ] ஒவ்வொரு மாதிரி இருக்கும். விவரம் தெரியாமல் வெந்நீர்ப் குழாயைத் திறந்துவிட்டு கீழே நின்றால் உங்கள் உடல் வெந்துபோகும் வாய்ப்பு உண்டு. ஆகவே குழாய்கள் எப்படி வேலை செய்கின்றன என்று பார்த்துவிட்டு உபயோகிக்கவேண்டும். புரியாவிட்டால் பணியாளர்களை அழைத்து தெரிந்து கொள்ளவும். இதில் கூச்சம் வேண்டியதில்லை.

## உயர்ந்த முருகன் கோவில் தரிசனம்

உலகிலேயே மிக உயரமான முருகன் சிலை மலேசியா நாட்டின் பத்துமலையில் Batu Caves தான் அமைந்துள்ளது. Batu என்பது கற்பாறையைக் குறிக்கும் மலேசியச் சொல். மலேசியாவில் அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள் மட்டுமின்றி, சீனர்களும் வந்து வழிபடக்கூடிய கோயில்களில் பத்துமலைக் குகை முருகன் கோயிலும் ஒன்று. இந்தக் கோயில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரை அடுத்து 13 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருக்கிறது

மலேசியாவில் அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள் உள்ளனர். தமிழர்கள் மட்டுமின்றி சீனர்களும் வந்து வழிபடக்கூடிய கோவிலாக உள்ளது. இந்தக் கோயில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரை அடுத்து 13 கிலோ மீட்டர்



தொலைவில் இருக்கிறது. இங்குள்ள முருகப் பெருமான் சுப்பிரமணிய சுவாமி என்று அழைக்கப்படுகிறார்.

இந்தக் குகைக்கோவிலின் உள்ளே பல குகைகள் உள்ளன. சுண்ணாம்புக் குன்றுகளுக்கு அருகில் செல்லும் பத்து ஆற்றின் பெயரிலிருந்து பத்துமலை எனும் சொல் உருவாகியுள்ளது. இங்குள்ள சுண்ணாம்புக் குன்றுகள் 40 கோடி ஆண்டுகள் பழைமை வாய்ந்தவை.

மலேசியாவின் பத்துமலையிலுள்ள சிறிய குகையில் வேல் மாதிரி உருவம் கற்பாறையில் தெரிவதைக் கண்ட ஒரு தமிழ்ப் பக்தர் ஒரு மூங்கிலை நிறுவி அதை வேலாகக் கருதி வழிபட்டு வந்தார். பிறகு உலோகத்திலான வேல் நிறுவப்பட்டு முருகப் பெருமானுக்கு ஆலயம் அமைக்கப்பட்டது என்கிறார்கள். தமிழகத்தில் நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள திருமலைராயன் பட்டினத்தைச் சேர்ந்த காயோராகணம் பிள்ளை மலேசியாவில் குடியேறி நிறைய சம்பாதித்து இறைபணிகளுக்காகவும் செலவழித்தார். இவர் 1890–91 ஆண்டுகளில் பத்துமலைக் குகை முருகப் பெருமானுக்கும் ஆலயத்தை கட்டியிருக்கிறார். ஆரம்பக் காலத்தில் முருகனைத் தரிசிக்க கரடுமுரடான பாதையில் செல்ல வேண்டியிருந்தது. அதன் பின்பு 1938 ஆம் ஆண்டில் இந்த மலைக் கோயிலுக்குச் செல்ல 272 படிக்கட்டுகளைக் கொண்ட மூன்று நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வழிகளைப் பயன்படுத்தி தரையிலிருந்து 400 அடி உயரத்தில் உள்ள கோவிலுக்குச் சென்று சுப்பிரமணிய சுவாமியான முருகப் பெருமானைத் தரிசித்து வரலாம்.

கோவிலின் நுழைவு வாயிலின் அருகில் தங்கம் போல் தகதகவென மின்னும்படியாக வர்ணம் பூசப்பட்ட மிகப்பெரிய முருகன் சிலை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முருகன் சிலைக்கு 300 லிட்டர் தங்கக் கலவை பயன்படுத்தப்பட்டது. மிகப்பெரிய வேல் வலது கையில் தாங்கி நிற்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சிலையின் உயரம் 42.7 மீட்டர், அதாவது 140.09 அடி கொண்டது. இந்தச் சிலை அமைக்க 2003 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட பணி 2006 ஆம் ஆண்டில்தான் நிறைவு பெற்றது. சிலை அமைக்க 2006 ஆம் ஆண்டில் இந்திய மதிப்பில் 2 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவாகி இருக்கிறது.

## சிறப்புகள்:

மலாய்க்காரர்கள் எனப்படும் இசுலாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வழிபடுவதில்லை என்றாலும் இக்கோவிலையும், இங்குள்ள மிகப்பெரிய முருகன் சிலையையும் சுற்றுலாவாக வந்து பார்த்து வியந்து செல்கின்றனர்.

உலகின் மிகப் பெரிய முருகன் சிலை கோவிலை தமிழ் நாட்டை சேர்ந்த சிற்பி உருவாக்கம் கண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

நம் தமிழர்கள் நமது நாட்டில் மட்டுமல்லாமல் தமிழ் கடவுளான முருகனுக்கு அயல் நாடுகளிலும் ஆலயம் எழுப்பி பெருமை சேர்த்துள்ளனர்.

இன்னும் பல அனுபவங்களை இன்னொரு தடவை பகிர்ந்து கொள்வோம்.



புஸ்பராசா
கோபிகா



# மக்கள் மனங்களில் வாழும் மலேயா கணபதி!

மலேசியாவானது பிரித்தானியரின் காலனித்துவத்திற்கு உட்பட்டிருந்த காலப்பகுதியில் பிரித்தானியரின் பிடியிலிருந்து மலேசியாவை விடுவிக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட இந்தியாவின் தமிழ்நாட்டை பூர்விகமாகவும்,மலேசியாவை தேசியமாகவும் கொண்ட தொழிற்சங்க போராட்டவாதியும், சமூகநீதி செயற்பாட்டாளருமான எஸ்.ஏ.கணபதி என்பவர் தனது இன்னுயிரை தியாகம் செய்து தனது நாட்டிற்கு விடுதலை பெற்றுக்கொடுத்த மாபெரும் புரட்சித்தலைவராவார். அந்நாட்டின் சுதந்திரதினத்தில் அவரை நினைவு கூருதல் என்பது சாலப் பொருத்தமாகும்.

இந்தியாவின் தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்தின் தம்பிக்கோட்டையைச் சேர்ந்த ஆறுமுகம் – வைரம்மாள் ஆகியோருக்கு மகனாக 1912ம் ஆண்டு பிறந்த இவர் தன்னுடைய 10 வது வயதில் மலேசியாவிற்குச் சென்றார்.தனது பள்ளிப்படிப்பை அங்கேயே மேற்கொண்டார். சிறுவயது முதலே போராட்டகுணம் கொண்டவராக காணப்பட்டார்.ஆங்கிலம்,சீனம்,மலாய் உள்ளிட்ட பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவராக இருந்த அவர் மலேசியாவில் ( அன்று மலேயா என அழைக்கப்பட்டது) பிரித்தானிய காலணித்துவ ஆட்சியில் சாதாரண உழைக்கும் மக்கள் எதிர்நோக்கும் துயர்களை கண்டு மனவேதனை அடைந்தார். அந்நிலையில் கணபதியும், வீரசேனனும் மலேசியா மற்றும் சிங்கப்பூரில் தொழிலாளர்களை பெருமளவில் ஒன்றிணைத்து அடிப்படை தொழிலாளர் உரிமைக்கான பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தார்.மேலும் இந்திய விடுதலைப் போராட்டத்திலும் தங்களை இணைத்துக் கொண்டு நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்திலும் பங்குபற்றினர். அதைத்தொடர்ந்து 1946ம் ஆண்டு முதல் நாடு முழுவதிலும் தொழிற்சங்கப் பொதுக்கூட்டங்களை நடத்தியதுடன் தங்கள் கோரிக்கைகளையும் முன் வைத்தனர்.



ஜனநாயகம்

1. எட்டுமணி நேர வேலை
2. எட்டுமணி நேர ஓய்வு
3. எட்டுமணி நேர நித்திரை
4.கூலி என அழைக்காமல் தொழிலாளர் என அழைத்தல்.
5.மே1 தொழிலாளர் தினத்தில் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு ஒரு நாள் ஊதியத்துடன் விடுமுறை
6.சம்பள உயர்வு

போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி நடந்த போராட்டங்களில் தொழிற்சங்க உதவியுடன் தொழிலாளர்களுக்கு வெற்றியும் கிடைத்தது. இந்த எழுச்சிக்கு பிறகு தொழிற்சங்கத்தின் குரல்கள் ஆங்காங்கே சத்தமாக ஒலிக்கத் தொடங்கியது. ஆங்கிலேய முதலாளிகளுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கம் போராட்டத்தில் இறங்கியது. இதனால் அசௌகரியம் அடைந்த ஆங்கிலேய அதிகாரிகள் தொழிற்சங்கவாதிகளை குறிவைத்தனர்.தொழிற்சங்கங்களுக்கும்,கம்யூனிச கட்சிக்கும் பெரும் தொடர்பு இருப்பதாக கருதிய ஆங்கிலேய அரசும் தோட்ட நிர்வாகங்களும் தொழிற்சங்கவாதிகளை கண்காணிக்கத் தொடங்கினர். கம்யூனிச கட்சியின் பலத்தோடு இயங்குவதாக கருதப்பட்ட தொழிற்சங்கம் மற்றும் தொழிற்சங்கவாதிகளை பொலிஸ் தொடர்ந்து கண்காணிக்கத் தொடங்கியது. தொழிற்சங்க அலுவலகங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் தொழிற்சங்கவாதிகள் தடுத்தும் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் தொழிலாளர் சங்கத்திற்கு தலைவராக இருந்த கணபதி 1949ல் மார்ச் மாதம் 1ம் திகதி அராங்- ரவாங் அருகாமையில் இருந்த 'வாட்டர்பால்' தோட்டத்தில் துப்பாக்கியும் ஆறு வெடிமருந்துகளும் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்டார்.அன்றைய காலகட்டத்தில் நாட்டில் அவசரகாலச்சட்டம் அமுலில் இருந்தது.அதோடு ஆயுதம் வைத்திருப்போர் மீது கடும் நடவடிக்கைகளை ஆங்கிலேய அரசு மேற்கொண்டிருந்தது. 'தாம் அதை கையளிக்கவே காவல் நிலையம் நோக்கி வந்து கொண்டிருந்தேன்.' என்ற கணபதியின் வாக்குமூலத்தை ஆங்கிலேய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.



HANGING IN MALAYA

Revolver Carried On Rubber Estate

SINGAPORE, May 4: An Indian named Ganapathy, former president of the Pan-Malayan Federation of Trade Unions, was hanged at the Pudu Gaol, Kuala Lumpur, this morning. He was sentenced to death on a charge of having been in unlawful possession of a revolver and ammunition on a rubber estate in Selangor. The sentence was confirmed by the Selangor Executive State Council after his appeal had been dismissed by the High Court. He is the first Indian to be hanged under the emergency regulations.

One Malay and one Chinese were killed when terrorists ambushed several vehicles in



இந்தியா,பிரிட்டன் ஆகிய நாடுகளின் தொழிற்சங்க இயக்கங்களும்,உலகத் தொழிலாளர் சம்மேளனும் அவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தன. கணபதி கைது செய்யப்பட்டதன் பின் இந்திய மக்களிடையே அமைதியற்ற சூழல் நிலவியது.சுபாஷ் சந்திரபோஷ் பரிந்துரையில் இந்திய பிரதமரான நேரு இவ்விவகாரத்தில் தலையிட்டு கணபதிக்கு அளிக்கப்பட்ட மரணதண்டனை நிறுத்தப்பட வேண்டும் என பிரிட்டனுக்கான இந்திய தூதுவர் வி.கே.கே கிருஸ்ணன் மூலமாக கோரிக்கை விடுத்தார். டெலிகிராம் மூலம் அனுப்பப்பட்டதாக கூறப்படும் இக்கோரிக்கைக்கு இதுவரை எந்தவொரு ஆதாரமும் இல்லை என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

தண்டனைக்கு எதிராக கணபதி மேல்முறையீடு செய்தார். அதில் அவருக்கான தூக்கு தண்டனை உறுதிசெய்யப்பட்டது.அவருக்கு விதிக்கப்பட்ட தூக்குதண்டனைக்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. முதலில் நிறுத்திவைப்பதாக அறிவிக்கப்பட்டு பின்னர், கணபதிக்கு 04.05.1949 இல் தூக்குதண்டனை நிறைவேற்றப்பட்டது. தண்டனை நிறைவேற்றப்பட முன் சிறையில் இருந்த தொழிலாளர்களிடத்தில் தமிழிலும், சீன மொழியிலும் ஆவேசத்துடன் உணர்வு பொங்க பேசினார். அதில்,'மலேய நாட்டு மக்களின் தன்னாட்சி விடுதலைக்கும், பாட்டாளி மக்களின் பொருளாதார சமத்துத்திற்கும், ஆங்கிலேய ஆட்சியாளர்களின் ஆதிக்கக் கொடுங்கோன்மை ஆட்சியை அகற்றவும்.' என உரத்த குரலில் தொழிலாளரின் கீதத்தைப் பாடினார். கணபதி மெல்ல புன்னகைத்த படி, ' மலேயா மண் மாற்றாரிடமிருந்து விடுதலை பெறட்டும்! மலேயா நாட்டுத் தொழிலாளர் வர்க்கம் வெற்றி காணட்டும்! மலேயா நாட்டு மக்களுக்குப் புதிய வாழ்வு மலரட்டும்! மலேயாவில் மட்டுமல்ல உலகின் எந்தவொரு பகுதியிலும் அடிமைக் கொடுமைக்கு முடிவு விரைந்து கிடைக்கட்டும்! இதுவே என் இறுதியான,உறுதியான விருப்பம். வாழ்க வையகம் என்று உணர்ச்சி பொங்க பேசினார்.




20ம் நூற்றாண்டில் வெளிநாட்டில் அரசியல் காரணத்திற்காக தூக்கிலிடப்பட்ட முதல் தமிழர் கணபதி ஆவார். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பல அழுத்தங்களையும் தாண்டி அறிவிப்புக்களை வெளியிடாமல் அவரைத் தூக்கிலிட்டதிலிருந்தே அவர் எந்தளவிற்கு ஆட்சியாளர்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தார் என்பதை தெரிந்து கொள்ளலாம். அதனாலே பாரதியார்,

மாமனிதர் கணபதிக்கு மறைவு ஏது?
காரிருளால் சூரியன் தான் மறைவதுண்டோ?
கரை சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மை தான் இன்மையாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிப்பதுண்டோ?
நேர் இருத்தித் தீர்ப்புரைத்துச் சிறையில் போட்டால் நிறை தொழிலாளர்களுணர்வு மறைந்து போமோ?

என்று கணபதியின் வீரத்தையும், புகழையும் மெச்சிக் கவி வரைந்தார்.

மலேயா கணபதி என அழைக்கப்படும் இவர் தொழிலாளர்கள் உரிமைக்காக தன்னுயிரை துச்சமென கருதி போராடி உயிர்த்தியாகம் செய்தார். இவரது இந்த செயல் தமிழ் மக்கள் மனங்களில் என்றும் அழியாது நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இனிவரும் சந்ததிகளுக்கும் மாவீரன் கணபதியின் வீரத்தை அறிய செய்வதே அவரது தியாகத்திற்கு தமிழ் மக்கள் செலுத்தும் நன்றியும்,மரியாதையும் ஆகும்.




# நாசியைக் கட்டிப்போடும் நாசி லெமாக்!





பிரமிளா நாகேஸ்வரராஜா

செயற்கை அழகை மீறிய ஓர் இயற்கையான அழகு மலேசிய தீப கற்பத்துக்கு இருக்கிறது. மலேசியா என்கிற தேசம் எப்படி பரந்துபட்டதோ, எப்படி பல வகைமை கொண்ட கலாச்சாரங்களையும் ஒரே இடத்தில் கொண்டிருக்கிறதோ அதே போல உணவு வகையிலும் எண்ணிலடங்காத வகைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. மலாய் மக்களின் தன்னிகரில்லா தனித்துவமான உணவுகளானாலும் சரி ஒவ்வொன்றும் அவற்றுக்குரிய தனித்துவத்தைக் கொண்டதாக மலேசியாவின் வீதியோர கடைகளிலும், உணவகங்களிலும் நிரம்பிக் கொண்டே இருக்கின்றன. நாவில் சுவையூறும் பல வகையான மலேசிய உணவுகள், அவர்களின் பாரம்பரியத்தின் சிறப்பையும் அதன் மாறுபட்ட தன்மைகளையும் எடுத்துக் காட்டுகின்றன. இக் கட்டுரையில் இணைக்கப்பட்டுள்ள உணவு வகைகளின் படங்கள் உங்களின் கண்களுக்கும் விருந்தாக அமையும் என்று நம்புகிறேன்.

## மலேசியாவும் மனம் கோணா உணவுகளும்

மலேசியாவில் வாழ்வதற்கோ அல்லது சுற்றிப் பார்ப்பதற்கோ மிகச் சிறந்த விஷயங்களில் ஒன்று அதன் உணவு வகைகள் என்பது பெரும்பாலானோரின் கருத்து. மலாய் உணவில் அரிசி முக்கிய உணவாகிறது. மலேசிய உணவு என்பது சீன, இந்திய மற்றும் பாரம்பரிய மலாய் சுவைகளின் துடிப்பான கலவையாகும். மலேசியா எப்படி பரந்து பட்ட எல்லைகளைக் கொண்டுள்ளதோ அது போலவே அதன் உணவு சார்ந்த எல்லைகளையும் அடக்கி எழுதிட முடியாது.

இலங்கையர் எம்மைப் போன்றே தீராக் காதல்

இலங்கையர்களுக்கு எப்படி சாறேு இல்லாமல் வாழ முடியாதோ, அது போலவே மலேசியர்களுக்கும் சோற்றினைத் தவிர்த்து விட்டு வாழ்வது கடினமாம். அதனால் தான் அவர்களது தேசிய உணவாக நாசி லெமாக் எனும் தேங்காய்ப் பால் சோற்றினை தேசிய உணவாக கொண்டிருக்கின்றனர். நாசி லெமாக் பெரும்பாலும் இலங்கையின் 'லம்ப்ரைஸ்' வாழையிலையில் பரிமாறப்படுவது போன்று மலேசியாவுக்கே உரித்தான 'பன்டன்' இலைகளின் உதவியுடன் இவை சமைக்கப்படுகின்றன.

மலாய் உணவுகள் பெரும்பாலும் கைகளாலே உண்ணப்படுகிறது.

இந்த வாரம் மலேசியாவின் தேசிய உணவான நாசி லெமாக் சமைத்து குடும்பத்தினரோடு உண்டு மகிழ்வோம். பாரம்பரிய மலேசிய முறையில் தயாரிக்கப்படும் நாசி லெமாக் உணவானது தேங்காய் பாலுடன் வேக வைத்த சோறும் அதற்கு இணை உணவுகளாக சீனிச் சம்பல், மீன் பொரியல், அவித்த முட்டை, சிறிதளவு வறுத்த நிலக்கடலை மற்றும் சில வெள்ளரிக்காய் துண்டுகளைச் சேர்த்துச் சாப்பிட்டால் இந்தத் தேங்காய் பால் சோறு அமிர்தமாக இருக்கும். மலேசிய மக்கள் இதனை காலை உணவாகவோ மதிய உணவாகவாே விரும்பி உட்கொள்கின்றனர். அங்கு வாழ் மலாய் மக்களுக்கு பிடித்த இன்னொரு பொருள் தேங்காய். மலேசியாவின் வெப்ப மண்டல கால நிலையில் தென்னை மரங்கள் நன்கு செழித்து வளர்வதில் ஆச்சர்யமில்லையே?

மேலும் மலாய் சமையல் நறுமணம் மிக்கதாக இருக்க சீரகம், கொத்தமல்லி, ஏலக்காய், கிராம்பு, ஸ்டார் பூ, கடுகு விதைகள், இலவங்கப் பட்டை, வெந்தயம், ஜாதிக்காய் போன்ற பல்வேறு மசாலாப் பொருட்களை கறிகளில் பயன்படுத்துகின்றனர். மலேசிய உணவுகள் மிகவும் சிக்கலானதாக உள்ளது என்றும் ஒரு சிலர் கருதுகிறார்கள். அவை மாறுபட்டதற்கு காரணம் தாய் உணவு வகைகள், டச்சு உணவுகள், அரேபிய உணவுகள் மற்றும் பிரிட்டிஷ் உணவு வகைகள் ஆசியவற்றிலிருந்து ஏற்பட்ட தாக்கங்கள் அதன் விளைவாக இன்று சுவைகளில் கலவை உருவானது என்னவோ உண்மையே. இன்றைய மலேசியாவின் சமையல் பாணி முதன்மையாக அதன் மலாய், சீன, இந்திய, இந்தோனேசிய மற்றும் இன போர்னியன் குடிமக்களிடமிருந்து பெறப்பட்ட மரபுகளின் கலவையாகத்தான் உள்ளது. பல மலாய்காரர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் தெரு உணவகங்களில் மற்றும் கஃபேக்களில் சாப்பிட மிகவும் விரும்புகிறார்கள், காரணம் உணவின் சுவை நன்றாக இருப்பதும் அதன் விலைகளும் மிகவும் நியாயமானவையாகவும் உள்ளது. மலேசியாவின் சுகாதார தர நிலைகள் அண்டை நாடான சிங்கப்பூர் அல்லது ஐரோப்பாவின் தரத்தை எட்டவில்லை

என்றாலும் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாக சாப்பிட மலேசியாவில் நிறைய உணவகங்கள் இருக்கின்றன. புள்ளி விபரப்படி தாய்லாந்தை விட மலேசியா வருடத்திற்கு அதிக சுற்றுலாப் பயணிகளை வரவேற்கிறது என்பது கூடுதல் தகவல்.



## நாசி லெமாக் செய்ய தேவையானவை

1 பச்சை அரிசி - இரண்டு கப்
2 உப்பு - சிறிதளவு
3 தேங்காய் பால் டின்- 1 (150 ட்டு-180ட்டு)
4 தண்ணீர் - தேவைக்கேற்ப

## செய்முறை

அரிசியைக் கழுவி வேகவைத்து எடுத்து நன்றாக கஞ்சி போக தண்ணீரில் அலசி எடுத்து வடித்து எடுத்து அதனுடன் தேங்காய் பால் டின்னை உடைத்து விட்டு சிறிதளவு உப்பும் சேர்த்து பன்டன் இலை கிடைத்தால் அதையும் சேர்த்து வேகவிட்டு படத்தில் காட்டப்பட்டுள்ள வாறு இணை உணவுகளோடு சேர்த்துப் பரிமாறி உண்டு மகிழுங்கள். பன்டன் இலைகள் கிடைக்கா விட்டால் அதனை தவிர்த்தும் நீங்கள் செய்து சுவைக்கலாம்.

இந்த மலேசிய உணவுகள் உங்களையும் மலேசியாவுக்கு ஒரு முறையாவது சென்று வர ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.






# காற்றில் கலந்து காதுகளை வருடிச்செல்லும் காந்தர்வக்குரல்

## அரை நூற்றாண்டு ஆளுமையுடன் ஒரு சந்திப்பு

**குழந்தை நட்சத்திரமாக தனது கலைப்பயணத்தை மேடையிலும் வானொலியிலும் 11 வது வயதில் ஆரம்பித்த க.குணசேகரன் பன்முக ஆளுமையுடையவர். ஆயிரத்துக்கு மேற்பட்ட வானொலி நாடகங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் தனது முத்திரையைப்பதித்துள்ளார். நான் ஒரு மலேசியன் திரைப்படம் இவரின் வெள்ளித்திரை பிரவேசத்தில் குறிப்பிடத்தக்கது.**




**? மலேசிய சுதந்திர தினத்தின் இனியநினைவுகளை எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

மலேசியாவிற்கு 1957 இல் சுதந்திரம் கிடைத்தது.ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று எமது நாட்டின் தலைநகரில் இராணுவ அணிவகுப்புக்கள் இடம்பெறும். அதனைப் பார்ப்பதற்காகவே நாம் பாடசாலை ரீதியாக செல்வோம். அதிலும் மறக்கமுடியாததொரு விடயம் நான் தரம் 8இல் படித்துக் கொண்டிருந்த போது மலேசிய சுதந்திர தின நிகழ்விற்காக பாடசாலையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாணவர்களுக்கு இராணுவ வீரர்கள் போன்று அணிவகுத்துச்செல்ல





வாய்ப்பு கிடைத்தது.அந்தக் குழுவில் நானும் இடம்பெற்றிருந்தேன்.அதற்காக பயிற்சிகள் மேற்கொண்டதையும்,சுதந்திர தினத்தன்று எமது நாட்டு பேரரசர்,அமைச்சர்கள் உட்பட பெரும் கூட்டத்தின் முன்பாக பெரிய இராணுவ வீரர் போல் அணிவகுத்துச்சென்றது என் வாழ்வில் மறக்க முடியாததொரு சம்பவமே ஆகும்.

**? கலையுலகில் நுழைய உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது?**

எனக்கு சிறுவயது முதலே கலைத்துறையில் ஆர்வம் இருந்தது. தரம் 5 இல் படித்துக்கொண்டிருக்கும் போது இலங்குத்தரவு எனும் மேடை நாடகத்தின் மூலம் அறிமுகமானேன்.1966 ஆம் ஆண்டு காலத்திலே மலேசிய வானொலிக்கு குழந்தை நட்சத்திரங்களை தெரிவு செய்த போது எமக்கும் அழைப்பு கிடைத்து நாங்கள் அங்கு சென்றிருந்தோம்.அந்த குரல் தேர்வில் பங்கெடுத்து நான் தேர்வானேன். அக்காலத்தில் மலேசிய வானொலிகளில் கல்வி அமைச்சுக்கென பிரத்தியேகமான நாடகப்பிரிவு இருந்து வந்தது.அதில் நாடகங்கள்,இலக்கியம்,பூகோளம்,வரலாறு போன்றன இடம்பெறும். அதில் நடித்துவந்தோம்.அன்று குழந்தை நட்சத்திரமாக தொடங்கியதே எனது பயணம்.




**? உங்கள் கலைப்பயணத்தில் இடம்பெற்ற சுவாரஷ்யமான சம்பவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

எனது கலைப்பயணத்தின் சுவாரஷ்யமான சம்பவம் எனப்பார்த்தால்,நான் வானொலியில் குரல் தேர்விற்காக ஒரு குழுவாகவே சென்றிருந்தோம். எம்மை இரு குழுக்களாக பிரித்து, ஒரு பகுதியினரை நடிப்பதற்காகவும்,மற்றைய குழுவை பாடல்கள் பாடவும் அனுப்பிவிட்டார்கள். அதில் என்னையும் பாடல் குழுவில் சேர்த்து விட்டார்கள். நான் நடிப்பதற்காகவே வந்தேன். எனக்கு பாடல் பாட தெரியாது. பெரிய தடுமாற்றத்தில் நின்று யாரிடமும் எதுவும் கூறமுடியாதே என்ற நிலையில் பாரதியார் பாடல் ஒன்றை பாடினேன்.கலைமகளின் ஆசியால் அங்கிருந்த தயாரிப்பாளர் 2 பக்க கதையை கொடுத்து அதை நடித்து காட்ட சொன்னார். அதில் அப்பா,அம்மா,மகன் என்ற மூன்று கதாபாத்திரத்திலும் மாறி மாறி நடித்தேன். அதைப்பார்த்து விட்டு அவர், தம்பி நீங்க நடிப்பதற்கு செல்லுங்கள் என்றார்.

மிகுதி 11 ஆம் பக்கத்தில்...







# காற்றில் கலந்து காதுகளை வருடிச்செல்லும் காந்தர்வக்குரல்

## அரை நூற்றாண்டு ஆளுமையுடன் ஒரு சந்திப்பு

அன்று தொடங்கி இன்று வரை 56 ஆண்டுகளாக தொடர்ந்து மலேசிய வானொலி நாடகப்பிரிவிலே எனது குரல் ஒலித்த வண்ணமே உள்ளது.அன்று அவர் என்னை நடிப்பதற்காக தெரிவு செய்யாது பாடகர் குழுவில் விட்டிருந்தால் இன்று என் வாழ்க்கை எப்படியிருந்திருக்கும் என தெரியாது. இன்னொரு சுவாரஷ்யமான விடயம் மலேசிய தொலைக்காட்சியில் இயக்குனர் விஜயசிங்கம் அவர்கள் இயக்கிய அம்மா என்ற தீபாவளி தொலைக்காட்சி நாடகத்திலே நடித்திருந்தேன். அந்த நேரத்தில் வேலை விடயமாக இலங்கையில் 2 நாள் தங்க



சிவாஜி கணேசன் கலை மன்றம் மலேசியா
SIVAJI GANESAN CULTURAL SOCIETY MALAYSIA
93-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா
NADIGAR THILAGAM SIVAJI GANESAN
93RD - BIRTHDAY FUNCTION
SINCERE APPRECIATION TO
ACTOR GUNASEGARAN
ON 28.1.2022, FRIDAY
DEWAN KEBUDAYAAN JKKN JALAN TUN HS. LEE

வேண்டிய சூழல் ஏற்பட்டது. அப்போது நான் தங்கியிருந்த விடுதியில் என்னிடம் ஒரு அம்மா என்னிடம் வந்து, ‘நான் தீபாவளி சமயத்தில் மலேசியா வந்திருந்தேன்.அம்மா நாடகத்தில் உங்கள் நடிப்பு மிக அருமையாக இருந்தது.’ என பாராட்டிச்சென்றார்.எமது நாட்டை தாண்டி இன்னொரு நாட்டில் கிடைத்த ஒரு அங்கீகாரம் பெரும் மகிழ்ச்சியாக இருந்தது.

**? உங்கள் கலைப்பயணத்தில் எதிர்கொண்ட சவால்கள் எவை?**

எனது கலைப்பயணத்தில் பெரிதளவில் சவால்களை எதிர்நோக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். நான் படித்து முடிந்த கையோடு வங்கியில் தொழிலுக்கு சென்றுவிட்டேன். எனது கலைத்துறைப்பயணத்தில் நான் பகுதி நேரமாகவே ஈடுபட்டதால் பெரிதளவில் சவால்களை எதிர்நோக்கவில்லை.



**? முன்பு மேடைநாடகங்களுக்கு இருந்த வரவேற்பும் தற்போதுள்ள வரவேற்பும் எவ்வாறுள்ளது?**

மேடைநாடகங்களுக்கு 20,30 ஆண்டுகளுக்கு முன்பிருந்த வரவேற்பு குறைந்துவருகிறது. பெரும்பாலும் கலைஞர்கள் இதனை பகுதி நேர தொழிலாக செய்வதால் பயிற்சிக்கும்,ஒத்திகைக்கும் அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் அதற்கு புத்துணர்ச்சி கிடைத்தது போல தேசிய நிலநிதி கூட்டுறவு சங்கத்தின் செயற்பாடு காணப்பட்டு வருகிறது.அவர்களது ஆதரவில் பல மேடை நாடகங்கள் அரங்கேறி வருகின்றன.

**? திரை நாடகக்கலைஞர்களுக்கு கிடைக்கும் வருமானம் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

கலைஞர்களது தனிப்பட்ட திறமை,தகுதிக்கேற்ப உரிய சன்மானம் வழங்கப்படுவதாகவே கருதுகிறேன்.

**? வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு நீங்கள் சொல்லவிரும்புவதென்ன?**

தொழினுட்ப வளர்ச்சி அதிகரித்து வரும் காலப்பகுதியில் வாழ்ந்து வரும் இளம் கலை






ஞர்களுக்கு சொல்வதற்கென்று எதுவுமில்லை. அவர்கள் சகல விடயங்களையும் இலகுவாக கற்றுக்கொள்ளக்கூடியதொரு நிலையிலே உள்ளனர்.இருந்தாலும் மூத்த கலைஞனாக அவர்களுக்கு கூறவேண்டிய விடயம், ஆர்வத்துடனும்,திறமையுடனும் இத்துறைக்கு வந்தாலும் தொழில்பக்தி இருந்தாலே இத்துறையில் பிரகாசிக்கலாம்.எனவே தொழில்பக்தியுடன் செயற்பட்டு அவர்களது பயணம் தொடர வழிசெய்வது அவர்கள் கைகளிலே உள்ளது.

**? ஒருகலைஞராக நீங்கள் விடுக்கும் மலேசிய சுதந்திர தின செய்தி என்ன?**

வேலை விடயமாகவோ, சுற்றுலாக்கென்றோ வெளிநாடுகளுக்கு சென்றாலும் கூட மீண்டும் எமது நாட்டிற்கு வந்து சேரும் போது கிடைக்கும் மகிழ்ச்சி அளவில்லாதது. அப்படியான சொர்க்கபூமியே எமது நாடு. ஒவ்வொரு தனிமனிதனது தனது வளர்ச்சிக்கு அயராது உழைக்கவேண்டும்.ஒவ்வொரு குடும்பத்தின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சியை தீர்மானிக்கும். எனவே அனைவரும் தமது வாழ்க்கையில் வெற்றிபெற்ற மனிதராக திகழ போராடவேண்டும்.



# முற்றத்து மல்லிகையாய் வாசம் வீசும் வெள்ளித்திரை முன்னோடி

## பன்முக ஆளுமை இயக்குனர் விஜயசிங்கம் கந்தசாமியோடு மலேசிய தமிழ் சினிமா வலம்



விஜயசிங்கம் கந்தசாமி




**நேர்காணல்: ஆர்த்தி**

**சுதந்திரப்போராட்டத்தின் இனிய நினைவுகளை எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?**

மலேசியா சுதந்திரமடைந்து இந்த ஆண்டோடு 65 ஆண்டுகள் ஆகிறது. 1957 இல் அன்றைய பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் அவர்கள் சுதந்திரத்தை சுதந்திர அரங்கில் (Merdeka Stadium) பிரகடனம் செய்யும் போது 12 வயது நிரம்பிய சிறுவனாக இருந்தேன். இந்த அரங்கமானது சுதந்திரத்திற்காகவே கட்டப்பட்டது. பள்ளிச்சிறுவனாக சுதந்திரதின நிகழ்வில் அங்கு கலந்து கொண்டதை நினைக்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

**நீங்கள் திரைத்துறையில் காலடி வைக்க உங்களைத் தூண்டியது எது?**

நான் பார்த்த முதல் திரைப்படம் பராசக்தி. அன்றிலிருந்து என் மனதில் சிவாஜிகணேசன் அவர்கள் வாழ்ந்து வருகிறார்.நான் மலேசிய சிவாஜிகணேசன் கலை மன்றத்தின் தலைவராக கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் இருந்து வருகிறேன். அவருடைய படங்களே எனக்கு பாடமாக அமைந்தது. தந்தை இறந்த பின் தாயுடன் அடிக்கடி சினிமா செல்வேன்.அதனால் இயல், இசை,நாடகம் என் இரத்தத்தோடு கலந்து விட்டது.1964 இல் மலேசிய தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டது.அன்றிலிருந்து இன்றுவரை நான் ஒரு நடிகனாக, இயக்குனராக,தயாரிப்பாளராக இருந்து வருகிறேன்.ஒரு கலைஞனாக நான் பிறந்தது பெரும் பேறென்றே நினைக்கிறேன்.தொலைக்காட்சிக்கு கிட்டத்தட்ட 60 தலைப்புக்களில் தொடர்களையும், சின்னத்திரை நாடகங்களையும் தயாரித்துள்ளேன். 1982 இல் தமிழகம் சென்று அங்கு ஒரு சினிமா படம் இயக்கினேன். ஆனாலும் அது வெளிவரவில்லை.அதன் பின் 1986 ல் மலேசியா வந்தேன்.நானும் எனது சகோதரரும் இணைந்து ஒரு கம்பனி அமைத்து தொலைக்காட்சி நாடகங்களை இயக்கி வெளியிட்டுள்ளோம்.2002 இல் லிமிஸ்ரேசன் புரொடக்ஷன் என்ற கம்பனி ஆரம்பித்து இன்றுவரை வரை அதை இயக்கி வருகிறேன். உண்மையில் மலேசியாவில் ஒரு மூத்த கலைஞனாக, இயக்குனராக இருப்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.இப்போது நான் தயாரித்த ‘காதல் அது ரகசியமானது.’ என்ற படம் செப்ரம்பர் 15 இல் வெளியிடப்படவுள்ளது. எனது வாழ்க்கை தொடர்ந்தும் கலைத் துறையில் பயணிக்கும். இதற்கெல்லாம் முன்னுதாரணம் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களே.

**சுதந்திரத்திற்கு முன்பாக திரைத்துறையின் போக்கு எப்படி இருந்தது?**

மலேசியாவிற்கு தென் நாட்டவர்கள் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்பே வரத்தொடங்கிவிட்டனர்.அது போல் இலங்கையிலிருந்தும் வந்துள்ளார்கள்.இங்கு வணிக நோக்கில் அவர்கள் வந்திருந்தாலும் கூட அவர்களுடனே கலையும் இணைந்தே வந்தது.சுதந்திரத்திற்கு முன்பு தோட்டப்புறங்களில் நாடகங்கள் நடாத்தப்படும்.அதன் பின் மேடை நாடகங்களும் அரங்கேறப்பட்டன.அப்போதெல்லாம் தமிழ்நாட்டு சினிமாத்துறையே இங்கு வரவழைக்கப்பட்டது.இந்நாட்டு மக்கள் சினிமா பற்றியும் கலை பற்றியும் அறிந்து கொள்ள தமிழ்நாட்டு சினிமாக்களே அடிப்படை.1964 தொடக்கம் தொலைக்காட்சிகளிலே நாடகங்கள் ஒளிபரப்பப்பட்டன. வாய்ப்புகள் குறைவானாலும் கலைஞர்களிடையே ஆர்வம் அதிகமாகவே காணப்படுகிறது. தற்போது தொலைக்காட்சி நாடகங்களின் வருகையால் மேடை நாடகங்கள் குறைவடைந்து விட்டன.ஆனாலும் நாங்கள் வருடத்திற்கு ஒருமுறை மேடை நாடகங்களை அரங்கேற்றிய வண்ணமே உள்ளோம்.ஓரிரு வருடங்களில் ரஜீலா என்ற மேடை நாடகத்தையும் அரங்கேற்றவுள்ளோம்.



**அப்போதைய படங்களில் வசூல் எவ்வாறு இருந்தது?**

அப்போதைய படங்களின் வசூல் அதிகமாகவே இருந்தது. ஏனென்றால் அக்காலத்தில் மக்களை மகிழ்வித்தது சினிமா தான்.திரைப்படம் ஒன்று வந்தாலே திருவிழாக்காலம் போலவே இருக்கும்.படங்கள் வாயிலாகவே மக்கள் அனைத்தையும் கற்றுக்கொண்டார்கள்.

**தற்போதைய மலேசிய தமிழ் சினிமாத்துறை சந்திக்கும் சவால் என்ன?**

தற்போது கலைஞர்கள் ஆர்வமாக இருப்பதால் சினிமாத்துறை வளர்ச்சியடைந்த வண்ணமே உள்ளது. இளங்கலைஞர்கள் தமிழ்நாட்டு சினிமாப்பாணியையே பின்பற்றி வருகின்றனர்.ஆனாலும் தமிழ் நாட்டு கலைஞர்களுக்கு கிடைக்கும் வரவேற்பு எம் நாட்டு கலைஞர்களுக்கு கிடைப்பதில்லை.ஆனாலும் அவர்கள் முயற்சியை கைவிடவில்லை.நம் நாட்டு கலைஞர்கள் பிரபலமாக இன்னும் சில காலம் தேவைப்படும்.தரமான படங்கள் வந்தாலும் கூட ரசிகர்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகிறது.

**அரசிடமிருந்து மானிய உதவிகள் கிடைக்கப்பெறுகிறதா?**

திரைப்படத்தொழில் வளர அரசு மானிய உதவிகளை எமக்கு வழங்கியே வருகிறது.

**சுதந்திரத் தினம் தொடர்பில் கலையுலகம் சார்பில் நீங்கள் விடுவிக்கவிருக்கும் செய்தி என்ன?**

பழையன மக்கள் வாழும் மலேசியாவில் எல்லாமும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்.எதிர்காலத்தில் நமது இளைஞர்கள் பெருமுயற்சி எடுத்து, உழைத்து நல்ல நிலைமையில் மகிழ்ச்சியாக வாழ வேண்டும்.நமது கலையும்,கலாசாரமும்,பண்பாடும், தமிழும் நிலைத்திருக்க அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக செயற்படவேண்டும்.




செப்டம்பர் 15 முதல்
35 திரையரங்குகளில்
FSP FILM STATION
PRODUCTIONS SDN. BHD
Audio • Video • Film Productions
காதல்
அது
ரகசியமானது...
Love, Its Secretive. Cinta Itu Rahsia.
A VIJEYASINGHAM FILM
IN CINEMAS FROM
15
SEPTEMBER
2022
DOP RAMESH ANNAMALAI | EDITOR ZALEE | MUSIC ATHISH UTHRIAN
LYRICS PA. RAMU GIRISH SHARMA | SONG COMPOSERS JEEVAN RAJU GS.THARMANN
DIALOGUE VIJEYASINGHAM GIRISH SHARMA | TITLES - RAJEETHAN @ SANJU | DESIGNING & PROMO- BEZIQUE STREAMS SDN BHD
EXECUTIVE PRODUCER IR.KUMAR SUBRAMANIAM
STORY, SCREENPLAY, DIRECTION VIJEYASINGHAM KANDASAMY
PRODUCER VIJEYASINGHAM KANDASAMY
CAST
RIK | NAVEEN | CHANDHINE KAUR | MJ.NADA | KAVITHA CHETTY | K NIVAGARAN | PUSHPA NARAYAN
DAVID ANTHONY | LOGANATHAN | KUMARAGURU | SANTHY | MANOJ KHAN | THIRUCHELVAN
AGHONDERAN | PARUVINTHARAJ | GANESWARAN | THANAM | BANUMATHI | THEVANAI | SUREHA
P
POKETPLAY
FILMS
finas

# திரைவானில் இருந்து ஓர் இளம் தாரகை

## நம் வாசல் வந்த பொழுது...



தமிழ்

### இந்தத்துறையில் உங்களது வளர்ச்சி பற்றி எப்படி உணர்கிறீர்கள்?

என்னுடைய இந்தப் பயணம் பலவிதமாக அமைந்திருந்தது. நான் அழகுக்கலை சம்மந்தமாகவே உயர் கல்வியை மேற்கொண்டிருந்தேன். அத்துடன் நான் ஒரு பரதநாட்டிய கலைஞராகவும் இருந்தமையால் அதுதவிர சகலவிதமான நடனங்களிலும் ஈடுபட விருப்பம் இருந்தது.

அந்த நேரங்களில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வாய்ப்புக்கள் கிடைத்தபோது நானும் எனது நண்பியும் அதை தவறவிடாது அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டோம்.மலேசிய உள்நாட்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதைத் தொடர்ந்து பல வாய்ப்புக்கள் கிடைத்தது.

மேடை நிகழ்ச்சிகள், மேடை நாடகங்களில் பங்குபற்றும் வாய்ப்புக்களும் கிடைத்தது.பீஷ்மர்,கர்ணன் போன்ற மேடை நாடகங்களில் எல்லாம் நடித்திருந்தேன். அதன் பின் ஒரு நடனப்போட்டியில் நான் வெற்றி பெற்றிருந்தேன்.அதில் நானும் எனது தோழியும் பங்குபற்றியிருந்தோம்.

பின்னர் திரைப்படங்களில் நடிப்பதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தது.இயக்குனர் விஜயசிங்கம் ,இயக்குனர் வி.நாகராஜ் அவர்கள் இயக்கிய படங்கள் உட்பட 5,6 திரைப்படங்களில் நடித்துள்ளேன். அண்மையில் வெளியான பெண்களைப் பிரதானமாகக் கொண்ட ஒரு படத்திலும் நான் பிரதான கதாபாத்திரத்தில் நடித்துள்ளதுடன், திரைக்கதையின் அமைப்பிற்கேற்ப முக்கியமான கதாபாத்திரங்களிலும் எனது திறமையை வெளிப்படுத்த தவறுவதில்லை.

அடுத்த மாதமளவில் வெளிவரவுள்ள காதலது ரகசியமானது என்ற திரைப்படத்தில் 60 வயது மதிக்கத்தக்க பெண்ணின் பாத்திரத்தில் நடித்துள்ளேன். இந்தத்துறையில் எனது பயணங்கள் வாயிலாக நான் பல அனுபவங்களைக் கண்டே வளர்ச்சியடைந்துள்ளேன்.எமக்கு மூத்த கலைஞர்களதும், இளைய கலைஞர்களுடைய வாயிலாகவும் பல விடயங்களை கற்றுக்கொள்ள முடிகிறது.இந்தத்துறையில் அங்கீகாரம் கிடைத்ததை எண்ணி மிக மகிழ்ச்சியடைகிறேன்.எனது திறமையை மதித்து அதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் போது அது சந்தோஷமான ஒரு விடயமே.

அழகுக்கலை சம்மந்தமாக எனது சொந்த நிறுவனம் ஒன்றையும் நடாத்திக்கொண்டு,அதே நேரத்தில் திரைத்துறையிலும் இருப்பதை எண்ணி பெருமையடைகிறேன். மக்கள் மத்தியில் பிரபல்யமாய் இருக்கின்றோம் என்பதை விடுத்து இந்த வேலையால் ஒரு அங்கீகாரம் கிடைத்தது பெரியதொரு விடயமாகவே கருதுகிறேன். எந்த ஒரு விடயம் முடியாது என்றாலும் அதை செய்து முடிக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கை இருக்கிறது.எந்த விடயம் என்றாலும் அதில் என்னால் முடிந்தளவு முயற்சி செய்து எப்படியும் அதை செய்து முடிப்பேன்.

### மலேசிய தமிழ் திரைத்துறையின் வளர்ச்சி உங்கள் பார்வையில் எப்படி இருக்கிறது?

திரைத்துறை பல விதங்களிலும் வளர்ச்சியடைந்த வண்ணமே உள்ளது.தொழில்னுட்பரீதியிலும் சரி நடிப்பாற்றல் ரீதியிலும் சரி அதிக முன்னேற்றம் காணப்படுகிறது.முன்னணி கலைஞர்கள் மூலம் கற்றுக்கொண்ட பாடங்களை அடிப்படையாக கொண்டு தற்காலத்தில் எம்மிடம் மக்கள் எதிர்பார்ப்பதற்கு ஏற்ற ரீதியிலும், தற்கால நடைமுறைக்கேற்ற வகையிலும் திரைத்துறை பயணித்து வருகிறது.மலேசிய உள்நாட்டு கலைஞர்களும் அதற்கேற்ற வகையிலே செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அதன்படி திரைத்துறையில் பெரும் வளர்ச்சியை இனங்கண்டுகொள்ள முடிகிறது.




கவிதா செட்டி

# சயாம் பர்மா மரண இரயில்வே...

உலகப்பலகணி






# சாவின் பாதையில் காவுகொள்ளப்பட்ட மலேசிய தமிழர்கள்!

> மலேசிய இந்தியர்களின் வாழ்வில் 76 வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்தப் பெரும் துயர நிகழ்வு பற்றிய செய்திகள் இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சில முதியோர்களின் நினைவுகளில் மட்டுமே தேங்கி நிற்கின்றது. எனவே இந்த மறைக்கப்பட்ட வரலாற்றினை அனைவரும் அறிந்து கொண்டு எமது எதிர்காலத்தைச் செதுக்க வேண்டிய தேவை உள்ளது.

காலம் காலமாக ஏகாதிபத்தியங்களின் கோரப் பிடிகளுக்குள் சிக்குண்டு உயிர் நீர்த்த தமிழினம் பல இரத்தக்கறை படிந்த வரலாறுகளைக் கொண்டுள்ளது. இதில் இன்னமும் வெளி உலகிற்கு தெரியாமல் மறைக்கப்பட்ட உண்மைகள் ஏராளம். அவ்வாறு பலரும் அறிந்து கொள்ளாத ஒரு கொடூர வரலாறு தான் 'சயாம்–பர்மா மரண





ரயில் பாதை' நிகழ்வு.

இரண்டாம் உலகப்போர் சமயத்தில் தாய்லாந்து, பர்மா வழியாக இந்தியா வந்து இந்தியாவைக் கைப்பற்றி ஆசியா முழுக்க தன் கட்டுப்பாட்டை நிறுவ திட்டம் தீட்டியது ஜப்பான். இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கில் ஜப்பான் 1942ஆம் ஆண்டு 'சயாம்' என்று அழைக்கப்பட்ட அன்றைய தாய்லாந்துக்கும், பர்மாவுக்கும் இடையே 415 கிலோ மீட்டர் அளவில் ஒரு மாபெரும் ரயில் பாதை ஒன்றை கட்டமைக்க முடிவு செய்தது. இதற்கு முன்னர் இதே பாதையில் ரயில் பாதை அமைக்க பிரிட்டன் திட்டமிட்டிருந்தது ஆனால் குன்றுகள், ஆறுகள், காடுகள் என வெவ்வேறு நிலப்பரப்பினால் ஆன அந்த 415 கிலோமீட்டர் பாதையைக் குடைந்து ரயில் பாதை அமைக்க மிகுந்த பொருட்செலவும், மனித வளமும் தேவைப்பட்டதால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

மனித வலுவை ஒன்றுதிரட்டி. தொழில்நுட்பம் வளர்ந்திராத அந்தக் காலகட்டத்தில் இது மிகப்பெரிய பணி. பிரிட்டன் கைவிட்ட இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முழுவீச்சுடன் களம் இறங்கியது ஜப்பான். தன்னிடம் இருந்த அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த போர்க்கைதிகள், பொறியியலாளர்கள் என மொத்தம் 60 ஆயிரம் பேருடன் தொடங்கியது இந்தப் பணி. அவ்வளவு பேர் போதாது என்பதை உணர்ந்த ஜப்பான், மலேசிய ரப்பர் மற்றும் தேயிலை காடுகளில் பணிபுரிந்து வந்த தமிழர்களை வலுக்கட்டாயமாக இதில் ஈடுபடுத்தியது. எங்கு செல்கிறோம், எதற்காக செல்கிறோம் எனத் தெரியாமல் கட்டாயப்படுத்தி அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். தெருவில் நடந்து கொண்டிருந்தவர்கள் கூட கடத்திச் செல்லப்பட்டு, அடிமைகளாக இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். ரப்பர் தோட்டத்தில் ஏராளமான சோதனைகள், நெருக்கடிகளைச் சந்தித்த தமிழர்களுக்குக் குடும்பத்தோடு இருப்பது ஒன்றே நிம்மதி அளித்திருந்தது. ஆனால், ரயில் பாதை பணியில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்ட போது அதுவும் இல்லாமல் போனது. வானத்தில் சூரியன் இல்லாத நேரம் தவிர மற்ற எல்லா நேரமும் மக்களின் வியர்வையும் ரத்தமும் உழைப்பாக உறியப்பட்டது. பணியின் கொடுமை தாங்காமல் அங்கிருந்து தப்பிச்செல்ல முயற்சித்தவர்களின் தலைகள் மற்ற தொழிலாளர்களின் முன்பு கொய்யப்பட்டு அந்தத் தலைகள் மரக் கிளைகளில் தொங்கவிடப்பட்டது.



சந்திரசேகரம்
சாரிஷா

ஜப்பானிடம் சிக்கிய இந்தத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை, யூதர்களுக்கு நாஜி இழைத்த கொடுமைகளுக்கு இணையானது எனக் கருதப்படுகின்றது. அந்தக் காலத்தில் மரவள்ளி கிழங்கு, கருவாடு, சூப் ஆகியவையே பெரும்பாலும் அவர்களின் உணவு. உடம்பு முடியாவிட்டாலோ, விஷப்பூச்சிகள் பாம்பு கடித்துவிட்டாலோ, அவர்களுக்காக யாரும் நிற்பதில்லை. ஆங்காங்கே விழுந்து அப்படியே இறக்க வேண்டியது தான். முகாம்களில் இருந்து மருத்துவமனை அழைத்துச் செல்கிறோம் என்ற பெயரில் ஒதுக்குபுறமான ஒரு கொட்டகையில் போய் விட்டுவிடுவார்கள். கும்பல் கும்பலாய் வயிற்றுப்போக்கும் காய்ச்சலுமாய் இறப்பை நோக்கி செல்ல வேண்டியதுதான். அழுகி நாறி இருந்தாலும் தங்களுக்கு வசதிப்பட்ட என்றாவது ஒரு நாளில் மொத்தமாய் குப்பை அள்ளுவது போல தள்ளு வண்டியில் ஏற்றி வந்து ஒரே பெரிய குழியாய் வெட்டி மொத்தமாய் போட்டு புதைத்து விடுவார்களாம். ஒரு கட்டத்தில், இனி புதைக்க இடமே இல்லை என்றபோது, பிணங்களெல்லாம் டீசல் ஊற்றி எரிக்கப்பட்டன.

குற்றுயிரும் குலையுயிருமாய் கிடப்பவர்களுக்கும் மொத்தமாய் மோட்சம். மறுபடியும் ஒரு கொட்டகை முளைக்கும். இதில் எல்லாம் தவறி பிழைத்தவர்கள் அவ்வப்போது போர்விமானங்கள் போட்ட குண்டுகளில் மடிந்தார்கள். எந்தப் பக்கம் திரும்பினாலும் அவர்களுக்கு மரணம் காத்திருந்தது.

5 ஆண்டு காலத்தில் இந்தத் திட்டத்தை முடிக்க திட்டமிட்டிருந்தது பிரிட்டன். ஆனால் இதை ஜப்பானியர்கள் 16 மாதங்களில் நிகழ்த்திக் காட்டினர். அதற்காக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசியத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். இதில் மிகப் பெரும்பான்மையானோர் தமிழர்கள். இத்தனைக்கும் பிறகு தான் 1945ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ரயில் சேவை தொடங்கியது. ஜப்பானியர்கள் இதை ஒரு திருவிழா போல கொண்டாடினர். உயிரிழந்தவர்கள் போக எஞ்சியிருந்த தமிழர்களும் இதர தொழிலாளிகளும் சோர்வோடு மலேசிய தோட்டங்களில் உள்ள தங்கள் வீடுகளுக்கு திரும்பினர். வேலை பார்த்ததற்கு ஊதியமாய் ஒவ்வொருவருக்கும் ஒரு மூட்டை நிறைய வாழைத்தார் படம் போட்டு அச்சடிக்கப்பட்ட பண நோட்டுகள் வழங்கப்பட்டன. அதுவே, அவர்களுக்கு ஆறுதலாக இருந்த போதும் அப்போது, 'அந்தப் பண நோட்டுகள் செல்லாது' என அறிவிக்கப்பட்டதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.



உலகப்போர் முடிந்ததும் யுத்தக் கைதிகளாய் இருந்த பிரிட்டன் மற்றும் அமெரிக்க வீரர்கள் அவர்களின் நாடுகளில் கதாநாயகர்களாய் கொண்டாடப்பட்டனர். பர்மா மற்றும் சீன தொழிலாளர்கள் அவர்கள் நாட்டு அரசாங்கத்திடம் இருந்து அடிப்படை வாழ்வாதாரத்திற்கான உதவியினைப் பெற்றனர். எல்லாவற்றுக்கும் மேல் அந்த மக்களுக்கு அந்த நாட்டில் நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. ஆனால் இந்தக் கொடூரத்தில் கொல்லப்பட்ட தமிழர்களைப் பற்றிப் பேச அப்போது எவரும் இல்லை.

இதில் உயிர் பிழைத்து மலாயாவுக்கு நோயாளிகளாக, விதவைகளாக மற்றும் அனாதைச் சிறுவர் சிறுமியர்களாகத் திரும்பி வந்தவர்கள், பலவகை சமூக, பொருளாதார பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டி இருந்தது. இவ்வளவு பெரிய உயிரிழப்பையும் துயரத்தையும் சந்தித்த மலாயா தமிழர்களின் சோகத்தை மனித உரிமைகள் பற்றி பேசும் மேற்குலக நாடுகளும் கண்டுகொள்ளவில்லை என்பது கூடுதல் சோகம்.

தங்களுடைய ஏகாதிபத்திய நலன்களுக்காக உலக வல்லரசுகள் அப்பாவி மக்களை பலி ஆடுகளாக்கி விடுகின்றனர். இதனால் பல சமூகங்களால் தங்களுடைய வரலாற்றினை தாம் விரும்பிய படி அமைத்துக் கொள்ள முடியாமல், அவை முழுவதுமாய் இரத்தத்தில் மூழ்கடிக்கப்படுகின்றன. அதில் ஒன்றாகத்தான் தான் அப்பாவி தொழிலாளிகளின் உடலங்களின் மேல் கட்டப்பட்டிருக்கும் சயாம் பர்மா மரண இரயில்வேயின் வரலாறு அமைந்திருக்கிறது.

மலேசிய இந்தியர்களின் வாழ்வில் 76 வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்தப் பெரும் துயர நிகழ்வு பற்றிய செய்திகள் இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சில முதியோர்களின் நினைவுகளில் மட்டுமே தேங்கி நிற்கின்றது. எனவே இந்த மறைக்கப்பட்ட வரலாற்றினை அனைவரும் அறிந்து கொண்டு எமது எதிர்காலத்தைச் செதுக்க வேண்டிய தேவை உள்ளது.



# அரண்மனையில் பிறந்த சாமானியன்!

## தேசத்தின் முதுசம் துங்கு அப்துல் ரஹ்மான்



மலேசியாவில் ‘துங்கு’ என்று அழைக்கப்படும் துங்கு அப்துல் ரஹ்மான் மலாயா கூட்டமைப்பின் முதல் பிரதமராகவும், பின்னர் மலேசியாவின் முதல் பிரதமராகவும் இருந்தார். அவர் ‘தேசத்தின் தந்தை’ என்று கருதப்பட்டார்.

பல தசாப்தங்களாக மலேசியர்கள் தங்கள் நாட்டின் முதல் பிரதம மந்திரி துங்கு அப்துல் ரஹ்மானை ‘துங்கு’ என்று குறிப்பிடுகின்றனர். ‘மை லார்ட்’ என்று பொருள்படும் தலைப்பு, பல மலாய் பிரபுக்களால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ஆனால் துங்கு அப்துல் ரஹ்மான் மட்டுமே ‘துங்கு’ என்பது ‘தேசத்தின் தந்தை’என்ற அவரது அந்தஸ்தின் தெளிவான அறிகுறியாகும்.

துங்கு அப்துல் ரஹ்மான் 54 வயதாக இருந்தபோது, ஆகஸ்ட் 31, 1957 இல், மலாயா கூட்டமைப்புக்கு சுதந்திரம் மற்றும் இறையாண்மையை முறையாக வழங்கிய ராணியின் பிரதிநிதி ஆவணங்களை அவர் ஏற்றுக் கொண்டார். அதுவரையான அவரது வாழ்க்கை அவரை தேசியத் தலைமைப் பதவிக்கு நன்கு தயார்படுத்தியிருந்தது. இவரது தந்தை சுல்தான் அப்துல் ஹமீத் ஹலீம் ஷா ஆவார், இவருடைய ஆட்சி கெடா மாநிலத்தின் தலைநகரான அலோர் ஸ்டாரில் 61 ஆண்டுகள் நீடித்தது.

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து சிங்கப்பூர், மலாக்கா மற்றும் பினாங்கின் ‘குடியிருப்பு நீரிணை’ ஆகியவற்றுடன், கிரேட் பிரிட்டன் கட்டுப்பாட்டில் இருந்த ஒன்பது மலாய் மாநிலங்களில் கெடாவும் ஒன்றாகும். தகரச் சுரங்கங்கள் மற்றும் இறப்பர் தோட்டங்களை வளர்ப்பதற்கான அவர்களின் நோக்கத்தை மேம்படுத்தும் வகையில், ஆங்கிலேயர்கள் பூர்வீக மலாய் கலாச்சாரம்



மற்றும் நிறுவனங்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் சீனா மற்றும் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களின் குடியேற்றத்தை ஊக்குவித்தனர். இந்த தந்தைவழிக் கொள்கையானது துங்கு அப்துல் ரஹ்மான் தனது 16 வயதில் தொடங்கி 12 வருடங்கள் கேம்பிரிட்ஜில் படிப்பதை சாத்தியமாக்கியது.

இங்கிலாந்தில் இருந்தபோது துங்கு கிரேட் பிரிட்டனின் மலாய் நிர்வாகத்தை நிறுவி செயலாளராக ஆனார். இந்த அனுபவமும், கெடா மாநில சிவில் சர்வீசுடன் அவரது அடுத்தடுத்த பதவிக்காலமும், மெதுவாக வளரும் மற்றும் மிதமான மலாயா தேசிய இயக்கத்தில் அவர் பங்கேற்பதை முன்னறிவித்தது. 1949 இல் இங்கிலாந்தில் தங்கியிருந்து, சட்டப் படிப்பை முடித்த துங்கு அப்துல் ரஹ்மான், ஐக்கிய மலாய் தேசிய அமைப்பின் [UMNO] கெடா கிளையின் தலைவரானார். 1951 ஆம் ஆண்டு UMNO வின் தேசியத் தலைவர் பதவியை துங்கு ஏற்றுக்கொண்டபோது, அவர் மலாயா தேசியவாதத்தின் முன்னணிப் பேச்சாளராக ஆனார்.

### வகுப்புவாத பதட்டங்கள் ஒரு நிலையான பிரச்சினை

மலேசியாவின் பெரிய சீன மற்றும் இந்திய மக்கள் மலாய் கலாச்சாரத்தில் ஒருங்கிணைக்கப்படவில்லை, மேலும் மலாய்க்காரர்கள், சீனர்கள் மற்றும் இந்தியர்களிடையே உள்ள அமைதியற்ற உறவுகள் ஒரு அடிப்படை மற்றும் நிலையான சமூக பிரச்சனையாக இருந்து வருகிறது. சீன மற்றும் இந்திய சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் அமைப்புகள் UM-NO உடன் கூட்டணிக் கட்சியை உருவாக்குவதற்கான சூத்திரத்தை வகுத்த பெருமைக்குரியவர் துங்கு. கூட்டணி அல்லது 1970 களின் முற்பகுதியில் மற்ற கட்சிகள் அதில் சேர அழைக்கப்பட்ட பின்னர், தேசிய முன்னணி, சுதந்திரத்திற்குப் பிறகு அரசாங்கக் கட்சியாக இருந்தது. 1955 ஆம் ஆண்டு முதல் கூட்டாட்சித் தேர்தல்களில் அதன் ஒருதலைப்பட்சமான தேர்தல் வெற்றி ஏற்பட்டது, அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட 52 பிரதிநிதிகளில் 51 பேர் கூட்டணி வேட்பாளர்களாக இருந்தனர்.

சுதந்திரத்திற்கு முந்தைய ஆண்டுகளில், ‘அவசரநிலை’ என்று அழைக்கப்படும் கம்யூனிஸ்ட் கிளர்ச்சியை அடக்குவதற்கான அரசாங்க முயற்சிகளில் துங்கு ஈடுபட்டார். 1960களின் முற்பகுதியில் கொரில்லா உத்திகளைக் கைவிட்ட மலாயாக் கம்யூனிஸ்ட் கட்சி, சீனாவின் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டிருந்தது இனங்களுக்கிடையேயான பதட்டங்களை அதிகப்படுத்தியது. 1969 ஆம் ஆண்டில், நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, ஆயுதமேந்திய மலாய்க்காரர்கள் மற்றும் சீனர்களின் குழுக்கள் ஒருவரையொருவர் தாக்கி, பொதுவாக கணிசமான சொத்து சேதத்தையும் சில உயிர் சேதங்களையும் ஏற்படுத்தியபோது, கொதித்துக்கொண்டிருந்த வகுப்புவாத மோதல் கொதித்தது. பிரதம மந்திரியாக இருந்த துங்குவின் பதவிக்காலத்தில் இது மிகக் கடுமையான நெருக்கடியாக இருந்தது மேலும் அது தனக்கு ஏற்பட்ட மனவேதனையை அவர் தனது மே 13 முன்னும் பின்னும் என்ற புத்தகத்தில் விவரித்தார்.

இன நல்லிணக்கத்தை உருவாக்கவும் வன்முறையைத் தடுக்கவும் அவரால் அல்லது வேறு யாராலும் முடியாது என்றாலும், துங்கு அப்துல் ரஹ்மான் சமரசத்திற்காக பாடுபட்டார். ஒரு அதிகாரப்பூர்வ கணக்கு கூறியது போல், அவர் ‘அனைத்து சமூகங்களின் உறுப்பினர்களாலும் விரும்பப்பட்டார் மற்றும் மதிக்கப்பட்டார் மற்றும் நேர்மை கொண்டவராகக் கருதப்பட்டார்.’

மலேசியா சுதந்திரமடைந்தவுடன், இப்பகுதியில் உள்ள மற்ற காலனித்துவ பிரதேசங்களிலிருந்து பிரித்தானியர்கள் வெளியேற முயன்றனர். 1963 ல் மலேசியாவின் கருத்தாக்கத்தின் மூலம் இது அடையப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது, அதற்குள் துங்கு அப்துல் ரஹ்மானால் வலுவாக ஆதரிக்கப்பட்டது. செப்டம்பர் 1963 இல் மலாயா, சிங்கப்பூர், சரவாக் மற்றும் சபா ஆகியவை புதிய தேசிய – மலேசியாவில் ஒன்றாக இணைக்கப்பட்டன. சிங்கப்பூரின் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் உயரடுக்கு அதீத லட்சியம் கொண்டதாக UMNO தலைமை உணர்ந்ததால், அந்த வடிவத்தில் அது குறுகிய காலமே நீடித்தது. ஆகஸ்ட் 1965 இல், துங்கு முதலில் சிங்கப்பூரின் பிரதம மந்திரி லீ குவான் யூவுக்கும் பின்னர் மலேசியப் பாராளுமன்றத்துக்கும் சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிக்கப்பட்டு சுதந்திர தேசிய நாடாக மாறும் என்று தெரிவித்தார்.

சிங்கப்பூரின் பிரிவினையோ அல்லது இந்தோனேசியாவின் ஜனாதிபதி சுகர்னோவின் கசப்பான மலேசிய எதிர்ப்பு நிலைப்பாடுகளோ துங்கு அப்துல் ரஹ்மானை பிராந்திய ஒத்துழைப்புக் கொள்கையை பின்பற்றுவதைத் தடுக்கவில்லை. 1961 இல் தென்கிழக்கு ஆசியாவின் சங்கத்தை நிறுவுவதில் பங்கேற்ற துங்கு, 1967 இல் சிங்கப்பூர் மற்றும் இந்தோனேசியாவை உள்ளடக்கிய சங்கத்தின் விரிவாக்கத்தை ஆதரித்தார். இவ்வாறு உருவாக்கப்பட்ட அமைப்பு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம், மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் மற்றும் பின்னர், புருனே ஆகிய நாடுகளுடன் ஒரு தீவிரமான மற்றும் நீடித்த பிராந்திய குழுவில் இணைந்தது.




1970 இல் துங்கு அப்துல் ரஹ்மான் அம்னோவின் தலைமைப் பதவியையும், அதனுடன் பிரதம மந்திரி பதவியையும் தனது நெருங்கிய நண்பனான துன் அப்துல் ரசாக்கிடம் துறந்தார். அவரது ஓய்வுக்குப் பிறகு, கோல்ஃப் மற்றும் பயணம் போன்ற அவருக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு வகைகளில் சிலவற்றை அனுபவிக்கும் துங்குவின் திறன் உடல்ரீதியான பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டது, ஆனால் அவர் தனது குடும்பத்துடன் செலவழித்த நேரத்தில் வெளிப்படையான மகிழ்ச்சியைப் பெற்றார். மலேசிய பொது விவகாரங்களில் ஃபெரிய முதியவராக× அவர் அவ்வப்போது பொதுத் தோற்றங்களில் தோன்றினார், 1983 ஆம் ஆண்டின் முற்பகுதியில் புதிய மலேசிய சீன சங்கத்தின் தலைமையக கட்டிடத்தை அர்ப்பணித்து அவர் ஆற்றிய உரை போன்றது. ‘அஸ் ஐ சீ இட்’ என்ற தலைப்பில் வாராந்திர செய்தித்தாள் கட்டுரையையும் எழுதினார். இதனால் மலேசியாவில் அரசியல் மற்றும் சமூக வாழ்க்கையில் அவரது மகத்தான செல்வாக்கை தொடர்ந்து சேர்த்தார்.

1957 இல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற மலேசியாவை வழிநடத்தி அதன் முதல் பிரதமராக 13 ஆண்டுகள் பணியாற்றிய துங்கு அப்துல் ஹ்மான் டிசம்பர் 6, 1990 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இந்த உலக வாழ்க்கை குறுகியது. நம் வாழ்க்கையை மகிழ்ச்சிக்காகப் பயன்படுத்துவோம், பிரச்சனைக்காக அல்ல.

– ***துங்கு அப்துல் ரஹ்மான்***



துங்கு அப்துல் ரஹ்மான் பல்கலைக்கழகம் மலேசியா



சோபிகா
கிருஷ்ணமூர்த்தி



பிரியா இராமநாதன்

# உலகுக்கே உதாரணம் மலேசியா

> 13 மாநிலங்களையும் மூன்று கூட்டரசு மாநிலங்களையும் கொண்ட தென்கிழக்கு ஆசியாவில் உள்ள ஒரு முடியாட்சி நாடே மலேசியா . தீபகற்ப மலேசியா அல்லது மேற்கு மலேசியா என்றும், கிழக்கு மலேசியா அல்லது மலேசிய போர்னியோ என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட இந்நாடானது தொன்மை வரலாறுகளைக் கொண்டது .

நாங்கள் மட்டும்தான் இந்த மண்ணின் மைந்தர்கள் என தமக்குள்ள சண்டையிட்டுக் கொண்டு நாசமாய்ப்போன நாடுகளுக்கு மத்தியில் , அனைத்து மக்களுக்கும் இந்த நாடு சொந்தமானது எனும் ஒற்றுமையுணர்வுடன் மலாய் , சீனர் , இந்தியர் என மூவினங்களும் ஒன்றிணைந்து ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பியுள்ளனர் என்றால் அது மலேசியாதான் என்றால் மிகையில்லை . உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் பல்லினம் ஒற்றுமையாகவும்4 புரிந்துணர்வுடனும் பல்வேறு கலாச்சாரங்களை உயிர்ப்பிக்கும் உன்னத தேசமாகவும் உயர்ந்து நிற்பதுடன் , மலேசியா என்னும் உன்னத நாட்டைக் கட்டமைப்பதில் இனம்4 மொழி4 மதம் கடந்து மலேசியர்கள் என்னும் ஒற்றுமையும் உயரிய சித்தாந்தமும் பெரும் பங்காற்றியுள்ளது என்றே கூறவேண்டும் .

13 மாநிலங்களையும் மூன்று கூட்டரசு மாநிலங்களையும் கொண்ட தென்கிழக்கு ஆசியாவில் உள்ள ஒரு முடியாட்சி நாடே மலேசியா . தீபகற்ப மலேசியா அல்லது மேற்கு மலேசியா என்றும், கிழக்கு மலேசியா அல்லது மலேசிய போர்னியோ என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட இந்நாடானது தொன்மைவரலாறுகளைக் கொண்டது .



2 லட்சம் வருடங்களுக்கு முந்தைய கல்லாயுதங்கள் புகித் ஜாவாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் , கிழக்கு மலேசியாவின் சரவாக்கில் அமைந்துள்ள நியா குகைகளில் 40000 ஆண்டுகளுக்கு முந்தைய மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன . மேலும் மலேசிய பூர்வகுடி செமாங் இனத்தவர்களின் மூதாதையர்கள் சுமார் 40000 ஆண்டுகளுக்கு முந்தைய ஆப்பிரிக்கர்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மலேசியத் தீபகற்பத்தின் மிக முந்தைய எலும்புக்கூடான பேராக் மனிதன் 11000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. கி.மு. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் வந்த வணிகர்களும் குடியேற்றக்காரர்களும் வணிகத் துறைமுகங்களையும் நகரங்களையும் உருவாக்கியதாகவும் , பிற்பகுதியில் மலேசியா ஸ்ரீ விஜயப் பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்ததாகவும் ,11ம் நூற்றாண்டில் சுமத்திரா மற்றும் மலாயாத் தீபகற்பத்தில் சோழர்களால் தொடர்ச்சியான படையெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு விஜயப்பேரரசு வலுவிழக்கச் செய்யப்பட்டதாகவும் வரலாறுகள் கூறுகின்றன . பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இஸ்லாத்தின் பரவல் காரணமாக விஜய பேரரசின் இறுதி இளவரசன் பரமேஸ்வரன் என்பவர் இஸ்லாத்தை தழுவிக்கொண்டதுடன் மலாக்கா சுல்தானியத்தை கட்டியெழுப்பினார் .




1511ல் வணிக நகரமாயிருந்த மலாக்கா போர்த்துக்கீசர் வசமாகி , 1641ல் ஒல்லாந்தர்களால் கைப்பற்றப்பட்டது. 1786ல் கெடாவின் சுல்தான் என்பவர் பினாங்கைப் பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனிக்கு குத்தகைக்குக் கொடுத்தார். இதனால் பிரித்தானியப் பேரரசு மலாயாவில் காலூன்றியது. மேலும் 1824ல் ஆங்கில–டச்சு ஒப்பந்தப்படி மலாக்காவையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். 1826 –இல் பிரித்தானியர் பினாங்கு, மலாக்கா, சிங்கப்பூர், லபுவன் தீவுகள் ஆகியவற்றை நேரடியாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததன் மூலம் அவற்றைத் தமது முடிக்குரிய குடியேற்ற நாடாக்கினர்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் மலாயப் பொதுவுடைமைக் [கம்யூனிஸ்ட்டுக்] கட்சியின் தலைமையில் ஒன்றிணைந்த போராளிகள் பிரித்தானியப் படைகளுக்கெதிராக கொரில்லாப் போர் தொடுத்ததன் விளைவாக 1957 ஆகஸ்ட் 31 அன்று விடுதலை அடைந்த மலேசியா 1963 ஆம் ஆண்டு மலேசிய கூட்டரசு எனப்படும் தற்கால மலேசிய நாடாக உருவாகியது. மலேசியா உலகின் மிகவும் பிரபலமான பத்து சுற்றுலாத் தலங்களில் ஒன்று என்பதுடன் , ஆரம்பகால கட்டங்களில் விவசாய நாடாக இருந்த மலேசியா இன்று தொழில்துறை விவசாய நாடாக மாறியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது . முக்கிய ஏற்றுமதிகளாக சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியம் , ரப்பர் , பாம் எண்ணெய் காணப்படுவதுடன் , கட்டுமானங்கள் , வெளிநாட்டு முதலீடுகள் போன்றவற்றை ஊக்குவிப்பதன்மூலம் இந்நாடானது பொருளாதார ரீதியில் துரித வளர்ச்சியினை எட்டிக்கொண்டிருக்கின்றது என்றே கூறவேண்டும் .










# மலைக்க வைக்கும் மலேசியா


பி.மாணிக்கவாசகம்

இலங்கை, பர்மா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்குத் தொழிலாளர்களாகத் தமிழகத்தில் இருந்து தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டதைப்போலவே, மலேசியாவின் இறப்பர் மற்றும் கரும்புத் தோட்டங்களில் பணியாற்றுவதற்காகத் தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்கள் இலங்கையில் உள்ள மலையகத் தோட்டத்துறையைப் போன்று தோட்டங்களில் நிரந்தரமாகக் குடியேறி தொழில் புரிந்து வாழ்ந்து வருகின்றார்கள்.

தோட்டங்களில் பணி செய்வதற்காகவே தமிழர்கள் மலேசியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகப் பொதுவாகக் கூறப்பட்டாலும், உண்மை அதுவல்ல. தொழிலாளர்களாக மட்டுமல்லாமல் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்தவர்களாகவும் தமிழர்கள் மலேசியாவுக்குச் சென்றிருக்கின்றார்கள். அவர்கள் கல்வி, கலை, கலாசாரம், இலக்கியம் உள்ளிட்ட துறைகளில் தங்களுக்கென தனித்துவத்தைப் பேணி வருகின்றார்கள்.




‘நாம் இந்த நாட்டுக்கு [மலேசியாவுக்கு] சாதாரண தொழிலாளர்களாக மட்டும் வரவில்லை. வர்த்தகர்களாகவும், அறிஞர்களாகவும் தொழில்நுட்பவியலாளர்களாகவும் வைத்தியர்களாகவும், கலை பண்பாட்டுச் சின்னங்களைக் கற்றுக் கொடுப்பவர்களாகவும் வந்தோம்’ என்பது மலேசிய இந்திய சமூகத்தின் மூத்த தலைவராகிய டான் எஸ்.கே.உபைத்துல்லாவின் கூற்று. மலாயர்களும், சீனர்களும் தமிழர்கள் மலேசியாவிற்குப் பஞ்சம் பிழைக்க வந்தவர்களாகவே கருதிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற காரணத்திற்காகவே அவர் இதனைக் கூறியிருக்கின்றார்.




இலங்கையில் இருந்து மலேசியாவுக்குச் சென்ற தமிழர்கள் பலரும் அரச பணி மட்டுமல்லாமல் படைத்துறை, வணிகம், மற்றும் தொழில்துறைகளில் ஈடுபட்டு அந்த நாட்டிற்குச் சேடிவாயற்றி உள்ளார்கள். இவர்களில் அரச பணி செய்தவர்கள் அந்த நாட்டு அரசாங்கத்தின் ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற்றிருந்தார்கள். இவர்கள் மலேசியன் பென்சனியர் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

‘தமிழர்கள் ஒரு தலைசிறந்த சமுதாயமாகவே மலேசியா, இந்தோனேசியா, வியட்நாம், கம்போடியா, லாவோஸ் போன்ற நாடுகளுக்கு வந்திருக்கிறார்கள். சோழன் கப்பல் ஓட்டிக் கடாரம் வந்தது ஒரு நாகரிக இனத்தின் அடையாளமே. சோழனுக்குப் பிறகு ஆங்கிலேயர் காலத்தில் தமிழர்கள் வந்தது இந்த நாடுகளின் வளங்களைத் திருடிக்கொண்டு போக அல்ல. மாறாக உழைப்பைக் கொடுத்துத் தங்களின் கலை பண்பாடு காக்கவும் ரசிக்கவும் முற்பட்டார்கள். அச்சமயம் அவர்களின் அடையாளங்கள், வாழும் மண்ணில் வீழ்ந்து மற்றவர்களின் முகாம்களில் சென்று கலந்தன’ என்று இலங்கையின் புகழ் பூத்த இலக்கியப் படைப்பாளியாகிய மாத்தளை சோமு தனது ‘மாத்தளை முதல் மலேசியா வரை...’ என்ற நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

## மலேசியாவின் இறப்பர் உற்பத்தி

உலக இறப்பர் உற்பத்தியில் மலேசியா முன்னணியில் திகழ்ந்தது. இறப்பர் உற்பத்தியின் மூலமே அதிக அந்நியச் செலாவணியை அந்த நாடு ஈட்டி வந்தது. அந்த நாட்டின் சீதோஷ்ண




நிலை, மண்வளம் மற்றும் கடின உழைப்பு என்பன இறப்பர் உற்பத்திக்கு உறுதுணையாக இருந்தன. இலங்கை, இந்தியா, பிரேசில், இந்தோனேசியா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளில் இறப்பர் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வந்தது. எனினும் மலேசியாவே இந்தத் துறையில் சிறந்து விளங்கியது. இறப்பருடன் தகர உற்பத்தியும் மலேசியாவின் தேசிய வருமானத்தின் ஊற்றுக்கண்ணாகத் திகழ்ந்தது. நாளடைவில் தகர உற்பத்தியிலும் பார்க்க இறப்பர் உற்பத்தியே மிகப்பெரிய தொழில்துறையாக வளர்ச்சி அடைந்தது.

மலேசியாவுக்கு இறப்பர் பயிர் கொண்டு வரப்பட்ட வரலாறு சுவாரசியமானது. பிரேசில் நாட்டின் அமேசன் காட்டுப் பகுதியில் இருந்து 1877 ஆம் ஆண்டு களவாகக் கொண்டு வரப்பட்ட 22 இறப்பர் மர விதைகளே மலேசியாவின் இறப்பர் பயிர் உற்பத்தியின் மூலம். ஆங்கிலேய தாவரவியல் நிபுணராகிய சேர் ஹென்றி விக்ஹாம் (Sir Henry Wickham) என்பவரே மலேசிய இறப்பர் உற்பத்தியின் தந்தையாவார். இவரால் கொண்டு வரப்பட்ட இறப்பர் விதைகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பணப் பயிரே உலகத்தின் 40 வீதமான இயற்கை இறப்பர் தேவையை உற்பத்தி செய்யும் அளவுக்கு மலேசியாவை வளரச் செய்தது.

போட் (Ford) நிறுவனத்தின் மோட்டார் கார் உற்பத்தியில் 1908 ஆம் ஆண்டு ரீ ரக கார்களின் [Model T Car of 1908] தயாரிப்பு அதி உச்சத்தில் இருந்தது. அமெரிக்காவின்



இந்தத் தொழிற்துறைக்கு டயர் உற்பத்திக்கான இயற்கை இறப்பர் மிகப் பெரிய அளவில் அப்போது தேவைப்பட்டிருந்தது. அதில் 40 வீதத் தேவையை மலேசியாவே ஈடு செய்திருந்தது. அந்த வகையில் 1919 ஆம் ஆண்டு உலகத் தேவையின் 50 வீதத்தை – 2 இலட்சம் டன் இயற்கை இறப்பரை மலேசியாவே ஏற்றுமதி செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த நாட்டின் உச்ச அளவாக 16 லட்சத்து 12 ஆயிரத்து 780 டன் இறப்பரை 1976 ஆம் ஆண்டு உற்பத்தி செய்திருந்தது. உரகளாவிய ரீதியில் இறப்பர் பாவனையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக மலேசியாவின் இறப்பர் தோட்டங்கள் 2.05 மில்லியன் ஹெக்டர் பரப்பளவில் இருந்து 1.2 மில்லியன் ஹெக்டர்களாகக் குறைந்துள்ளது. ஆனால் இறப்பர் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும். மலேசியாவின் இறப்பர் தரம் குறைவடையாமல் பேணி பாதுகாக்கப்படுகின்றது.

உலகில் எயிட்ஸ் நோய்த்தாக்கம் அதிகரித்திருந்த 1980கள் மலேசியாவின் இறப்பர் உற்பத்திக்கான பொன்னான காலமாகத் தொடர்ந்தது. எயிட்ஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கான தரமான இறப்பர் கையுறைகள் [Gloves], ஆணுறைகள் [Condoms] என்பவற்றை அதிக அளவில் மலேசியா உற்பத்தி செய்து வழங்கியது. அத்துடன் மருத்துவத்தில் மிக முக்கியத் தேவையாகிய சிறுநீர் நீக்கக் குழாய் [Catheter] உற்பத்தியிலும் மலேசியாவே முன்னணியில் இருந்தது. இதன் மூலம் அதிக அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்கின்ற நிலைமை பத்து ஆண்டுகள் – ஒரு தசாப்த காலம் தளர்வின்றி தொடர்ந்தது.

இறப்பர் உற்பத்தி அதிகரித்திருந்ததையடுத்து, மலேசிய இறப்பர் ஆய்வு நிறுவகம் [Rubber Reasearch Institute of Malaysia] என்ற பெயரில் ஆரம்பித்த நிறுவனத்தின் மூலம் உலக இறப்பர் பயிர் உற்பத்தியின் நவீன வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தது. பயிர் பீடைகளை எதிர்த்து வளர்ந்து அதிக இறப்பர் பாலை உற்பத்தி செய்யக் கூடிய இறப்பர் பயிர்கள்,

மிகுதி 19 ஆம் பக்கத்தில்...














# மலைக்க வைக்கும் மலேசியா




குளோன்கள் பல வகை முளை மூலவகைகள் இதன் மூலம் கண்டு பிடிக்கப்பட்டன.

உலகக் கைத்தொழில் புரட்சியாக பிளாஸ்டிக் உற்பத்தியும் பல்வகைத் தேவைகளுக்கான அதன் பயன்பாடும் இறப்பர் பாவனையை வெகுவாகப் பாதித்தன. இது மலேசியாவின் இறப்பர் தோட்டத்துறைத் தொழில்முறையையும் மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாக்கியது. இதனையடுத்து, இறப்பருக்குப் பதிலாக செம்பனைப் பயிர்ச்செய்கையில் மலேசியா தனது கவனத்தைத் திருப்பியது. செம்பனையில் இருந்து செய்யப்படுகின்ற பாமாயில் [Palm oil] எனப்படுகின்ற புல்லின எண்ணெய் உற்பத்தியை அதிகரித்து, இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட வருமான இழப்பை அந்த நாடு ஈடு செய்திருக்கின்றது.

## முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

ஆங்கிலேயர்களினால் 1870 ஆம் ஆண்டு நைஜீரியாவில் இருந்து அலங்காரத் தாவரமாக மலேசியாவுக்குக் கொண்டு வரப்பட்ட செம்ப





னையை 1917 ஆம் ஆண்டு மலேசிய அரசாங்கம் செலாங்கூர் பிரதேசத்தின் தென்னமரன் தோட்டத்தில் ஆரம்பத்தில் வர்த்தகப் பயிராகப் பயிர் செய்தது. அதனைத் தொடர்ந்து இறப்பர் மற்றும் தகர உற்பத்திக்குப் பதிலாக அதிக அளவில் செம்பனைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு, அதில் இருந்து சமையலுக்கான பாமாயில் உற்பத்தி செய்து தனது தேசிய வருமானத்தை அதிகரித்திருக்கின்றது. உலகின் பாமாயில் தேவையை ஈடு செய்வதில் இந்தோனேசியாவுக்கு அடுத்ததாக இரண்டாம் இடத்தில் இப்போது மலேசியா திகழ்கின்றது.

மலேசியா 1960 ஆம் ஆண்டு மிகப் பரந்த அளவில் செம்பனைப் பயிர்ச் செய்கையை விஸ்தரித்து பாமாயில் உற்பத்தியை அதிகரித்தது. செம்பனைப் பயிர்ச் செய்கை அதிகரிப்பினால் நாட்டின் இயற்கையைப் பேணுகின்ற வன வளத்தின் அளவு குறைந்து செல்வதை 2019 ஆம் ஆண்டு சுட்டிக்காட்டிய ஐரோப்பிய ஒன்றியம், செம்பனைப் பயிர்ச் செய்கையைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தியது. இதன் மூலம், வறிய மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு செல்வந்தவர்கள் முட்டுக்கட்டை போடும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் நடந்து கொள்வதாக மலேசியா பதட்டத்துடன் பதிலளித்திருந்தது.

மலேசியா தோட்டத் தொழிற்துறையைச் சார்ந்த தமிழ் மக்களே தமது கடின உழைப்பின் மூலம் அந்த நாட்டின் தேசிய வருமானத்திற்கான முதுகெலும்பாகத் திகழ்கின்றனர். அந்த மக்களின் வாழ்க்கையை ‘பால்மரக் காட்டினிலே....’ என்ற தமிழ் நாவல் மிக அற்புதமாகச் சித்தரித்திருக்கின்றது. தமிழகத்தின் தலைசிறந்த நாவலாசிரியராகிய அகிலனின் படைப்பாக இந்த மலேசிய





மண்வாசனை மிக்க நாவல் 1977 ஆம் ஆண்டு வெளிவந்தது. இது தமிழகத்தின் இளங்கலை மாணவர்களுக்கான [பி.ஏ., பி.எஸ்.சி] பாடப் புத்தகமாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசியத் தமிழர்கள் குறிப்பாக தோட்டத்துறைப் பிரதேச மக்கள் தமிழ் நாவல் இலக்கியத்தில் இந்த நாவலின் மூலம் இடம் பிடித்திருப்பது மட்டுமல்லாமல், அவர்கள் தமிழின் உலகளாவிய வளர்ச்சிக்கும் வித்திட்டிருக்கின்றார்கள் என்பது கூடுதல் சிறப்புத் தகவலாகும். மலேசியத் தமிழர்கள் மிகுந்த மொழிப்பற்று கொண்டவர்கள். இவர்களே முதன் முதலில் தமிழராய்ச்சி மாநாட்டை நடத்தி அதனை சர்வதேச அளவில் தொடர்ச்சியாக நடத்துவதற்கு வழி செய்திருந்தார்கள்.

மலேசியத் தமிழாரய்ச்சி மாநாடு மிகச் சிறப்பான நடந்தேறியதுடன், மலேசியத் தமிழை உலக மொழியாக அடையாளப்படுத்த உதவியது என்பது தமிழறிஞர்களின் கருத்து, தமிழராய்ச்சி மாநாட்டை நடத்தியதுடன் அவர்கள் நின்றுவிடவில்லை. தமிழ் இலக்கியத்துக்கும் கலை, கலாசாரப் பண்பாட்டிற்கும் அவர்கள் பெரும் பங்களிப்பு செய்து வருகின்றார்கள்.

தமிழ்நேசன், மலேசிய நண்பன், தமிழ்க்குரல், மக்கள் ஓசை, உதய சூரியன், தினக்குரல், நம் நாடு, தமிழ் மலர், தாய்மொழி போன்ற மலேசிய செய்திப் பத்திரிகைகள் தமிழ் மக்களின் தகவலறியும் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. இவற்றில் சில பத்திரிகைகள் குறுகிய காலத்தில் நின்றுவிட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலேசியாவில் 1876 ஆம் ஆண்டு தங்கை நேசன் என்ற பெயரிலான முதலாவது தமிழ் சஞ்சிகை வெளியிடப்பட்டதாக அந்த நாட்டின் இலக்கிய வரலாற்றுத் தகவல் ஒன்று கூறுகின்றது. வானம்பாடி, நாயகன், குயில், அரும்பு, இதயம், நயனம், பயனீட்டாளர் குரல், சக்தி, செம்பருத்தி போன்றவை மலேசிய சஞ்சிகைகளாகும்.

சஞ்சிகைகள், நாவல், சிறுகதை, கவிதை நூல்களை வாசிப்பதில் மலேசிய தமிழர்கள் ஆர்வமுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இதன்




காரணமாகத் தமிழகப் படைப்புக்கள் அதிகமாக அங்கு விற்பனை செய்யப்படுகின்றன. அந்த மக்களின் இலக்கியத் தாகத்திற்கும் வாசிப்பு அனுபவத்திற்கும் ஈடு கொடுக்கும் வகையில் ஞாயிறு பத்திரிகைகள் உட்பட சஞ்சிகைகளில் மாதாந்தம் 30க்கும் மேற்பட்ட சிறுகதைகள், பல கவிதைகள் என்பன வெளியிடப்படுகின்றன.

பல்வேறு சிறப்புக்களைக் கொண்டிருந்த போதிலும், நாடுகளுக்கே உரிய அரசியல் பிரச்சினைகள், இன முரண்பாடுகள் என்பவற்றின் தாக்கத்திற்கு மலேசியாவும் ஆளாகி இருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.



# தேடல்கள் தரும் சுவாரஷ்யங்கள்....

## மலேசிய மண்ணின் பல்வேறு பரிணாமங்கள்

இராவணன் மகள்











**மலேசியர்களுக்கு ஐந்து தேசிய கோட்பாடுகள் உள்ளன. அவை :-**

★ இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்
★ பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துதல்
★ அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாக கடைபிடித்தல்
★ சட்டம் முறைப்படி ஆட்சி நடத்துதல்
★ நன்நடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்

இது தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. அசல் மலாய் மொழியில் இருக்கும். இந்த தேசிய கோட்பாடை( மலாய் மொழியில்) உருவாக்கியதே ஒரு தமிழர்தான். அவர் பெயர் துன் வீதி சம்பந்தன். தற்போது இவர் பெயரில் ஒரு தமிழ்ப்பள்ளி, ஒரு சாலை ஏன் ஒரு கிராமமே இருக்கிறது.







மலேசியாவை சியூர்கா மகாணான் **(syurga makanan )** என்றழைப்பர். அப்படியென்றால் உணவுகளின் சொர்க்கம் என்று பொருள். இங்கு மலாய்காரர்கள், இந்தியர்கள், சீனர்கள், ஓரங் அஸ்லி ( காட்டுபகுதிகளில் வாழ்பவர்கள் ) என்று இன்னும் பல இனத்தவர் வாழ்வதால், அனைத்து வகையான உணவுகளும் இங்கு கிடைக்கும். மலேசியா உணவுக்கு பெயர்போன நாடு.

கினாபாலு மலை



கேமரன் மலை



சந்துரபோங்



மலேசியாவை மலையகம், மலையூர் மற்றும் மலைநாடு என்று அழைப்பதுண்டு. இதற்கு காரணம், இங்கு ஏகப்பட்ட மலைகளை காணலாம். கேமரன் மலை, கெண்டிங் மலை, கினாபாலு மலை , சந்துரபோங் மலை, லேடாங் மலை என்று பல மலைகள் இங்கு இருக்கின்றன.








உலகத்திலே மிகப்பெரிய முருகன் சிலை மலேசியாவில் பத்துமலையில் **(Batu caves)** உள்ளது. இதன் உயரம் 42.7 மீட்டர் ( 140அடி ). இதை உருவாக்குவதற்கு மூன்று ஆண்டுகள் பிடித்தன. கட்டுமானச் செலவு 25 இலட்சம் மலேசியா ரிங்கிட் ஆகும். 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புனிதத் திறப்புவிழா செய்தார்கள். இந்தச் சிலையின் திறப்பு விழாவின் போது அதற்கு 15 ஆயிரம் ரிங்கிட் மதிப்பிலான சாமந்திப் பூ மாலை சூட்டப்பட்டது. அந்த மாலை சுமார் ஒரு டன் எடையாகும். அதனால், பளு தூக்கும் இயந்திரத்தின் உதவியோடு அந்த மாலை முருகப்பெருமானுக்கு அணிவிக்கப்பட்டது. இச்சிலையை உருவாக்குவதற்கு 1,550 கன மீட்டர் பைஞ்சுடை **(cement)**, 250 டன் **GLS** கம்பிகள், தாய்லாந்திலிருந்து வரவழைக்கப்பட்ட 300 லிட்டர் தங்கக் கலவை பயன்படுத்தப்பட்டன.

# தேடல்கள் தரும் சுவாரஷ்யங்கள்....

## மலேசிய மண்ணின் பல்வேறு பரிணாமங்கள்

இராவணன் மகள்



மலேசியாவில் வருடந்தோறும் வெயில் மற்றும் மழை இருப்பதால், இங்கு அளவுக் கதிகமான வெப்பம் அல்லது குளிர்ச்சி இருப்பதில்லை. ஒரு மிதமான வெப்பமும், குளிர்ச்சியும் கலந்த நிலையில் இருக்கும். இதனால் இங்கு பல அரியவகை தாவரங் களும் விலங்குகளும் உள்ளன. அதில் ஓராங் ஹுட்டான் **(orang hutan)**. இது ஒரு குரங்கு வகையை சார்ந்தது ஆனால் இதனால் மனிதர்களுடன் நன்றாகவே தொடர் புகொள்ளவும், மனிதர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளவும் முடியும். ஓராங் ஹுட்டான் என்றால் காட்டு மனிதர்கள் என்று அர்த்தம்.



அருள்மிகு ஸ்ரீ ராஜகாளியம்மன் கோவில்.
உலகிலேயே முதல் கண்ணாடி கோவில்**(glass temple)** இதுதான்



சன்வே பிரமிட் **(sunway pyramid )**. இதனை நவீன எகிப்து என்று கூறுவார்கள்.



லங்காவித்தீவு **(pulau langkawi)**.
வெண்கல கழுகுச்சிலை இங்கு தனி அழகை கொடுக்கிறது.



உலகிலேயே மிக பெரிய பூவை இங்கு சரவாக் என்னும் மாநிலத்தில் காணலாம்.
இதனை புங்கா பக்மா **(bunga pakma )** மற்றும் ராபிலேசியா **( rafflesia)** என்றும் கூறலாம்.



முலு குகை
**(gua mulu )**
உலகிலேயே
மிக பழமையான
குகை இதுதான்.






லேம்பா பூஜாங் பள்ளதாக்கு (**lembah bujang** ).ஏறத்தாழ 4 ஆம் நூற்றாண்டு தொடங்கி 20-ஆம் நூற்றாண்டு வரை பூஜாங் பள்ளத்தாக்கு நாகரீகத்திற்கும் மேற்கு ஆசியா, ஆசியா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாகரீகங்களைச் சேர்ந்த மக்களுக்கும் இடையே கடல் வழியாக வாணிபம் நடந்து வந்தது. புயங்கம் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே 'பூஜாங்' என்ற சொல். புயங்கம் என்றால் பாம்பு என்று பொருள்படும். இப்பளத்தாக்கில் உள்ள மெர்போக்கு என்ற ஆறு பாம்பைப் போல் வளைந்திருப்பதால் அங்கு வாழ்ந்த தமிழர்கள் புயங்கம் என்று பெயர் வைத்தனர்.இதை சோழர்கள் கட்டியதாகவும் சொல்லப்படுகிறது ஆனால் அதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.



ஏ பாமசா கோட்டை (**AFamosa fort** ).
மலேசியாவில் போர்த்துகீசியர்கள் அமைத்த தற்காப்பு அரண்



# தேசத்தை கட்டியெழுப்பும் பணியில் தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் பாத்திரம்!



உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவராக 12 ஆண்டுகள் பதவி வகித்தவரும் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நிறுவுனருமான பி. பி. நாராயணன்

மலேசிய தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் தனிநபர் வருமானம் உயர்நிலையில் இருப்பதற்கு எமது சங்கம் நடாத்திய போராட்டம்தான் காரணம். அனைத்து தொழிலாளர்களது சம்பளமும் ஒரேமாதிரியானதாக இருக்கவேண்டும் என்பதில் தொடங்கி பல போராட்டங்களை நடாத்தி வந்தார்கள். நாடு சுதந்திரம் அடைந்தவுடன் இயற்ப்பட்ட சட்டங்களுள் தொழிலாளர்கள் நலனை முன்னிறுத்தியும் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன என்று கூறுகின்றாா் மலேசிய தமிழ் எழுத்தாளா் சங்கத்தின் முன்னாள் தலைவரும் சங்கத்தின் அயலகத் தொடர்புக் குழு தலைவருமான இராஜேந்திரன் பெருமாள்.

மலேசியாவில் தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கம் எவ்வாறான பங்களிப்பை வழங்கியது என்பது தொடா்பாக தெரிவிக்கும் போதே இதனை அவா் தெரிவிததார். அவா் மேலும் தெரிவித்தமை வருமாறு–

## ஆரம்பம்

1946ம் ஆண்டிற்கு முன்னர் தோட்டத்தொழிலாளர்கள் அனுபவித்த துன்பங்களை கண்டு வேதனைப்பட்டவர்கள் பலர் உண்டு. அவர்களுள் குறிப்பிடத்தக்கவராக பி.பி.நாராயணன் திகழ்ந்தார். அவர் அப்போது தோட்டத்தில் வேலை செய்யவில்லை. வேறொரு நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். தோட்டத் தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டு 11 பேரின் துணையோடு இந்த சங்கத்தை தோற்றுவித்தார்.

பின்னர் இதன் அவசியம் கருதி தேசிய சங்கமாக உருவாக்கப்பட்டது. தோட்டங்களில் வேலை செய்யும் எல்லாத் தொழிலாளர்களும் அதாவது நிர்வாக தரப்பை சேர்ந்தவர்களை தவிர்த்து ஏனைய எல்லாப் பணியாளர்களும் இச்சங்கத்தில் அங்கத்துவம் பெற்றனர்.

## சுதந்திரத்தில் பங்களிப்பு

இந்தச் சங்கம் தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வை மட்டுமே நோக்கமாக கொண்டு உருவாக்கப்படவில்லை. மனிதனுக்கு அடிப்படையான எல்லா அம்சங்களிலும் இச்சங்கம் கவனம் செலுத்தியுள்ளது. குறிப்பாக அடிப்படை மனித உரிமை வழங்கப்படவேண்டும் என்பதிலே




அதிக கவனம் செலுத்தி வந்தது. தோட்டத்தொழிலாளர்களின் அடிப்படை வசதிகளையும் இச்சங்கம் உறுதி செய்தது. அதுமட்டுமன்றி தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகளின் நலனிலும் கவனம் செலுத்தியது. அதாவது தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் தோட்டத்தொழிலாளர்களாகவே மாறக்கூடாது என்பதில் அதிக கவனம் செலுத்தினர். எடுத்துக்காட்டாக 1980–1990 வரை தோட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்ற மாணவிகளுக்கு சிறப்பான முறையில் உதவிகள் வழங்கப்பட்டது.

பொதுவாக தோட்டத்திலிருந்து உயர்கல்விக்கு சென்ற மாணவர்களுக்கு கல்விக்கடன் உதவி வழங்கினார்கள். ஆனால் 1980 ஆம் ஆண்டுகள் அதாவது பத்தாண்டுகள் முழுவதும் பெண் குழந்தைகளுக்கு கல்விக்கடன் உதவியாக இல்லாமல் உபகாரச் சம்பளமாக வழங்கினார்கள். தோட்டங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு செல்லும் மாணவர்கள் எதிர்நோக்கிய பெரும் சிக்கல் தங்குமிட வசதி. அன்றைய காலகட்டத்தில் மலேசிய பல்கலைக்கழகங்களில் தங்குமிட வசதிகள் மிகக்குறைவாகவே இருந்தன. பல்கலைக்கழகங்களை தவிர்த்து கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தங்குமிடவசதியே இருக்காது. அதனால் அந்தச் செலவுகளை ஏற்றுக்கொள்ளும் நிலையில் தோட்டப்புறத் தொழிலாளர் குடும்பம் இல்லை.

எனவே சில மாநிலங்களில் தங்குமிடவசதியை ஏற்படுத்தினார்கள். கோலாலம்பூரின் மையப்பகுதியில் P.P.N மாணவர் விடுதி உருவாக்கப்பட்டது.



இவையாவும் தோட்டத்தொழிலாள்ளின் வாழ்க்கையில் மட்டுமல்ல அவர்களின் குழந்தைகளின் எதிர்காலத்திற்கும் சுதந்திரம் தேவை எனும் நோக்கில் உருவாக்கப்பட்டவை.

ஆரம்பப்பள்ளியில் தேர்ச்சி பெறாமல் உயர் கல்வியை தொடரமுடியாமல் போனவர்களைத் அதிகம். அவர்கள் தோட்டத்தொழிலாளர்களாக மாறிவிடக்கூடாது என்பதற்காக கைத்தொழில் கற்றுக்கொள்வதற்கான கல்லூரிகளை சங்கம் தோற்றுவித்தது. நேரடியாக அவர்களே கல்லூரிகளை தொடக்கினார்கள். உண்மையாகச் சொல்ல வேண்டுமானால் அரசாங்கம் கூட அந்தக் காலகட்டத்தில் தொழில் பயிற்சி கல்லூரிகள் குறித்து அதிகமாக சிந்திக்கவில்லை.

## அரசியலில் தாக்கம்

சங்கத்தில் பதவி வகிப்பவர்கள் நேரடி அரசியலில் ஈடுடக்கூடாது என்பதை சங்கம் தன் சட்ட விதிகளில் ஒன்றாக நிறுவியிருக்கிறது. எடுத்துக்காட்டாக தோட்ட அளவில் தொழிற்சங்கத்தில் பொறுப்பு வகிப்பவர்கள் வட்டார அளவில் அரசியலில் உறுப்பினராக இருக்கலாம். ஆனால் பொறுப்புவகிக்கக்கூடாது. அதே போல் மாநில அளவில் பொறுப்பு வகிப்பவர்களும், தேசிய அளவில் பொறுப்பு வகிப்பவர்களும் அவ்வாறே அரசியலில் நேரடியாக பொறுப்பேற்கக்கூடாது என்பதில் சங்கம் உறுதியாக இருந்துவருகிறது.

சங்கத்திற்கு ஆதரவாக இயங்கும் கட்சிகளுக்கு ஆதரவு அளிப்பது, தோட்டத்தொழிலாளர் நலனுக்கு முன்னுரிமை அளிக்கும் அரசாங்கத்திற்கு ஆதரவு அளிப்பது என்பதை கொள்கையாக வைத்துள்ளார்கள்.அரசியலில் நேரடியாக ஈடுபடக்கூடாதென்றும், எந்தக்கட்சியை சார்ந்தும் இயங்கக் கூடாது என்பதிலும் உறுதியாக இருக்கிறார்கள்.

## தொழிலாளர் வாழ்க்கைத் தரம்

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது மலேசிய தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் தனிநபர் வருமானம் உயர்நிலையில் இருக்க இச்சங்கம் எவ்வாறு பாடுபடுகிறது?

இந்தச் சங்கம் நடாத்திய போராட்டம்தான் இதற்கு காரணம். அனைத்து தொழிலாளர்களது சம்பளமும் ஒரேமாதிரியானதாக இருக்கவேண்டும் என்பதில் தொடங்கி பல போராட்டங்களை நடாத்தி வந்தார்கள். நாடு சுதந்திரம் அடைந்தவுடன் இயற்றப்பட்ட சட்டங்களுள் தொழிலாளர்கள் நலனை முன்னிறுத்தியும் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு சட்டங்கள் உருவாக்கப்பட தோட்டத்தொழிலாளர் சங்கம் பிரதான காரணமாகும். அதில் டத்தோ கே.பத்மநாதன் என்பவர் குறிப்பிட்டு சொல்லத்தக்கவர்.



இராஜேந்திரன் பெருமாள்

இவர் தோட்டப் பாட்டாளியின் மகனாக இருந்தாலும் இளம்வயதிலே அரசாங்கத்தில் பணிபுரிந்துவந்தார்.அதுபோல டாக்டர் பி.பி நாராயணன் அவர்கள் மலேசிய தொழிற்சங்க தலைவராகவும் உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.எனவே உலகளாவிய நிலையில் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் அதற்கான தீர்வுகள் பற்றி அறிந்திருந்தமையால் அது குறித்த பல திட்டங்களை மேற்கொள்ளவும் முயன்றார்.அதற்கு அரசாங்கமும் ஆதரவாக இருந்தது. உதாரணமாக மலேசியாவில் தொழிலாளர் துறை அமைச்சராக இருந்த தான்சிரி வெ.மாணிக்கவாசகம் அவர்கள் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்கினார்.

“ தோட்டப் பாட்டாளியின் மகனாக இருந்தாலும் இளம்வயதிலே அரசாங்கத்தில் பணிபுரிந்துவந்தார். அதுபோல டாக்டர் பி.பி நாராயணன் அவர்கள் மலேசிய தொழிற்சங்க தலைவராகவும் உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.எனவே உலகளாவிய நிலையில் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் அதற்கான தீர்வுகள் பற்றி அறிந்திருந்தமையால் அது குறித்த பல திட்டங்களை மேற்கொள்ளவும் முயன்றார்.அதற்கு அரசாங்கமும் ஆதரவாக இருந்தது. ”

# சுதந்திர மலேசியாவின் சிற்பி துன் வீ.தி சம்பந்தன்


முனைவர் மு.சங்கர்



## சுதந்திரப் பொன்மகன் நூற்றாண்டு நாயகனின் நீங்காத நினைவலைகள்

மலாயா மண்ணில் 1960–களில் தமிழர்தம் வாழ்வில் பல இன்னல்கள் சிக்கல்கள். மலையென நம்பியிருந்த மானத்துடன் வாழ்ந்திருந்த தோட்டங்கள் [எஸ்டேட்] துண்டாடப்பட்ட காலம். மலாயாத் தமிழினம் தன்னம்பிக்கை இழந்து ஆதரிக்க ஆளில்லாமல், தத்தளித்த நேரம். எங்கள் தோட்டம் என உரிமை கொண்டாடியவர்களின் தோட்டங்கள் விற்கப்பட்டன. வேலை இல்லை குடியிருக்க வீடில்லை. அப்போதுதான், வராது வந்த மாமணிபோல, அவர்களுக்கு நம்பிக்கையளித்து; வாழ்க்கை உண்டு வலுவிழக்க வேண்டாம் என்று தோட்டப் பாட்டாளிகளின் இதயம் நிறை தலைவராக நிமிர்ந்து நின்றவர் துன் வீ.திருஞானசம்பந்தன்.

குருவிக்கும் கூடு உண்டு நமக்கொரு வீடில்லை, ஏழையாக இருந்தாலும் கோழையாக இருக்காதீர்கள், ஒன்றுபட்டு உயர்வோம், துணிவே துணை என்ற நம்பிக்கை முழக்கங்களோடு பத்து பத்து வெள்ளியாய் திரட்டி தோட்டப்பாட்டாளிகளை தலைநிமிரச் செய்ய தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தை தோற்றுவித்தார். துண்டாடப்பட்ட தோட்டங்களை வாங்கினார். இன்னலுற்ற மக்களை இன்புறச் செய்தார். 1961 முதல் 1969 வரை, இரப்பர், தென்னை, தேயிலை, செம்பனை ஆகியவற்றைக் கொண்டுவிளங்கிய 22 தோட்டங்களை கொள்முதல் செய்து மிகப்பெரும் சாதனையைப் படைத்தவர் துன் வீ.தி சம்பந்தன். இன்று தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம் மலேசியாவின் மிகச் சிறந்த கூட்டுறவுக் கழகங்களுள் ஒன்றாய் செயல்பட்டு வருகிறது.

நெடிதுயர்ந்த உருவம், புன்னகை மிக்க முகம், துணிவுடைமை, கொள்கைப்பிடிப்பு, மக்கள் நலனே தமது நலம் என்ற மனப்பான்மை எனும் பண்புகளைப் பெற்று தலைவர்களுள் மாறுபட்டவராகத் திகழ்ந்தவர் துன் சம்பந்தன். தம்மைப் பற்றி



துன் சம்பந்தனார் அஞ்சல் தலை


நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு விழா - பேரரசருடன் துன் சம்பந்தன்



தலைநகரின் துன் சம்பந்தன் சாலை

யும் தம்முறவு பற்றியும் பெரும்பாலும் சிந்திக்கும் தலைவர்களிடையே, தம்மை மறந்து மக்களைப் பற்றி மட்டுமே சிந்தித்த சீரிய தலைவர் அவர். மக்களின் துயர்துடைக்க தம் வாழ்க்கை வசதிகளை அர்ப்பணித்தவர். இருந்ததையும் இழந்து இடுக்கண்பட்டவர். ஆதலால், மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்தவர்.

தமிழகம் அண்ணாமலைப் பலகலைக்கழகத்தில் படித்தவர் என்பதால், இயற்கையாகவே மொழிப்பற்று அவரைப் பற்றிக் கொண்டது . தமிழ் மொழி தவறாக உச்சரிக்கப்பட்டாலோ, தவறாகக் கையாளப்பட்டாலோ பொறுத்துக் கொள்ள முடியா


துன் சம்பந்தன் பெயரில் தலைநகரில் ஒற்றைத்தடத் தொடர்வண்டி நிலையம்

தவர். உடனடியாக அவரைத் தொடர்பு கொண்டு அவற்றைத் திருத்தியவர். தமிழுகாக முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை கோலாலம்பூரில் அரங்கேற்றியவர். மலாயாப் பல்கலைக்கழகத்தின் தனிநாயக அடிகளாரோடு இணைந்து 1966 ஏப்ரல் 16–ஆம் நாள் முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுத் தொடக்க விழாவில் , மலாயாவின் முதல் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனத் தமிழிலேயே முழங்கி மாநாட்டைத் அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைக்கக் காரணமாயிருந்தவர் துன் சம்பந்தனார்.

1919–ஆம் ஆண்டு பேரா மாநிலத்தில் சுங்கை சிப்புட்டில் ஜூன் திங்கள் 16–ஆம் நாள் வீராசாமி – செங்கம்மாள் தம்பதியருக்கு இரண்டாவது குழந்தையாகப் பிறந்தவர் திருஞானசம்பந்தன். சுங்கை சிப்புட்டில் தொடக்கக் கல்வியையும், கோல கங்சார் 'கிளிப்போர்ட்' உயர்நிலை ஆங்கிலக் கல்வியை முடித்து தமிழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மேற்கல்வியைப் பெற்றார். அங்கு மாணவர் சங்க நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்கேற்ற சம்பந்தன், காந்தியின் கொள்கையால் ஈர்க்கப்பட்டார்.

1946–இல் மலாயா திரும்பிய இவர், சமூகப் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். தந்தையாரின் மிகப் பரந்த தோட்டங்களையும் இதர சொத்துகளையும் நிர்வகித்த அதேவேளை,

1950–இல் சுங்கை சிப்புட்டில் மகாத்மா காந்தி கலாசாலையை நிறுவும் பணிகளில் ஈடுபட்டார். அப்போது அவர் சுங்கை சிப்புட் இந்தியர் சங்கத் தலைவரகாவும் இருந்தார். 1954–இல் அந்த கலாசாலையை, ஜநா தலைவராக இருந்த இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவின் சகோதரியான விஜயலட்சுமி பண்டிட் அவர்களைக்கொண்டு திறந்து வைத்தார்.

1955–ஆம் ஆண்டு, மலாயா இந்தியர் காங்கிரசின் [ம.இ.கா] ஐந்தாவது தேசியத் தலைவராக திருஞானசம்பந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டார். மலாயாவாழ் இந்திய சமூகத்தினரில் ஏறக்குறைய 90 விழுக்காட்டினர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு விளங்கிய காரணத்தால், ம.இ.கா–வில் தமிழைப் அதிகாரப்பூர்வ மொழியாகக் கொண்டு வந்தார்.

1955–ஆம் ஆண்டு மலாயாக் கூட்டரசுக்கென்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் கிந்தா உத்தாரா




தொகுதியில் நின்று பெரும் வெற்றி பெற்று; மலாயாவின் முதல் தொழிலாளர்அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

1956 மே 21–ஆம் நாள் மூவாரில் சம்பந்தனார், உமாசுந்தரி திருமணம் நடந்தது. அவர்களின் தவப்புதல்வியாய் தேவகுஞ்சரி பிறந்தார். [தற்போது அவர் வழக்கறிஞராக உள்ளார்]


கோலாலம்பூரில் துன் சம்பந்தன் மாளிகை

மலாயாவின் முதல் சுதந்திரப் பேச்சுகளில் கலந்துகொள்ளவில்லையாயினும், 1957 பிப்ரவரி – மே மாதங்களில் நடைபெற்ற அடுத்தடுத்த பேச்சுகளில் கலந்து கொண்டு மலாயாவின் சுதந்திரத்துக்கு வழியமைத்த தந்தையருள் ஒருவராகத் திகழ்கிறார் திருஞானசம்பந்தன்.

1957 ஆகஸ்ட் 31–ஆம் நாள் மலாயா பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்றது.

தொழிலாளர் அமைச்சராக இருந்த காலத்தில், பெரும்பாலான உயர்நிலைப் பதவிகளை ஆங்கிலேயர் வசமிருந்து மலாயா வாழ் மக்கள் வகிக்கும்படி செய்தார். பழமை வாய்ந்த தொழிலாளர் சட்டங்களை காலத்துக்குத் தக்கவாறு திருத்தம் செய்தார்.

1957 மலாயா சுதந்திரம்பெற்றவுடன், சுகாதார அமைச்சராகப் பொறுப்பேற்றார். மருத்துவர் பற்றாக் குறையைத் தீர்த்து தாதியர் எண்ணிக்கையை அதிகரித்துமகப்பேறு மருத்துவமனை, பல்கலைக்கழக மருத்துவமனை ஆகியவற்றை நிறுவி மருத்துவ வசதிகளை மேம்படுத்தினார். நாட்டின் முதலாவது இரத்த வங்கியை நிறுவி அங்கு முதலாவதாக இரத்ததானம் செய்தவரும் இவர்தான்.

அதன் பிறகு 1969 வரை பொதுப்பணி, அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சராகப் பொறுப்பேற்றார். நாடு முழுவதும் உள்ள நகரங்களையும் புறநகர்ப்பகுதிகளையும் இணைக்கும் நெடுஞ்சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை நிர்மாணித்தார். தேசியப் பள்ளிவாசல், தேசிய அருங்காட்சியகம், நாடாளுமன்றக் கட்டடம், சுபாங் அனைத்துலக விமான நிலையம் ஆகியவற்றை உருவாக்கினார். அஞ்சல்துறையில் நடமாடும் அஞ்சலகம், சிற்றூர்களில் அஞுசலகம், தொலைப்பேசி, தொலைக் காட்ட்சி ஆகிய தொலைத்தொடர்பு வசதிகளை நவீனப் படுத்தினார்.

சம்பந்தனார் தம் வாழ்நாள் முழுவதும் நாட்டு மக்கள் நலன் கருதி தன்னலமற்றத் தொண்டாற்றினார். உண்மையும் நியாமும் வாய்ந்த கொள்கைகளை இறுதிவரை கடைப்பிடித்தவர் அவர். வெள்ளை சட்டை வெள்ளை வேட்டியிலேயே மலேசியாவை வலம் வந்தவர்.

மலேசியாவின் மிக உயரிய விருதான 'துன்' விருது வழங்கி சிறப்பிக்கப்பட்ட முதல் மலேசியத் தமிழர் இவரே.

1971–இல், மலாயாப் பலகலைக்கழகம் இவருக்கு மதிப்புறு முனைவர் [கௌரவ டாக்டர்] பட்டம் வழங்கி சிறப்பித்தது.

மலேசிய இந்திய சமுதாயத்தின் மாமனிதரான துன் டாக்டர் வீ.தி.சம்பந்தன் 18 மே 1979–இல் அமரரானார்.

மலேசியா நாட்டை உருவாக்கிய சிற்பிகளில்ஒருவராகவும்; சுதந்திர உடன்பாடு, மலேசியா உருவானதற்கான உடன்பாடு ஆகியவற்றில் பெரும் பங்காற்றி தேசியத் தலைவர்களுள் ஒருவராகவும் எல்லா இனங்களும் போற்றும் இன்முகத் தலைவராகவும் வலம் வந்தவர் துன் சம்பந்தன்.

16 ஜூன் 2019 துன் சம்பந்தனாரின் நூற்றாண்டு அனுசரிக்கப்பட்டது.

இந்த மலேசியத் தமிழரை; உலகத் தமிழ்த் தலைவராகப் ஏற்றுப் போற்றவேண்டிய முனைப்பு மேற்கொள்ளப்படவேண்டும். சீரிய தலைவரின் சிறந்த பண்புகள் உலகத் தமிழரிடையே மட்டுமின்றி உலக மக்கள் எல்லாரிடத்தும் சென்றடைய வேண்டும். குறிப்பாக இளையோர் இவரை தெரிந்து ..... அவரின் நல்வழியில் நடக்க வேண்டும். உந்துதலாகக் கொள்ள வேண்டும்.



# மலேசியாவின் ஆன்மாவான தேசியக்கொடி!

மலேசியா எனும் பல்லினம் கொண்ட வளமிக்க நாடு இவ்வாண்டு தனது 65 ஆம் தேசிய நாளை மலேசியக் குடும்பமாய் இணைந்து வலுப்படுவோம்எனும் கருப்பொருளுடன் கொண்டாடுகிறது. வேற்றுமையில் ஒற்றுமை காணும் மலேசிய நாட்டின் உயரிய சின்னங்களுள் ஒன்றான மலேசியக் கொடி, நாட்டின் இறையாண்மையையும் தன்னகத்தே கொண்டுள்ள நிலப்பரப்பின் சிறப்புகளையும் தன் வடிவத்தில் தாங்கி நிற்கிறது. நால் வண்ணத்தில் ஒரு மலேசியர் எண்ணங்களில் நாளும் விதைக்க வேண்டிய நாட்டுப்பற்றை மலேசிய தேசியக் கொடி கொண்டிருப்பதால், மலேசியாவின் தேசிய நாளில் அதைப்பற்றி சற்று சிந்திப்போம் வாரீர்!



**சிவம் தமிழ்ச்செல்வம்**
**செய்தியாளர்**
**மலேசிய வானொலி தொலைக்காட்சி**
**முனைவர் பட்ட ஆய்வாளர், மலாயாப் பல்கலைக்கழகம்**

1949 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் நாள் மலாய் ஆட்சியாளர்கள் மன்றம் நடத்திய மலாய் கூட்டரசின் கொடியை வடிவமைக்கும் போட்டியில் 373 வடிவமைப்பாளர்கள் பங்கேற்ற வேளை, இறுதியில் மூன்று படைப்புகள் மட்டுமே இறுதி செய்யப்பட்டன. ஜொகூர் மாநிலத்தைச் சேர்ந்த முகமட் பின் ஹம்சா என்பவர் வடிவமைத்த கொடியே வாகை சூடியது. ஆனால் இப்போது நாம் பார்க்கும் தேசியக் கொடி சில காலக்கட்டங்களில் வடிவமைப்பில் திருத்தம் செய்யப்பட்டதாகும். தேசியக் கொடியில் காணும் பிறையும் நட்சத்திரமும் வெள்ளை நிறத்திலிருந்து மஞ்சள் நிறத்துக்கு மாற்றப்பட்டு ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரால் 1950 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டு மலாய் கூட்டரசின் கொடியாக சிலாங்கூர் அரண்மனையில் முதன் முதலாக ஏற்றப்பட்டது.

அதன் பின்னர் 1977 ஆகஸ்ட் 31 இல் மலாயா பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் அடைந்த போது, மலாயாவின் தேசியக் கொடி நள்ளிரவு 12 மணிக்கு நாட்டுப் பண் ஒலிக்க பொதுவில் முதன் முதலாக ஏற்றப்பட்டது. சிவப்பு, வெள்ளை என 11 நேர் வரிசைக் கொண்ட பட்டைகள் இருந்த தேசியக் கொடியில், 1963 செப்டம்பர் 16 ஆம் நாள் சபா, சரவாக் மற்றும் சிங்கப்பூர் ஆகியவை கூட்டரசில் இணைந்த போது 14 ஆக கூட்டப்பட்டதோடு மலாயா எனும் சுதந்திர நாட்டுக்கு மலேசியா என பெயரிடப்பட்டது. அதன் பின்னர் 1997 ஆம் ஆண்டு 40 ஆம் தேசிய நாள் கொண்டாடப்பட்டபோது மலேசிய தேசியக் கொடிக்கு ஜாலுர் கெமிலாங் என பெயரிடப்பட்டது.

தேசியக் கொடியில் உள்ள பிறை மலேசிய நாட்டின் அதிகாரப்பூர்வ சமயம் இஸ்லாம் என்பதையும், 14 கூர்முனைகளைக் கொண்ட நட்சத்திரம் 13 மாநிலங்களையும் 1 கூட்டரசுப் பிரதேசத்தையும் குறிக்கிறது. மஞ்சள் நிறம் அரசரையும்; நீல நிறம் பல்லின மக்களிடையே நிலவும் ஒற்றுமையையும்; சிவப்பு துணிவையும் வெள்ளை புனிதத்தையும் குறிக்கிறது. மலேசியர் யாவரும் நாட்டுப்பற்று உணர்வோடு என்றும் இருக்க மலேசிய தேசியக் கொடி அதன் தனித்துவத்தோடு 65 ஆண்டுகளாக நாட்டிலும் உலக அரங்கிலும் ஒவ்வொரு மலேசியர் மனத்திலும் பட்டொளி வீசிப் பறந்துக் கொண்டிருக்கிறது.

## சுதந்திர மலேசியா

**(விளம் விளங்காய்- விளம் விளம் விளங்காய்)**

மலையது சூழ்ந்திருக்க- எழில்
வளமதில் செழித்தநல் மலைசியமாம்
அலையது கரைதழுவ - அதன்
அழகிய இயற்கையும் மனங்கவர
நிலவது முகிலுடனே - நலம்
நீடிய காதலில் திளைத்திருக்க
தொலைந்திடும் மனமதுவும் - கதிர்
தோன்றலில் மகிழ்ந்தெழும் நாடிதுவே!

நாடிது வளம்பெறவும் - நம்
நலமது மணமுடன் மலர்ந்திடவும்
கூடிடு நல்வழியில் - தேவை
கோரிநீ முன்னெழு புதுவழியில்
தேடிடு சுதந்திரத்தை - ஊர்த்
தெருவிலும் கட்டிடு நம்கொடியைப்
பாடிடு பண்ணதையும் - ஒளிப்
பரவச மாகிடும் மலைசியமே!

மலைசியம் நிலைபெறவே - தன்
மக்களின் சீரிய நற்பணியும்
தலைவனின் திறத்தினிலும் - இத்
தரணியில் ஒற்றுமை தழைத்திடுமே
புலையரும் ஒழிந்திடவே - பெரும்
புனிதமும் சூழ்ந்திடும் நாட்டினிலே
விலைமதிப் பற்றதொரு - நல்
விடியலும் மலர்ந்தது சுதந்திரமாய்!

சுதந்திர நாட்டினிலே - நாம்
சுகத்துடன் வாழ்ந்திடல் பெரும்பேறாம்
மதம்சில இனம்பலவாய் - நாளும்
மகிழ்வுடன் உறவெனக் கூட்டுறவாய்
இதமுடன் இறையருளில் - என்றும்
இனிதென வளமதை அனுபவித்துச்
சுதந்திர மலையகத்தில் - நாம்
சுந்தரத் தமிழுடன் ஓங்கிடுவோம் !



**முனைவர் சரஸ். பினாங்கு**

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# ஒற்றைக்கொம்பன் யானையின் தனிக்காட்டு இராஜாங்கம்

அரகலிய போராட்டம் கலைந்துபோனமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று: அதற்கு எதிராக ரணில் முன்னெடுத்த ஒடுக்குமுறைகள். படைகளையும், சட்டங்களையும் அவர் கடுமையாகப் பயன்படுத்தினார். மனித உரிமைகள் குறித்த கரிசனைகளை கவனத்திற்கொள்வதாகச் சொல்லிக் கொண்டே அதற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

இரண்டாவது: போராட்டம் தீவிரமடைவதற்கு காரணமாக இருந்தது அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை உயர்வும், அவற்றுக்குக் காணப்பட்ட தட்டுப்பாடும். இவைதான் மக்களை வீதியில் இறக்கியது.



ரணில் அதிகாரத்துக்கு வந்த பின்னர் தட்டுப்பாடு பெருமளவு குறைந்திருக்கின்றது. விலைவாசியும் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. இந்த நிலையில் மக்கள் சீற்றமடைந்து வீதிகளில் இறங்குவதற்கான காரணங்கள் இல்லாமல் போயுள்ளன. அதனால் தான் ஓகஸ்ட் ஒன்பதாம் தேதி முன்னெடுக்கப்பட்ட போராட்டம் படுதோல்வியல் முடிவடைந்தது. ரணிலின் செல்வாக்கை இது ஓரளவு அதிகரித்திருக்கின்றது.

அரசியல் ரீதியாக சர்வகட்சி அரசு என்பது இப்போது இல்லாமல் போயுள்ளது. தேசிய அரசை அமைக்கப்போவதாக ரணில் இப்போது சொல்கின்றார். இதனைப் பயன்படுத்தி அமைச்சர் பதவிகளை முன்வைத்து எதிரணியினரை பிளவுபடுத்தும் உபாயம் ஒன்றை ரணில் இப்போது முன்னெடுக்கின்றார். இதனால் எதிரணிகள் பலவீனப்பட வாய்ப்புள்ளது. இந்த நிலையில், அடுத்த வருடத்தில் – அதாவது ஒரு வருடம் முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தலை மொட்டு அணியின் ஆதரவுடன் நடத்தினால், சஜித் தடுமாறுவார். ரணிலுக்கான வெற்றிவாய்ப்பு அதிகமாக இருக்கும். மேற்கு நாடுகளும் இதனை விரும்பலாம். இதற்கான உபாயம் ஒன்றை வகுத்து ரணில் விக்கிரமசிங்க இப்போது காய்களை நகர்த்திக் கொண்டு இருக்கின்றார் .




# மனிதவள அமைச்சர் மற்றும் ம.இ.கா தேசியத் துணைத்தலைவர் மாண்புமிகு டத்தோ ஸ்ரீ எம்.சரவணன் அவர்களின் சுதந்திர தின வாழ்த்துச் செய்தி

மலேசியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த 65ஆவது சுதந்திர தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மலேசியாவில் மட்டுமன்றி, மலேசியர்கள் எனும் அடையாளத்துடன் உலகின் வெவ்வேறு இடங்களில் வசிக்கும் அனைத்து மலேசியர்களுக்கும் இவ்வேளையில் சுதந்திர தின நல்வாழ்த்துகள்.

நம்மிடையே ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் என்ற பிணைப்பு நிலைத்திருக்க வேண்டும். மலேசியக் குடும்பமாக, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, புரிந்துணர்வோடு ஒன்று பட்டு வாழ்வோம். தொற்று காலத்திலும், பேரிடர் காலங்களிலும் இனம், மொழி, மதங்களைக் கடந்து ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டது போல இனி வரும் காலங்களிலும் ஒற்றுமையாக இருந்து, வருவதை எதிர்கொள்வோம். மலேசியாவிற்குச் சுதந்திரம் வாங்கியதில் பல்லின மக்களின் ஒற்றுமையும் ஒரு முக்கிய கூறு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒற்றுமையாய் இருந்தால் எதையும் சாதிக்கலாம்.

அதே வேளையில் இந்தியர்கள் நாம்



அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே நமக்கான தேவைகளைக் கேட்டுப் பெற முடியும். ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல நாம் பிளவுபட்டு இருந்தால் நமக்குதான் நஷ்டம். எனவே தெளிவான சிந்தனையுடன் சிந்திப்போம், செயல்படுவோம். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

*எண்ணிய முடிதல் வேண்டும்*
*நல்லவே எண்ணல் வேண்டும்*
*திண்ணிய நெஞ்சம் வேண்டும்*
*தெளிந்த நல்லறிவு வேண்டும்*
*மெர்டேக்கா மெர்டேக்கா மெர்டேக்கா*

*சுதந்திர தின வாழ்த்துகளுடன்,*

*மக்கள் நலன்பேணும் மனிதவள அமைச்சு!*
*உங்கள் நலன்பேணும் உங்களில் ஒருவன்!*

**டத்தோ ஸ்ரீ எம்.சரவணன்**
**மனிதவள அமைச்சர்**
**ம.இ.கா தேசியத் துணைத்தலைவர்**

# மலேசியக் குடும்பமாய் இணைந்து வலுப்படுவோம்

65ஆம் ஆண்டு தேசிய நாள் கொண்டாட்டத்தில் மலேசியா திளைத்திருக்கிறது. பெருந்தொற்றுப் பரவல் காரணமாக ஈராண்டுகளாக தேசிய நாள் பேரளவில் கொண்டாடப்படாத நிலையில், இவ்வாண்டு, கொண்டாட்டங்கள் களை கட்டியிருக்கின்றன.

'மலேசியக் குடும்பமாய் இணைந்து வலுப்படுவோம்' என்ற கருப்பொருளுடன் இவ்வாண்டுக்கான தேசிய நாள் அனுசரிக்கப் படுகிறது. ஆகஸ்ட் முதல் நாள் தொடங்கி, தேசியக் கொடியை பறக்கவிடும் இயக்கமும் நடைபெற்று வருகிறது. 'மெர்டேக்கா ஊர்வலம்'' என்ற சுதந்திர நாள் வாகன அணி ஊர்வலமும் நாடு முழுவதும் சென்று கொண்டிருக்கிறது. தேசிய உணர்வையும் மலேசியக் குடும்பத்திடையே நாட்டுப் பற்று உணர்வையும் வலுப்பெறச் செய்யும் நோக்கில் இந்த ஊர்வலம் நடைபெறுகிறது.

வேற்றுமையில் ஒற்றுமை காணும் தனிச்சிறப்பைக் கொண்டுள்ள மலேசியா, 1957 ஆகஸ்ட் 31-ஆம் நாள் பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்றது. யூனியன் ஜேக் கொடி இறக்கப்பட்டு; மலேசியக் கொடி [மலாயாக் கொடி] பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கியதும் மலேசியர்களை விடுதலைக் காற்று அரவணைத்துக்கொண்டது. அன்று தொடங்கிய வெற்றிப்பயணம் இன்றும் தொடர்கிறது, இனியும் தொடரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இந்த செய்தி எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், தோக்யோவில் நடைபெறும் உலகப் பூப்பந்துக் கிண்ணப் போட்டியில் மலேசிய ஆடவர் இரட்டையர் இந்தோனிசியாவை வீழ்த்தி 2022 உலக வெற்றியாளராக அறிவிக்கப்பட்டனர். பீடு நடை போட்டு வரும் மலேசியாவின் வெற்றி வரிசையில் இது ஆக அண்மையதாகும்.

இந்த வெற்றிகளுக்கு, சுதந்திரம் மூலம் அடித்தளமிட்ட



**முனைவர் மு.சங்கர்**

**முத்த செய்தியாளர்**
**மலேசிய வானொலி தொலைக்காட்சி**

விடுதலைத் தலைவர்களை இன்றைய இளம் மலேசியர்கள் என்றும் மறக்கலாகாது. சுதந்திரத் தந்தை துங்கு அப்துல் ரஹ்மானுடன் கரம் கோர்த்து சுதந்திரத்துக்கு பாடாற்றிய துன் வீ. திருஞானசம்பந்தன், துன் தான் சென் லோக் ஆகியோருடன் இதர தலைவர்களும் என்றென்றும் போற்றப்பட வேண்டும். அவர்களின் அர்ப்பணிப்பு எதிர்காலத் தலைமுறைக்கு உந்துதலாக இருக்க வேண்டும்.

காடாகக் கிடந்த மலையகத்தை நாடாக்க, உதிரத்தை வியர்வையாகச் சிந்திய மலேசிய இந்தியர்கள் [தமிழர்கள்], தேசியப் பண்ணில் இடம்பெற்றுள்ள 'என் உதிரம் சிந்திய மண்' என்ற வரிகளைத் தங்களுக்கானதாகக் கொண்டு; நாட்டுக்கான தங்கள் அர்ப்பணிப்பைத் தொடர்கின்றனர், என்றும் தொடர்வர் என்பது மறுக்கவியலாத உண்மை.

மலேசியா, உலகம் போற்றும் உயர்வரிசையில் தனியிடம் பிடிக்க உறுதியேற்க உரிய தருணம் இந்த தேசிய நாள். உயர்வை உள்ளுவோம், மலேசியக் குடும்பமாய் இணைந்து வலுப்படுவோம்.

# நல்லிணக்கம் தான் சுதந்திர மலேசியாவின் அடையாளம்!

மலேசியா விடுதலை அடைந்து 65 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

சுதந்திர மலேசியாவில் பிறந்தவன் என்கிற மகிழ்வு இன்றும் இருக்கிறது.

சிறுவயதில் என் தந்தை ஒரு நாள் இப்படி சொன்னார்.

''நாடு அடிமையாக இருந்தபோது பிறந்தவர்கள் நாங்கள் பிறந்தோம்.

சுதந்திரம் அடைந்த பிறகு நீ பிறந்தாய். எப்போதுமே சுதந்திர வேட்கை உனக்குள் இருக்க வேண்டும்'' என்பார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான உருவான தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தில், தோட்ட அளவிலும் மாநிலம், தேசிய அளவிலும் பொறுப்பேற்று, தொழிலாளர்களின் நலனுக்காக போராடியவர் என் தந்தை. எண்ணற்ற இன்னல்களையும் அனுபவித்தவர்.

எனவே, அவருடைய சிந்தனை தோட்டத் தொழிலாளர்களுக்கான விடுதலை குறித்தே இருந்தது.

1957ஆம் ஆண்டு பிரிட்டிஷாரிடம் மலாயா சுதந்திரம் அடைந்தது.

ஆனாலும், பெரும்பான்மையான தமிழர்கள் வாழ்ந்த ரப்பர் தோட்டங்களுக்குள் சுதந்திரக் காற்று நுழைய நீண்ட காலம் எடுத்தது.

தோட்டங்கள் வெள்ளையர்களின் சொத்தாக இருந்தன. அந்தத் தோட்டங்களில் பணியாற்றியவர்களுள் ஏறக்குறைய 98% தமிழர்கள்.

நாடு சுதந்திரம் அடைந்து விட்டாலும் தோட்டங்களில் வெள்ளையர்களின் ஆட்சியே தொடர்ந்தது.

தொழிலாளர்களின் நன்மையை கருத்தில் கொண்டு அவர்களுக்கான தேவைகளுக்காக வெள்ளையர்களிடம் போராட வேண்டிய அவசியம் தொடர்ந்தது.

இந்தப் போராட்டத்தில் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் மிகப்பெரிய பங்களிப்பை செய்திருக்கின்றது.

தோட்டத் தொழிலாளியாகவும் அந்த தொழிலாளர்களுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்து கொண்ட ஒருவரின் மகனாக பிறந்த காரணத்தினால், நாட்டு சுதந்திரத்தையும் பெரும்பான்மையான தமிழர்களின் சுதந்திரத்தையும் தனித் தனியாகப் பிரித்துப் பார்க்



**இராஜேந்திரன் பெருமாள்**
**சங்கத்தின் அயலகத் தொடர்புக் குழு தலைவர்**

கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

எனவேதான் நான் எப்பொழுதும் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மீது பற்றும் விசுவாசமும் கொண்டவனாக இருப்பேன்.

நாட்டுக்கான சுதந்திரத்தை தேசத் தந்தை துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களின் தலைமையிலான மூத்த அரசியல்வாதிகள் பெற்றுக் கொடுத்தார்கள்.

சுதந்திர மலாயாவில், ரப்பர் தோட்டங்களில் வேலை செய்த தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறிப்பாக, பெரும்பான்மையான தமிழர்களுக்கு சுதந்திரத்தையும் அடிப்படை மனித உரிமையையும் பெற்றுக் கொடுத்தவர் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அன்றைய பொதுச் செயலாளர் டாக்டர் பி.பி. நாராயணன் என்பது நன்றிக்குரிய வரலாறு.

1969 ஆம் ஆண்டில், தோட்டத் தொழிலாளர்கள் இன்னொரு பூகம்பத்தில் சிக்க வேண்டிய இடர்பாடு ஏற்பட்டது.

1969 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெள்ளையர்கள் தங்கள் தோட்டங்களை எல்லாம் விற்றுவிட்டு நாடு திரும்ப முற்பட்டனர்.

பெரிய தோட்டங்களை மொத்தமாக வாங்குவதற்கு முதலீட்டாளர்கள் இல்லை.

சிலர் அத்தோட்டங்களை வாங்கி சின்னச் சின்ன நிலமாக துண்டாடி விற்றனர்.

500, 1000 ஏக்கர் தோட்டங்களில் 100, 200, 300 என குடும்பம் குடும்பமாக வாழ்ந்த தமிழர்கள் வேலையையும் குடியிருப்பையும் இழந்து தோட்டங்களை விட்டு வெளியேற வேண்டிய அவலம் ஏற்பட்டது.

அந்தக் காலகட்டத்தில் மலேசியர் இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் அமைச்சராகவும் பொறுப்பேற்று இருந்த துன் சம்பந்தன் அவர்கள் தோட்டங்களை வாங்கி தொழிலாளர்களின் துயரத்தை துடைக்க முற்பட்டார்.

தோட்டத் தொழிலாளர்களிடம் மாதம் 10.00 வெள்ளி வசூல் செய்து, அந்தப் பணத்தை மூலதனமாகக் கொண்டு தோட்டங்களை வாங்கினார்.

ஓரளவு தமிழர்கள் மறுவாழ்வு பெற்றனர்.

இன்று அந்தத் தோட்டங்கள் தான் பொருளாதாரத் துறையில் தமிழர்களின் தன்மானத்தை நிலை நிறுத்தும் சொத்தாக திகழ்ந்து வருகிறது.

காலப்போக்கில் மலேசியாவின் சுதந்திரக் காற்றை அனைவருமாக சுவாசிக்கும் வாய்ப்பு இயல்பாகவே ஏற்பட்டது.

சுதந்திர மலேசியாவின் கட்டமைப்புக்கு மலாய்காரர்கள் சீனர்கள் தமிழர்கள் என மூவினமும் இணைந்து பாடுபட்டுள்ளனர்.

மலேசியாவின் அடையாளமாகஎத்தனையோ சிறப்புக்கள் இருக்கலாம்.

ஆனால், நாங்கள் நிம்மதியாக வாழ்வதற்கான வரமாக அமைந்திருப்பது இங்கு நிலவும் நல்லிணக்கம் தான்.

மலேசியாவில் பல்லின மக்கள் வாழ்ந்தாலும் எங்களுக்கிடையே நிலவும் விட்டுக் கொடுக்கும் மனப்போக்கும் நல்லிணக்கமும் மிகப்பெரிய சொத்தாக திகழ்கிறது.

மூன்று இனமும் சேர்ந்துதான் சுதந்திர போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இன்றும் பல்லின மக்களும் சுதந்திரமாகவும் சுபிட்சமாகவும் வாழக்கூடிய மண்ணாக மலேசியா திகழ்கிறது என்பதில் மலேசியனாகப் பெருமை அடைகின்றேன்.
இராஜேந்திரன் பெருமாள் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்க முன்னாள் தலைவர்.






# 65 ஆண்டு கால சுதந்திர தின உணர்வுகள்



திருமதி.
**சந்திரா சூரியா.**
எழுத்தாளர், ஒலிபரப்பாளர். வானொலி/ தொலைக்காட்சி

பெண் குழந்தைகளுக்கு பதவியும் பட்டமும் ஏன் என்று கேள்வி எழுப்பிய ஒரு காலம் போய் இப்போது கல்வியிலும் பதவியிலும் இங்கு பெண்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கிறது. எங்களை விட பெண்கள்தான் அறிவாளிகளாகவும் பொருப்புள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்று பெருபாலான ஆண்களே ஒத்துக்கொள்கிறார்கள்.

பதினெட்டு வயதில் திருமணமாகி ஒரு விதமான அடிமை பந்தத்தில் இணையும் காலம் மாறி, இப்போது முப்பது, முப்பத்தைந்து வயது ஆகியும் திருமணம் செய்யும் எண்ணத்தை பரிசீலனை அளவில் வைத்திருக்கும் பெண்களைப் பார்த்து வியக்கத் தோன்றுகிறது. ஒரு காலத்தில் தலை குனிந்து சென்ற பெண்கள் இப்போது தலை நிமிர்ந்து கர்வத்துடன் நடக்கிறார்கள். காரணம் அவர்களுக்கு கிடைத்துள்ள உயர் கல்வி, நீ நீயாக இரு என்று சுதந்திர உணர்வுடன் அவர்கள் வளர்க்கப்பட்ட விதம்.

திருமணமானாலும் பெற்றோர்களை பிரிய வேண்டியய நிலையோ அவர்களுக்கான கடமைகளை மறைத்து செய்ய வேண்டிய நிலையும் குறைந்து வருகிறது.

ஆண் பெண் நட்பும் முன்பு போல் இல்லாமல் இயல்பாகிவிட்டது. நட்பு என்று வரும்போது ஆணோ பெண்ணோ அங்கு பாதுகாப்பு உணர்வுதான் மேலோங்கி நிற்கிறது.

எதற்கும், தயங்க வேண்டாம், பயப்பட வேண்டாம், தவித்து கலங்கி நிற்க வேண்டாம் என்ற நம்பிக்கை மனதில் ஏற்படும்போது யாராக இருந்தாலும் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம், எதுவரை வேண்டுமானாலும் செல்லலாம். இது பெண்களுக்கும் கிடைத்திருக்கும் சுதந்திரம். கேட்டு கேட்டு வாங்கிய சுதந்திரம், பார்த்து பார்த்து ரசித்து அனுபவித்த மாற்றங்கள், காலச்சூழலில், புதிய தலைமுறையினரிடையே சில பலவீனங்களை கொண்டு வந்திருந்தாலும், இதுவும் சுதந்திரம் தந்த மாற்றம்தான் , இதுவும் மாறும். மொழி, கலை கலாச்சாரத்தை மதித்து பாதுகாக்கும் பெண்கள் இந்நிலையை மாற்றுவார்கள்.

கிடைத்துள்ள சுதந்திரம், இந்த சக்தியை நம் பெண்களுக்கு வழங்கும்.

குடும்பம் எனக்கு என்ன செய்தது என்ற எதிர்பார்ப்பை நீக்கி நான் என் குடும்பத்திற்கு என்ன ச்ய்யப்போகிறேன் என்ற தேடலே நாளை, நாடு எனக்கு என்ன செய்தது, எனது நாட்டிற்கு நான் என்ன செய்ய போகிறேன் என்ற கடமை உணர்வில் கொண்டு வந்து நிறுத்தும்.

இயற்கை செல்வம் நிறைந்த இந்த மலையகம் ஒரு சொர்கபுரி என்று அழைக்கப் படுகிறது. தொடரும் இந்த சுதந்திரம் மேலும் அற்புதங்களை நடத்த வாழ்த்துவோம்.




# ஒற்றுமையும், புரிந்துணர்வும் நாட்டிற்கு மென்மேலும் சிறப்பு



நாச்சியா மஜீத் RTM
(வானொலி, தொலைக்காட்சி மலேசியா)
மூத்த ஒலிபரப்பாளர்/ தயாரிப்பாளர்/ செய்தி வாசிப்பாளர்

1957ம் ஆண்டு ஆகஸ்ட் 31ம் திகதி குவாலலும்பூரின் மையப்பகுதியில் அமைந்துள்ள சிலாங்கூர் கிளப் திடலில் சரியாக நள்ளிரவு 12 மணிக்கு பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட மலேசியாக் கொடி கம்பீரமாக ஏற்றப்பட்டது. அத்தருணத்தில் சுதந்திரத்தந்தை துங்கு அப்துல் ரகுமான் அவர்கள் மெர்டேக்கா (சுதந்திரம்) என உணர்ச்சி பொங்க ஏழுதடவை முழக்கமிட, அங்கிருந்த மக்கள் அதை கண்டு மகிழ்ச்சி பொங்க ஆரவாரத்துடன் விடுதலை விடுதலை என கோஷமிட்டதையும் யாரும் மறந்திருக்கமாட்டார்கள். இன்று 65 வது சுதந்திரத்தை கொண்டாடும் இத்தருணத்தில் தமிழருவி பத்திரிகையில் பேச வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சியே.

இந்த 65 ஆண்டுகளில் மலேசியா அரசியல், பொருளாதாரம் உட்பட சகல துறைகளிலும் அதீத வளர்ச்சியை கண்டுள்ளது. பல்லின சமுதாயத்தை கொண்ட நாடாகினும் கூட மக்களிடையே காணப்படும் ஒற்றுமையும், புரிந்துணர்வும் நாட்டிற்கு மென்மேலும் சிறப்பு சேர்க்கிறது.

மலேசியாவில் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு நாட்டின் அரசியல் நிலைத்திருப்புடன், பல்வேறான அபிவிருத்தி நடவடிக்கைகளும் அடிப்படையாக அமைந்துள்ளன.

இது தவிர கல்வி, மருத்துவம் போன்ற துறைகளும் பெரு வளர்ச்சி அடைந்துள்ளன. பல்லின கலாசாரத்தை கொண்டவர்களாயினும் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வருகிறோம். இந்த மனநிறைவு என்றும் நிலைத்திட வேண்டும். இத்தகைய சிறப்பான நாட்டில் வாழ்வதை எண்ணி பெருமையடைகிறேன். வாழ்க மலேசியா! வளர்க மலேசியா!



# இரட்டைமாடிக் கோபுரம் போன்று பல சிறப்புக்களையும் அபிவிருத்தியையும் கொண்டு விளங்குகிறது

இந்த 65 ஆண்டுகளில் மலேசியா அடைந்திருக்கும் வளர்ச்சியையும், மக்களது வாழ்க்கையில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் பார்க்கும் போது பெரும் ஆச்சரியமாக உள்ளது. மலேசியாவில் மலாய் மக்கள், சீனர்கள், இந்தியர்கள், இலங்கை தமிழர்கள் உள்ளடங்கலாக பல்லின, பல்கலாசார மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் அனைவருமே முன்னேற்றமடைந்த வண்ணமே உள்ளனர். அதே நேரத்தில் நாடும் அபிவிருத்தியடைந்த வண்ணமே உள்ளது. உலகளவில் பிரசித்தி பெற்ற இரட்டைமாடிக் கோபுரம் போன்று பல சிறப்புக்களையும் அபிவிருத்தியையும் கொண்டு விளங்குகிறது.

மலேசியா 65வது சுதந்திரதினத்தை கொண்டாட தயாராகவுள்ளது. அரசாங்கத்தை சேர்ந்த மலேசிய வானொலியில் அதிக காலம் பணியாற்றிய ரீதியில் நாட்டு மக்களுக்கு இவ்விடத்தில் சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.




மைதீ. அசன்கனி
மலேசிய வானொலி தொலைக்காட்சித் துறையில் மூத்த பணியாளர்

## சுதந்திரத்தின் சுவடுகள்

# மலேசிய மண் மறக்காத நிகழ்வுகளின் நிழல்கள்...



மலாயா சுதந்திர பிரகடன விழாவில் குளோசெஸ்டர் பிரபு,
யாங் டி-பெர்டுவான் அகோங் மற்றும் அப்துல் ரஹ்மான்



சுதந்திரப் பிரகடனம் வெளியிடப்பட்டபோது ஆகஸ்ட்
31, 1957 அன்று மெர்டேக்கா மைதானத்தில் 20,000 பேர் கூடியிருந்தனர்.



க்ளோசெஸ்டர் பிரபுவிடமிருந்து சுதந்திரத்திற்கான
பிரகடனத்தை பெற்றபோது..



மலேசிய முதலாவது பிரதமர்
அப்துல் ரஹ்மான் சுதந்திர தினத்தன்று



துங்கு அப்துல் ரஹ்மான் 'தேசத்தின் தந்தை'
பதக்கத்தைப் பெறுகிறார்.



யூனியன் ஜாக் கடைசியாக
கீழே இறக்கப்பட்ட பின்னர்
மலேசிய கொடியை
உயர்த்தியபோது...



சுதந்திர தின அணிவகுப்பின் போது மலாய்
படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள். அப்துல் ரஹ்மானை
ரியாதை அணிவகுப்பை ஏற்றுக்கொட்ட போது









மலேசியாவின் 65வது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஒருவாரகாலமாக இடம்பெற்ற ஒத்திகைகள்








வணக்கம் மலேசியா

# மலேசியா மீது அன்பைக்கொண்டிருப்பதன் மூலமாக மட்டுமே அமைதி, சுதந்திரத்தை பாதுகாக்க முடியும்

## தேசிய தின உரையில் பிரதமா சுட்டிக்காட்டு

மலேசியா மீது ஆழமான அன்பைக் கொண்டிருப்பதன் மூலம் மட்டுமே, பல்வேறு இன மக்கள் தொடர்ந்து ஒன்றிணைந்து, நாட்டின் அமைதி மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியும் என பிரதமர் Datuk Seri Ismail Sabri Yaakob கூறினார்.

மலேசிய தேசிய தினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு தொலைக்காட்சி மூலமாக நாட்டு மக்களுக்கு நேற்றிரவு நிகழ்த்திய உரையிலேயே மலேசிய பிரதமர் இவ்வாறு



கூறினார். நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இது முக்கிய கூறாக அமைந்துள்ளதை அவர் சுட்டிக் காட்டினார். சுதந்திரத்தின் பலன்கள், ரத்தம், வியர்வை மற்றும் கண்ணீரால் அடையப்பட்டது என்பதை மலேசியர்களுக்கு பிரதமர் இந்த உரையின்போது நினைவூட்டினார்.

மலேசியக் குடும்பத்துக்கு 65ஆம் தேசிய நாள் வாழ்த்தினைப் பிரதமர் தெரிவித்துக்கொண்டார்.

## சாகசம் புரிந்த இளைஞன் கைது



மலேசியாவின் விரைவுச்சாலையில் மோட்டார் சைக்கிளில் சாகசம் புரிந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிள் மீது சூப்பர்மேன் போல் படுத்துகொண்டு வாகனத்தை ஓட்டியதற்காக அவரை கைது செய்துள்ளனர்.

விரைவுச்சாலையில் ஒரு ஓரத்தில் மோட்டார் சைக்கிள் மீது உல்லாசமாக சாய்ந்து கொண்டு வாகனத்தை நபர் ஓட்டும் காட்சி காணொளியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மலேசிய சமூக ஊடகத்தளங்களில் பரவலாக பகிர்ந்துகொள்ளப்பட்டு வருகிறது.

21 வினாடி நீளமான காணொளியில் நபர் ஒரு ஹொண்டா இஎக்ஸ்5 ரக மோட்டார் சைக்கிளை ஓட்டுகிறார். ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிய அவர் தன்னை அதிகாரிகள் பின்தொடர்வதைகூட கவனிக்கவில்லை. அதிகாரிகள் தன்னை துரத்துவதை உணரும் போதுதான் அவர் எழுந்து அந்த மோட்டார் சைக்கிளில் முறையாக அமர்கிறார். வாகனத்தின் வேக அளவை கூட்டி, அங்கிருந்து அவர் தப்பிக்க முயன்றார். சிறிது தூரத்தில் அதிகாரிகள் அவரை பிடித்தனர்.

ஒரு வேளை வெகுநேரம் உட்கார்ந்து மோட்டார் சைக்கிளை ஓட்டியதால் இளையருக்கு முதுகில் வலி ஏற்பட்டிருக்கும். அதனால் படுத்துகொண்டு வாகனத்தை ஓட்டியிருக்கக்கூடும் என்று இச்சம்பவம் குறித்து ஒருசிலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

## இன்றைய சுதந்திர தின கோண்டாட்டங்களில் மக்களை கவரப்போகும் அலங்கரிக்கப்பட்ட கார்கள்

இன்று கொண்டாடப்படும் தேசிய தினத்தில் அலங்கரிக்கப்பட்ட கார்களில், உள்நாட்டின், பிரபலமான 26 கேலி சித்திர கதாபாத்திரங்களின் உருவ பொம்மைகளின் அணிவகுப்பு , வருகையாளர்களின் கவனத்தை ஈர்க்குமென தொடர்பு பல்லூடக அமைச்சின் தலைமைச் செயலாளர் முகமத் மென்ரெக் தெரிவித்தார்.

அதுமட்டுமின்றி வருகையளிக்கும் மலேசிய குடும்பத்தினருக்காக, இராணுவ மற்றும் போலீஸ் படையினரின் பிரமிக்க வைக்கும் சாகசங்-களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, அவர் கூறினார். அதேவேளை, 17 ஆண்டுகளுக்குப் பின்னர், குதிரைகளின் அணிவகுப்பும் நடைபெறும்.

மெர்டேக்கா சதுக்கத்தில் பேரியளவில் தேசிய நாள் அணிவகுப்பும் கொண்டாட்டமும் இடம்பெற-விருக்கின்றன. மக்களுக்கு பல்வேறு வகையில் இது நன்மையைக் கொண்டு-வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதோடு, சிறு- நடுத்தர வணிகர்கள், கூடுதல் வருமானம் ஈட்டவும் இது வழிவகுக்கும் என தொடர்பு -பல்லூடக அமைச்சின் தலைமைச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்க ஒதுக்கீட்டில் நடத்தப்-படும் தேசிய நாள் கொண்டாட்டம், பொருளாதார ரீதியில் பல தரப்புகளுக்கு பயனை ஏற்படுத்துவதை, அவர் சுட்டிகாட்டினார். Selamat Pagi Malaysia நிகழச்சியில் பங்கேற்ற போதே அவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

# நஜிப்பை மன்னித்து விடுதலை செய்யுங்கள்!

## மலேசிய மன்னர் மாளிகை முன் ஆர்ப்பாட்டம்

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் மலேசிய பிரதமா' அகமது ஷா நஜிப்பை மலேசிய மன்னர் சுல்தான் அப்துல் சுல்தான்மன்னித்து விடுவிக்கவேண்டும் என்று அவரது ஆதரவாளா்கள் கேட்டுக்கொண்டனர். மலேசிய மன்னரின் மாளிகை முன்பாக இதற்காக அவா்கள் ஆர்ப்பாட்டமும் செய்துள்ளார்கள்.



மலேசியாவின் முன்னாள் பிரதமர் நஜிப் ரஸாக் சிறையிலிருந்து விடுதலை பெற அந்நாட்டு மன்னர் அவரை மன்னித்து விடுவித்தால் மட்டுமே முடியும் என்று நம்பப்படுகிறது. 1எம்டிபி விவகாரத்தில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு தற்போது சிறையில் உள்ள நஜிப்பின் கடைசி முயற்சி மலேசிய மன்னரின் மன்னிப்பை பெறுவதாகும். நஜிப்பின் ஆதரவாளர்கள் 300 பேர் கடந்த புதன்கிழமை அன்று மன்னர் மாளிகைக்கு வெளியே திரண்டனர். தண்டனை அளித்த நீதிபதிகளுக்கு கடமைக்கும் சொந்த நலனுக்கும் இடையே முரண்பாடு இருந்ததாக அவர்கள் குற்றஞ்சாட்டினர். இதனால் மன்னர் சுல்தான் அப்துல் சுல்தான் அகமது ஷா நஜிப்பை மன்னித்து விடுவிக்கவேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டனர். இந்நிலையில், மன்னர் நஜிப்புக்கு மன்னிப்பு வழங்கக்கூடாது என்று கோரி நஜிப் எதிர்ப்பாளர்கள் இணையத்தில் மனு சமர்ப்பித்துள்ளனர். இதுவரை 100,000க்கும் மேற்பட்டவர்கள் இதில் கையெழுத்திட்டுள்ளனர். இந்த விவகாரத்தில், மன்னர் ஒரு சரியான முடிவை எடுப்பது முக்கியம் என்று அரசியல் கவனிப்பாளர்கள் கருத்துரைத்தனர். நஜிப்பை மன்னித்து விடுவித்தால் பெரும்பாலான மலேசியர்கள் சினமடையக் கூடும் என நம்பப்படுகிறது.

உலகின் ஆக மோசமான நிதி மோசடிகளில் ஒன்றான 1எம்டிபி விவகாரத்தில் நஜிப்பை மன்னர் மன்னிப்பது சற்று சிரமம்தான் என்பது அரசியல் கவனிப்பாளர்களின் கருத்தாக இருக்கிறது.

# தந்தையர்களுக்குள்ள அதே உரிமை தாய்மார்களுக்கும் தர வேண்டும்!

## நீதிமன்றத்தில் மேன்முறையீடு

வெளிநாட்டில் பிறந்த குழந்தைகளுக்குக் குடியுரிமை வழங்குவதில் மலேசிய தந்தையர்களுக்கு உள்ள அதே உரிமையை மலேசிய தாய்மார்களுக்கும் வழங்க வேண்டும் என்று கோரி 'குடும்பமே முன்னிலை' (Family Frontiers) என்ற குழு மற்றும் ஆறு மலேசிய தாய்மார்கள் நேற்று முன் தினம் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர்.



மலேசிய தந்தையர்களைப் போலவே மலேசியத் தாய்மார்களும் வெளிநாடுகளில் பிறந்த குழந்தைகளுக்குக் குடியுரிமை வழங்கலாம் என்ற கோலாலம்பூர் உயர் நீதிமன்றத்தின் 2021 தீர்ப்பை ரத்து செய்வதற்கான அரசாங்கத்தின் மேல்முறையீட்டை அனுமதிக்க ஆகஸ்ட் 5 ஆம் தேதி மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்தது. இன்று ஒரு அறிக்கையில், அந்த குழு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகு, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யத் தங்களுக்கு 30 நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டதாகவும், அந்த நேரத்தில், அரசியலமைப்பு திருத்தம்மூலம் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்க பல்வேறு அமைச்சர்களைச் சந்தித்ததாகவும் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் ஒரு அரசியலமைப்பு திருத்தம் தாக்கல் செய்யப்பட்டால் பெண்களுக்குச் சமமான மலேசிய குடியுரிமை உரிமைகளை ஆதரிப்பதாகச் சட்டமியற்றுபவர்கள் பகிரங்கமாக உறுதியளித்த போதிலும், இது நடப்பதற்கான ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவின் எந்த அறிகுறியும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது.

பிரதமர் துறையின் (நாடாளுமன்றம் மற்றும் சட்டம்) அமைச்சர் வான் ஜுனைடி துவான்கு ஜாஃபர், எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன்பு இந்த விஷயத்தில் உச்ச நீதிமன்றத்தின் முடிவுக்காக அரசாங்கம் காத்திருக்கும் என்று முன்பு கூறியிருந்தார்.

குடும்பமே முன்முனிலை குழுத் தலைவர் சூரியனி கெம்பே, மலேசியப் பெண்களுக்கான குடியுரிமை உரிமைகளில் பாலினப் பாகுபாட்டை நீக்குவதற்கு மத்திய அரசியலமைப்பை திருத்துவதற்கான அரசியல் விருப்பம் இல்லாததால், பாதிக்கப்பட்ட மலேசிய தாய்மார்கள் மற்றும் அவர்களின் வெளிநாட்டில் பிறந்த குழந்தைகளின் போராட்டங்கள் தொடரும், மேலும் நாங்கள் காலவரையின்றி காத்திருக்க முடியாது, என்று குழுவின் தலைவர் சூரியனி கெம்பே கூறினார். எனவே, கூட்டாட்சி அரசியலமைப்பை 21 ஆம் நூற்றாண்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் அதன் மக்கள்தொகையில் பாதியினரின் உரிமைகளை நிலைநிறுத்தவும், பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை (Cedaw) மற்றும் குழந்தைகளின் உரிமைகள்குறித்த உடன்படிக்கை (Convention on the Rights of the Child)ஆகியவற்றிற்கு இணங்குவதற்கான அவர்களின் கடமைகளை மதிக்கவும் குடும்ப எல்லைப்புறங்கள் அரசாங்கத்தை வலியுறுத்தின.

கடந்த ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதி, மலேசிய தாய்மார்கள் மற்றும் வெளிநாட்டு தந்தைகளுக்கு வெளிநாட்டில் பிறந்த குழந்தைகள் தானாகவே மலேசிய குடியுரிமைக்கு தகுதியுடையவர்கள் என்று உயர்நீதிமன்றம் அறிவித்தது. ஆறு மலேசிய தாய்மார்கள் மற்றும் இந்த குழு டிசம்பர் 18, 2020 அன்று உயர் நீதிமன்றத்தில் தங்கள் குடிமுறைக்குரிய நடவடிக்கையைத் தாக்கல் செய்தன.

# 608 இடங்களில் வேள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய ஆபத்து

## எதிர்கோள்ள பணியாளர்கள் தயார் நிலையில்

எதிர்வரும் நவம்பர் முதல் அடுத்த மார்ச் வரை பெய்யும் வடகிழக்கு பருவமழை காலத்தில் மலேசியா சபாவில் 608 இடங்களில் வெள்ளப் பேரிடர் அபாயத்தில் இருப்பதாக சபா பேரிடர் மேலாண்மைக் குழு கண்டறிந்துள்ளது.

சபா மாநில அரசு செயலர், டத்தோ சஃபர் உண்டோங் கூறுகையில், முதற்கட்டமாக, வெள்ள பேரிடரை எதிர்கொள்ள பணியாளர்கள் மற்றும் மீட்பு இயந்திரங்கள் உட்பட பல்வேறு அம்சங்களை குழு தயார்படுத்தியுள்ளது.

இந்த மழைக்காலத்திற்காக, பாதிக்கப்பட்டவர்களை வெளியேற்றுவதற்கும், சாலை வழியாக அணுக கடினமாக உள்ள பகுதிகளில் உதவிகளை வழங்குவதற்கும் வசதியாக 75 ஹெலிகாப்டர்தரையிறங்கும் இடங்களையும் குழு தேர்வு செய்துள்ளது என்றார்.

8,432 அதிகாரிகள் மற்றும் பல்வேறு ஏஜென்சிகளின் உறுப்பினர்களுடன் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள மாநில அரசு தயாராக உள்ளது என்றும் அவர் கூறினார்.

மாவட்ட பேரிடர் மேலாண்மைக் குழுவின் தலைவர் என்ற முறையில் அனைத்து மாவட்ட அலுவலர்களும் தயாராக இருக்க வேண்டும் என்றும், எந்த நேரத்திலும் அனைத்து மாவட்டங்களிலும் பேரிடர் செயல்பாட்டு அறையை செயல்படுத்த வேண்டி வரும் என்றும் மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது, என்று அவர் நேற்று வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நேற்று, மாநிலத்தில் வடகிழக்கு பருவமழைக்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்க சபா மாநில பேரிடர் மேலாண்மை குழு மூலம் மாநில அரசு கூட்டம் நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.


Cinestar Metropolis Frankfurt
03.09.2022 17:00
04.09.2022 14:00
Tickets:
017631236993
Cinestar Dortmund
02.09.2022 23:00
03.09.2022 23:00
Tickets:
0162 7791507 | 0151 44363369
017656806226
Cinestar Fulda
04.09.2022 14:00
Tickets: www.cinestar.de
Cinestar Chemnitz
04.09.2022 14:00
Tickets: www.cinestar.de
Cinestar Magdeburg
04.09.2022 14:00
Tickets: www.cinestar.de
Cinestar Neubrandenburg
04.09.2022 14:00
Tickets: www.cinestar.de
Cinestar Cubix Berlin
03.09.2022 13:30
Tickets:
01516 8541224 | 017656806226
UFA PALAST Düsseldorf (PREMIERE)
31.08.2022 20:15 | 02.09.2022 20:15
03.09.2022 20:15 | 04.09.2022 11:00
Tickets:
0176 22723916
01514 4363369
017656806226
UT KINO Saarbrücken
04.09.2022 14:30
Tickets: www.saarfilm.de
017656806226
Savoy Filmtheater Hamburg
31.08.22 16:30 | 04.09.22 15:30
Tickets :www avoy.premiumkino.de/
Metro Kino Kiel
02.09 19:00 04.09 14:00
Tickets: www.metrokino-kiel.de
ZINEFLIX & TAMIL.DE
Presents
Zineflix
THE HOME OF MOVIES
COBRA MOVIE
IN GERMANY
Tamil Movie
with English subtitles
tamil.de
FILMVERLEIH
COBRA
Cineplex Leipzig
03.09.2022 | 04.09.2022
Tickets: www.cineplex.com
Cineplex Kassel
03.09.2022 20:00 | 04.09.2022 17:00
Zentralkino Dresden
03.09.2022 15:00 | 04.09.2022 13:30
Tickets: www.zentralkino.de
Lichtspieltheater Rostock
04.09.2022 16:00
Tickets: www.liwu.de
Haus Zoar Mönchengladbach
02.09.2022 | 03.09.2022
04.09.2022
Tickets:www.hauszoar.de
Euromax Kerpen (Köln) (PREMIERE)
Premiere 31.08.2022
04.09.2022
Tickets: www.euromax-cinemas.de
Delphi Kino Stuttgart
03.09.2022 22:45
Tickets: 0172 1048939
Karlsruhe Universum City Kino
04.09.2022 11:00
Tickets: 0172 1048939
Heilbronn Scala Kino
04.09.2022 17:00
Tickets: 0172 1048939
Capitol Kornwestheim Theater
31.08.2022 20:30 | 01.09.2022 20:30
02.09.2022 20:30 | 04.09.2022 18.00
Tickets: www.capitol-kornwestheim.de
Odeon Apollo Kino Koblenz
Showtimes coming soon
Tickets: www.odeon-apollo-kino.de
Cinemaxx Bielefeld
Freitag, 02.09.22 - 21:00
Samstag, 03.09.22 - 22:30
Tickets
0176 63672280 | 0151 68831537
Cinemaxx Hamm
Samstag, 03.09.22 - 21 Uhr
Sonntag, 04.09.22 - 14 Uhr
Neues Rottmann München
03.09.2022 12:00
04.09.2022 13:00
Tickets: www.neuesrottmann.de
Lux Kino Frankenthal
04.09.22 14:30
01703641515
Chiyan Vikram | Srinidhi Shetty | Robo Shankar | Music : A.R. Rahman | Irfan Pathan | Direction: Ajay Gnanamuthu (Immaika Nodigel)
For Further Details Please contact 017656806226